Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

Admission open
No Prior Qualifications
உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உயர் வேலைவாய்ப்பு உத்தரவாதம்
BIT-Degree University of Colombo
20000 Rs only 1st Year
CIMA-UK
14000 Rs. only founation level Course fee
Computer Engineering - USA
Government Scholorship USA, UK பல்கலைக்கழகங்களில் Master Degree
Free :BCS-UK, IELTS, Hardware, ICDL
(C/1284) MCS
Supported By UNDP/JRRP
SMS your name & course to 772 395 895 & Get Schol.
324,Palaly Road,Parameswara Junction

முரசு – 02 திருவள்ளுவர் ஆண்டு 2042 மாசி 16 செவ்வாய்க்கிழமை (28.02.2012) பக்கங்கள் 16 ஓசை – 150













# கூட்டமைப்பு எடுத்திருக்கும் தீர்மானம் நல்லெண்ண முயற்சியாக கருதவேண்டும்

## அமைச்சர் டக்ளஸ் வரவேற்பு



ஜெனிவாவில் நடைபெற்றுவரும் மனித உரிமைகள் பேரவையின் 19 ஆவது கூட்டத் தொடர் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எடுத்திருக்கும் தீர்மானம் ஒரு நல்லெண்ண முயற்சியாகவே கருதப்பட வேண்டுமென்றும் இது போன்ற தீர்மானங்களை தொடர்ந்து வரப்போகும் சந்தர்ப்பங்களிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் எடுப்பார்களேயானால் தமிழ்பேசும் மக்களின் அரசியலுரிமை பிரச்சினைக்குத் தீர்வு காணும்முயற்சிகள் இன்னமும் சுலபமாகி விடும் என்றும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் தமிழ் பேசும் மக்கள் கௌரவமாகவும் ஐக்கிய இலங்கைக்குள் அரசியலுரிமை பெற்ற சுதந்திர பிரஜைகளாகவும் வாழவுமே விரும்புகின்றார்கள். இந்த நியாயமான விருப்பங்களை நிறைவேற்றவேண்டிய கடமை. அனைத்து தமிழ் தலைமைகளுக்கும் உண்டு. கடந்த காலங்களில் எமது மக்கள் சந்தித்து வந்த துயர்களுக்கும், அழிவுகள் மற்றும் அவலங்களுக்கும் ஈடாக எமது மக்களை தொடர்ந்தும் நிம்மதியாகவும் கௌரவமாகவும் வாழவைப்பதே அனைத்து தமிழ் தலைமைகளினதும் இலக்காக இருக்கவேண்டும். இதற்கு மாறாக அரசாங்கத்துடன் அர்த்தமற்ற பகைமையுணர்வை வளர்த்து அரசியலுரிமை பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகளை மேலும் சிக்கலாக்கும் பொறுப்பற்ற செயலாக இருந்துவிட முடியாது. ஆகவே இவைகள் குறித்து இனிவரும் காலங்களிலாவது அனைத்து தமிழ் தலைமைகளும் யதார்த்த பூர்வமான தீர்மானங்களை எடுப்பார்களேயானால் தமிழ்பேசும் மக்கள் அடைந்து வந்த துயர்களுக்கு தமிழ் தலைமைகளும்தான் (15 ஆம் பக்கம் பார்க்க)

# பரபரப்பான சூழ்நிலையில் ஜெனிவா மாநாடு ஆரம்பம்

(ஜெனிவா)

மிகவும் பரபரப்பாகியுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 19 ஆவது கூட்டத்தொடர் சுவிற்சர்லாந்து தலைநகர் ஜெனிவாவில் நேற்றைய தினம் ஆரம்பமானது. நேற்றுக்காலை 10.30 மணிக்கு மனித உரிமை பேரவையின் கூட்டத் தொடரை ஆரம்பித்துவைத்து உரையாற்றிய மனித உரிமை ஆணையாளர், மனித உரிமை பேரவையின் பரிந்துரைகளை உறுப்பு நாடுகள் செயற்படுத்துவதனை உறுதிப்படுத்தும் கட்டமைப்பு அவசியம் எனத் தெரிவித்தார்.

அவர் தனதுரையில் இலங்கை தொடர்பாக எவ்வித கருத்துக்களையும் தெரிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இவருக்குப் பின்னர் இடம்பெற்ற பிரமுகர்களுக்கான உரையில், நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை உடன் அமுல்படுத்த இலங்கை அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என பிரிட்டனின் (15 ஆம் பக்கம் பார்க்க)

# ஆணைக்குழு பரிந்துரைகளை நிறைவேற்ற பிரேரணை முன்வைப்பது அவசியமற்றது

## ஜெனிவா மாநாட்டில் அமைச்சர் மகிந்த சமரசிங்க

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழு பரிந்துரைகளை செயற்படுத்துமாறு கோருவதற்கு பிரேரணை ஒன்று அவசியம் இல்லை என அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்தார்.

காரணம் பரிந்துரைகள் ஏற்கனவே செயற்படுத்தப்பட்டு வருவதாக அமைச்சர் சுட்டிக் காட்டியுள்ளார். ஜெனிவா மனித உரிமை கவுன்ஸிலில் 19 ஆவது



கூட்டத்தொடரில் உரையாற்றிய அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழு (15 ஆம் பக்கம் பார்க்க)


# ஆணைக்குழுவின பரிந்துரைகளை உடனடியாக அமுல்படுத்த வேண்டும்

## பிரிட்டன் வெளியுறவு அமைச்சர் வலியுறுத்து

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் அறிக்கைகளை உடனடியாக அமுல்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பிரித்தானிய வெளிவிவகார மற்றும் பொதுநலவாய அமைச்சர் ஜெர்மி பிறவுன் தெரிவித்துள்ளார். ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் 19 ஆம் அமர்வுகளில் கலந்துகொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். மனித உரிமைகளை மேமபடுத்தத் தவறும் நாடுகள் தொடரபில் ஐக்கிய நாடுகளின் முகவர் நிறுவனங்கள் கூடுதல் கவனம் செலுத்த வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். மனித உரிமை நிலைமைகளை மேம்படுத்துவதற்கு ஐக்கிய நாடுகள் அமைப்பு கூடுதல் ஒத்துழைப்பு வழங்கவேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை அரசாங்கம் சந்தர்ப்பங்களை சரியான முறையில் பயன்படுத்தி உரியமுறையில் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்தும் என எதிர்பாரப்பதாக அவர் தெரிவித்துள்ளார்

# ஜெனிவா செல்வதில்லை என்பது எனது தனிப்பட்ட முடிவு அல்ல



ஜெனிவாவில் ஆரம்பமாகியுள்ள ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத்தொடரில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கலந்துகொள்வதில்லை என எடுக்கப்பட்ட முடிவு தனது தனிப்பட்ட முடிவல்ல என அக்கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

ஜெனிவா மாநாட்டில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங்கேற்காது என சம்பந்தன் வெளியிட்டிருந்த அறிக்கை தொடர்பில் பல்வேறு குற்றச்சாட்டுக்களும், விமர்சனங்களும் தற்போது கட்சிக்குள்ளிருந்தும் கட்சிக்கு வெளியில இருந்தும் முன்வைக்கப்பட்டுள்ளன. இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராக இடம்பெற்ற அநீதிகளுக்கு சர்வதேசத்தின் (15 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கைக்கு எதிரான ஜெனிவா தீர்மானம் கண்டித்து யாழ். நகரில் ஆர்ப்பாட்டம்



ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் மேற்கொள்ளப்படவிருக்கும் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தைக் கண்டித்து நேற்று யாழ். நகரில் மாபெரும் ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்றது. முனியப்பர் கோவில் வளாகத்தில் காலை 10.00 மணிக்கு ஆரம்பமாகிய இந்த ஆர்ப்பாட்டத்தில் ஆயிரக் கணக்கானோர் கலந்துகொண்டனர். இந்த ஆர்ப்பாட்டத்தின்போது ஐ.நா. மனித உரிமை பேரவைக்கு எதிராக பல கோஷங்களை எழுப்பியவாறு தமது எதிர்ப்பை தெரிவிக்கும் வகையில் ஆயிரக்கணக்கானோர் ஆர்ப்பாட்டம் நடத்தினர். எங்களை உணவின்றி பட்டினி போடாதே, அரசாங்கத்திற்கு எதிராக வன்முறையைத் (15 ஆம் பக்கம் பார்க்க)

# யுத்தக்குற்றச் செயல் விசாரணை வேண்டும்

## அயர்லாந்து பிரதமர்

(ஜெனிவா)

இலங்கையில் இடம்பெற்ற யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டுமென அயர்லாந்து பிரதமர் மேரி ரொபின்சன் கோரியுள்ளார். யுத்தக் குற்றச செயல்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் அமைப்புவிசாரணை நடத்த வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். மனிதத்திற்கு எதிராக இரண்டு தரப்பினரும் மேற்கொண்ட குற்றச் செயல்களை வெறுமனே உதாசீனம் செய்ய முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார். குற்றச் செயல்களுக்கு தண்



டனை விதித்தல் மற்றும் நல்லிணககம் ஏற்படுத்தும் இலங்கையின் முயற்சிகளுக்கு ஐக்கிய (15 ஆம் பக்கம் பார்க்க)

# எமது அணுகுமுறைக்கே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வந்துள்ளது

### ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார்



(கிளிநொச்சி)

இன்றைய யதார்த்தத்தையும் சூழ்நிலையினையும் புரிந்து கொண்டும் நாட்டின் நலனை கருத்தில் எடுத்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எமது அணுகுமுறைக்கே வந்துள்ளமை மகிழ்ச்சியளிப்பதோடு வரவேற்கத்தக்கதுமாகும் என ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

நேற்று கிளிநொச்சியில் இலங்கை மீது இருக்கும் வெளி அழுத்தங்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்ட ஊர்வலத்தின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் முப்பது ஆண்டு காலமாக நீடித்த போரும் இன முரண்பாடுகளும் துயரந் தோய்ந்த நிகழ்ச்சிகளின் பின்னே இப்பொழுது சற்றுத் தணிந்த நிலைக்கு வந்துள்ளன. இன முரண்பாட்டினாலும் போர்ச் சூழலினாலும் அல்லலுற்ற நாம் போர் முடிந்த பின்னர் உருவாகியிருக்கும் தற்போதைய சூழலில் மெல்ல மெல்ல இயல்பு நிலைக்குத் திரும்பிக் கொண்டிருக்கிறோம்.

தினமும் சாவுகளின் மத்தியில் உத்தரவாதங்களற்ற நிலையில் வாழ்ந்து கொண்டிருந்த நாம் இப்பொழுதே நிம்மதிப் பெருமூச்சு விடக்கூடியதாக உள்ளது. நீண்ட அலைச்சல்களுக்குப் பின்னர் தற்போதே நாங்கள் எங்களின் சொந்த இடங்களுக்குத் திரும்பி புதியதொரு வாழ்க்கையை ஆரம்பித்துக் கொண்டிருக்கிறோம்.

இலங்கையின் வரலாற்றையும் அதன் உளநிலையையும் அவதானத்திற் கொள்வோர் நிச்சயமாக பகை மறப்புக்கான ஒரு சூழலின் உருவாக்கத்தைப் பற்றியே சிந்திப்பர். அவ்வாறான ஒரு யதார்த்த நிலைமையே மெல்ல மெல்ல இன்று உருவாகி வருகிறது. அரசியல் முரண்பாடுகளுக்கு அப்பால் கடந்த காலத்தின் பட்டறிவின் அடிப்படையில் இலங்கைச் சமூகங்கள் அமைதியை நோக்கிய பாதையைத் தேர்வு செய்யும் மனநிலைக்கு வந்துள்ளன. இத்தகைய ஒரு மனநிலை கடந்த நூற்றாண்டில் மேற்குலகில் முதலாம் இரண்டாம் போர்கள் ஏற்படுத்திய அனுபவங்களின் பின்னர் உருவாகியிருந்தது. ஆகவே அத்தகைய ஒரு நிலைமை இன்று இலங்கையிலும் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் கடந்த போர் காலத்தில் நடந்த சம்பவங்கள் குறித்த நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை அரசாங்கம் கவனத்திற் கொள்வதாகத் தெரிவித்திருக்கும் சூழலை மேலும் கவனப்படுத்துவதை நாம் வரவேற்கிறோம். அதேவேளை போர்க்காலச் சம்பவங்களின் பேராலான வெளியுலகத்தின் அணுகுமுறைகள் நிச்சயமாக இலங்கையில் தமிழ் சிங்களச் சமூகங்களிடையே எதிர்நிலை அம்சங்களையே உருவாக்கும்.

தூரத்து தண்ணி ஆபத்திற்கு உதவாது எனவே நாங்கள் இலங்கை தீவினுள் எமது மக்களின் வாழ்வைப் பாதுகாக்கக் கூடிய தீர்வை பெறுவதற்கான முயற்சியினை எடுக்கவேண்டும் இதற்கு தென்பகுதி மக்களின் மனங்களை வென்றெடுக்க வேண்டும். இந்த நிலைமையினை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் நன்றாக உணர்ந்துள்ளது அவர்களுயை இந்த முடிவை நாம் வரவேற்கின்றோம் என்றார்.

இந்நிகழ்வில் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் மாவட்ட அமைப்பாளர் தவநாதன், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மாவட்ட அமைப்பாளர் கீதாஞ்சலி மற்றும் மக்கள் அமைப்பு பிரதிநிதிகள் உள்ளிட்ட பெரும் திரளான மக்கள் கலந்து கொண்டனர்.

# இறுவட்டு வெளியீடு




(யாழ்ப்பாணம்)

உசன் கந்தசுவாமி கோவில் இசைப் பாடல்கள் அடங்கிய 'ஸ்கந்த கானங்கள்' இறுவட்டு நேற்று ஆலய முன்றலில் குக ஸ்ரீ இரத்தின கேதீஸ்வரக் குருக்களினால் வெளியிட்டு வைக்கப் பட்டது.

இவ் இறுவட்டுக் கான பாடல்களை கவிஞர் கு.வீராவும், பின்னணி இசையினை இசைப்பிரியனும் வழங்கியுள்ளதோடு, யாழ். முன்னணிக் கலைஞர்கள் பலரும் பாடல்களைப் பாடியுள்ளனர். (26)


# இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். முத்துத்தம்பி வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி இன்று பி.ப. 1.30 மணிக்கு பாடசாலை அதிபர் தி.சத்தியபாலன் தலைமையில் பாடசாலை மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்), சிறப்பு விருந்தினர்களாக ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்), ஈ.பி.டி.பியின் நல்லூர் பிரதேச அமைப்பாளரும் பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவருமான அ.இரவீந்திரதாசன், கௌரவ விருந்தினர்களாக யாழ். கல்வி வலய உடற்கல்வி ஆலோசகர் ந.ஸ்ரீமுருகதாஸ்காந்தன், திருநெல்வேலி கொமர்ஷல் வங்கி முகாமையாளர் சி.ராஜமனோகரன், திருநெல்வேலி பிரதேச படை முகாம் பொறுப்பதிகாரி லெப்ரினன் பி.எச்.எஸ்.பி.நவரெத்தின சீலபகா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (

# உற்பத்தித் திறன் மேம்பாடு பிரதேச செயலர்களுக்கு பயிற்சி



(யாழ்ப்பாணம்)

உற்பத்தித் திறன் மேம்படுத்தும் முகமாக யாழ். மாவட்ட பிரதேச செயலர்களுக்கான பயிற்சிப் பட்டறை ஒன்று நேற்று நடைபெற்றது.

யாழ். மாவட்ட செயலகத்தில் காலை 8.30 மணிக்கு யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தலைமையில் நடைபெற்ற இப்பயிற்சிப் பட்டறையில் உற்பத்தித் திறன் மேம்பாட்டு அமைச்சின் செயலாளர் லலித் கன்னங்கர விளக்கப் பயிற்சி அளித்தார்.

வடபகுதி விவசாயத் திட்டத்தில் வீட்டுத் தோட்டம், பழச் செய்கை உற்பத்தி, பனை வளம், தென்னை வளங்களை உற்பத்தி செய்து பொருளாதாரத்தில் எவ்வாறு முன்னேற்றம் அடைவது என்பது தொடர்பாக இப்பயிற்சிப் பட்டறையில் விளக்கமளிக்கப் பட்டது.

வடபகுதியில் தற்போது இலை வகைகள் மற்றும் முருங்கைக் காய் போன்ற மரக்கறி வகைகள் சந்தைப்படுத்தலில் அதிகளவான வரவேற்பைப் பெற்றுள்ளதுடன், அதிகளவான பொருளாதாரத்தை பெறக்கூடியதாகவும் இருக்கின்றது.

எனவே வீட்டுத் தோட்டம், பழச் செய்கை போன்ற பயிர்களை மேம்படுத்துவது தொடர்பான அறிவினை மக்களுக்குத் தெரியப்படுத்தும் நோக்கத்துடனேயே பிரதேச செயலர்களுக்கு இப்பயிற்சி வழங்கப்பட்டது.

இப்பயிற்சிப் பட்டறையில் உற்பத்தித் திறன் மேம்பாட்டு செயலக பிரதிப் பணிப்பாளர் அரஸ்க குணரட்ண, உற்பத்தித் திறன் மேம்பாட்டு செயலக உதவிப் பணிப்பாளர் அகில சுபசிங்க உட்பட யாழ். மாவட்டத்தில் 15 பிரதேச செயலக பிரதேச செயலர்களும் உற்பத்தித் திறன் அலவலர்களும் கலந்துகொண்டனர். (எஸ்)

# மீனவர்களுக்கு எரிபொருள் மானியம் யாழில் அடுத்த மாதம் முதல் கிடைக்கும்

### கடற்றொழில் திணைக்களம் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கடற்றொழிலாளர்களுக்கான எரிபொருள் மானிய முத்திரைகள் யாழ். கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்திற்கு வந்துசேர்ந்துள்ளதாக யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களப் பணிப்பாளர் இ.ரவீந்திரன் தெரிவித்துள்ளார்.

இவ்எரிபொருள் மானிய முத்திரைகள் எதிர்வரும் மார்ச் மாதம் முதல் யாழ். மாவட்ட கடற்றொழிலாளர்களுக்கு விநியோகிக்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

யாழ். நகருக்கு அண்மையாக கடற்றொழிலில் ஈடுபடும் கடற்றொழிலாளர்களுக்கு யாழ். பொலிஸ் நிலையத்திற்கு அருகிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கும் வடமராட்சிக்கு பருத்தித்துறையில் பருத்தித்துறை ப.நோ.கூ.சங்க எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கும் வலி.மேற்குப் பகுதிக்கு பண்டத்தரிப்பில் பண்டத்தரிப்பு ப.நோ.கூ.சங்க எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கும் தீவகத்திற்கு வேலணையில் வங்களாவடி சந்தியில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கும் இவ் மானிய விலையில் எரிபொருள் வழங்குவதற்கு அனுமதிக்கப்பட்டிருப்பதாக இ.ரவீந்திரன் தெரிவித்தார்.

மேலும் பலநாட் கலங்களைப் பயன்படுத்துவோருக்கு டீசலுக்கு மாதமொன்று 30000 ரூபாவும், ஒருநாள் கலம் பயன்படுத்துவோருக்கு 18000 ரூபாவும், பிளாஸ்ரிக் போட் மற்றும் கட்டு மரங்களில் வெளியிணைப்பு இயந்திரம் பொருத்தி பயன்படுத்துவோருக்கு (மண்ணெண்ணெய்) 6250 ரூபாவும் பெறுமதியானவையாக இவ்எரிபொருள் மானிய முத்திரைகள் பிரிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (பா)

## சிறு விளம்பரங்கள்

### டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்

சகல விதமான மோட்டார் சைக்கிள், வாகனங்கள் என்பவற்றின் உடைந்த பிளாஸ்ரிக் பொருட்கள் உத்தரவாதத்துடன் ஒட்டித்தரப்படும். உற்பத்திகளும் உண்டு.

கனகசபை லேன், சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம். Tel - 021 222 8680, 0775925088 (C/1285)

### கணினி திருத்தம் (Computer Repair)

உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து உரிய முறையில் திருத்தித் தருகிறோம். அழையுங்கள் 0779086737

GUNAABEST PC இல 6, Cathedral Road, Jaffna. அழகான கணினி மேசைகளும் விற்பனைக்கு உள்ளன. (C/1305)


# வடக்கின் அனர்த்த வரைபடம் விரைவில் தயாரிக்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

அனர்த்த வரைபடம் தயாரிப்பு தொடர்பாக 320 கிராம அலுவலர்களுக்கு யாழ். செயலக அனர்த்த முகாமைத்துவப் பிரிவினால் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்திலுள்ள 15 பிரதேச செயலகங்களையும் சேர்ந்த 320 கிராம அலுவலர்களுக்கும் இவ்வாறு கடந்த 8 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி வரை இப்பயிற்சிகள் வழங்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகின்றது.

இதன்மூலமாக எதிர்காலத்தில் அனர்த்தங்களின் போது ஏற்படும் அவசர நிலையை முகாமை செய்ய முடியும்.




இதேவேளை, யாழ். மாவட்டத்தில் கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தரத்தின் அனைத்துப் பிரிவுகளின் மாணவர்களுக்கான அனர்த்த முகாமை தொடர்பான போட்டிப் பரீட்சை ஒன்றும் யாழ். செயலக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தால் விரைவில் நடத்தப்படவுள்ளதாகவும் அதன் அதிகாரி தெரிவித்தார். (பா)

**மற்றவர்களுடைய துன்பத்தைக் கண்டு இரக்கப்படு; ஆனால் உன்னுடைய சொந்த துன்பங்களை உன்னிடமே வைத்திரு!** - அகிடன் பிரபு -

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com

## சுரேஷின் சவால் வெல்லுமா!

நேற்று ஜெனிவாவில் ஆரம்பமான ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 19வது கூட்டத்தொடர், இலங்கை அரசுக்குப் பெரும் நெருக்கடியை உருவாக்கப் போகிறது என்று பலரால் எதிர்பார்க்கப்பட்டது. அது கடைசியில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் பெரும் நெருக்கடியை உருவாக்கி விட்டதாய் அதிர்ச்சிகரத் திருப்பம் ஒன்று ஏற்பட்டிருக்கிறது.

கொழும்பில் ஜனாதிபதியையும், தென்னிலங்கைப் புத்திஜீவிகளையும் சந்தித்துப் பேசியபின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனும், சுமந்திரனும் ஜெனீவா கூட்டத்தொடரில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சென்று கலந்துகொள்ளப் போவதில்லை என்கிற முடிவை வெளியிட்டனர்.

இச்சமயம் சென்னையில் நின்றிருந்த தமிழரசுக்கட்சியின் மற்றொரு யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான சுரேஷ் பிரேமச்சந்திரன், அந்த முடிவு சம்பந்தன் மற்றும் சுமந்திரனின் கருத்துக்களே தவிர, தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் கருத்தல்ல என்று காட்டமாக பிபிசிக்குத் தெரிவித்துள்ளார்.

ஐ.நா. கூட்டத்தில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நேரடியாக பங்குபெற வேண்டும் என்பதே கூட்டமைப்பின் பெரும்பான்மையான நாடாளுமன்ற உறுப்பினர்களின் கருத்து என்றும், ஆனால் அதற்கு மாறான முடிவெடுக்கப்பட்டிருப்பதில் தமக்கு உடன்பாடில்லை என்றும் அவர் பிபிசி தமிழோசைக்குத் தெரிவித்திருக்கிறார்.

மேலும், ஐ.நா. மன்ற கூட்டத்தில் கலந்துகொள்ளாமல் இருப்பதாகத் தான்தோன்றித்தனமாக முடிவெடுக்கப்பட்ட விதம் மிகவும் ஆரோக்கியமற்ற ஒன்று என்றும், தாம் கொழும்பு சென்றதும் காத்திரமான ஒரு முடிவெடுக்கப் போவதாகவும சுரேஷ் கோபப்பட்டுக் கூறியதாக பிபிசி தெரிவித்தது.

கூட்டமைப்புக்குள் ஏற்கனவே இருந்து வந்த புகைச்சல் இப்போது பிளவாக உருவெடுத்திருப்பதாகவும் பிபிசி வர்ணித்துள்ளது. கூட்டமைப்பைத் தனிக் கட்சியாகப் பதிவு செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை சுரேஷ் பிரேமச்சந்திரன் தன்மையாகவும் மிரட்டலாகவும் பல தடவைகள் கூட்டமைப்புத் தலைமையிடமும், தமிழரசுக் கட்சிக்குச் சவாலாகவும் முன்வைத்திருந்தார்.

தமிழரசுக்கட்சி சுரேஷின் ஈ.பி.ஆர்.எல்.எப் மற்றும் செல்வத்தின் ரெலோ ஆகிய கட்சிகளுடன் இணைந்து கட்சியாகப் பதிவு செய்ய மறுத்தால், சங்கரி, சித்தார்த்தன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோரை இணைத்துக்கொண்டு அதையே கூட்டமைப்பாகப் பதிவு செய்ய வேண்டியிருக்கும் என்று சுரேஷ் மிரட்டியதை தமிழரசுக் கட்சியினர் யாரும் ரசிக்கவில்லை.

இப்போது சுரேஷ் கருத்துக்கு வலுச் சேர்ப்பது போலவே கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் கூட்டமைப்புத் தலைமையைக் கண்டித்து அறிக்கையொன்றை வெளியிட்டிருக்கிறார். அதில் அவர், ஜெனீவா கூட்டத்தொடரில் கலந்துகொண்டு தமிழ்மக்களுடைய நிலைப்பாட்டை வெளிப்படுத்த முடியாத போது கூட்டமைப்பு இனி இருப்பதும் இல்லாமல் போவதும் ஒன்றே எனத் தெரிவித்திருக்கிறார்.

சுரேஷினதும் கஜேந்திரகுமாரினதும் கருத்துக்களைப் பார்க்கும் யாருக்கும் அவர்களது முடிவுகளில் காணப்படுகின்ற ஒற்றுமை தெரியாமல் போகாது. தினமுரசு ஏற்கனவே தெரிவித்திருந்தது போல, கூட்டமைப்பின் பிரச்சினை என்பது யதார்த்தத்தை அனுசரிப்பதற்கும் தமிழ்த் தீவிர தேசியத்தை அனுசரிப்பதற்குமான முரண்பாடாகவே கடைசியில் வெடித்திருக்கிறது.

ஜெனீவா கூட்டத்தொடரில் கூட்டமைப்பு பங்கேற்காது என்ற முடிவுக்கு, தலைவர் இரா.சம்பந்தன் தனது அறிக்கையில் கூறியுள்ள காரணம் இதைத் தெளிவுபடுத்துகிறது.

ஜெனீவா மாநாட்டில் நாம் பங்கேற்பதன் மூலம் இங்கு குழப்ப நிலைமை தொடருமேயானால் அது வன்முறைக்கு வித்திடலாம், நமது மக்கள் அதனால் மீண்டும் பாதிக்கப்படலாம் எனவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அஞ்சுகிறது. தற்போதைய சூழ்நிலையிலே அமைதி காக்கப்படுவதும், பிரச்சினைகளைத் தவிர்ப்பதும் அவசியமான செயற்பாடுகளென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கருதுகிறது எனவும் அந்த அறிக்கையில் அவர் தெரிவித்துள்ளார்.

எனவே, தமிழ்த் தீவிர தேசியத்தை அனுசரிப்பதாக புலம்பெயர் தீவிரத் தேசியர்களுக்குக் காட்டிக்கொள்ள விரும்புபவர்கள், கூட்டமைப்பின் இந்த முடிவை ஆதரித்துக் கொண்டு கூட்டமைப்புக்குள் தொடர்ந்து இருக்க முடியாதென்ற நிலைமை உருவாகிவிட்டது என்றே தோன்றுகிறது.

- ஆசிரியர்

# காரைநகர் தோப்புக்காடு வித்தியாலயம்

# 20 வருடங்களின் பின் துரித அபிவிருத்தி

## ஈ.பி.டி.பி அமைப்பாளர் கண்ணன்

(காரைநகர்)

சுமார் 20 வருட காலமாக அபிவிருத்தியின்றிக் காணப்பட்ட தோப்புக்காடு மறைஞான சம்பந்த வித்தியாலயம் தற்போது துரித அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றது என ஈ.பி.டி.பியின் காரைநகர் இணைப்பாளரும் காரைகர் பிரதேச சபையின் எதிர்க் கட்சித் தலைவருமான வீ.கண்ணன் (ரஜனி) தெரிவித்துள்ளார்.

தோப்புக்காடு மறைஞான சம்பந்த வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது

இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் கல்வியே முதலீடாக உள்ளது. அந்த வகையில் இந்தப் பாடசாலையானது மக்கள் மீளக்குடியமர முன்பு அழிவடைந்து செடி, கொடிகள் வளர்ந்த நிலையில் காணப்பட்டது.

தற்போது முன்னேற்றத்தினைப் பார்க்கும்போது பெரும் மகிழ்ச்சியாக உள்ளது. இதன் முன்னேற்றத்துக்கு பெரும் பங்காற்றிய பெருமை அதிபரையே சாரும் அத்தோடு பாடசாலையின் முன்னேற்றத்துக்கு பங்காற்றிய கிராம அபிவிருத்தி சங்கத்தினர், பெற்றோர்கள், ஊர் பெரியார்கள் பாராட்டுக்குரியவர்கள்.

சுமார் 20 வருடங்களாக பாழடைந்து காணப்பட்ட பாடசாலை தற்போது கட்டட அபிவிருத்தியில் முன்னேற்றம் கண்டுள்ளது. இந்தப் பாடசாலையில் மின்சாரம் இல்லை. ஆகவே 2012 ஆம் ஆண டின் அமைச்சர் டக்ளஸ் அவர்களது பன்முகப் படுத்தப்பட்ட நிதியில் இருநது மின்சார இணைப்பு வழங்க ஏற்பாடு செய்ய நடவடிக்கை எடுப்போம். அத்தோடு பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் உதவியோடு தோப்புக்காடு பிரதான வீதியை ஒன்றரை மாத காலத்துக்குள் புனரமைப்புச் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றார்.

# சுனாமி எச்சரிக்கை கோபுரங்களின் செயற்பாடுகள் ஆரம்பமாகியுள்ளன

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு மற்றும் வடமராட்சிப் பகுதிக் கரையோரங்களில் சுனாமி எச்சரிக்கைக் கோபுரங்கள் செயற்பட ஆரம்பித்திருப்பதாக யாழ். செயலக அனர்த்த முகாமைத்துவப் பிரிவினர் தெரிவித்திருக்கின்றனர்.

கடந்த வாரம் முதல் இந்த சுனாமி எச்சரிக்கைக கோபுரங்கள் செயற்பட ஆரம்பித்திருப்பதாக அந் நிலையம் தெரிவித்துள்ளது.

நெடுந்தீவு, மணற்காடு, உடுத்துறை வல்வெட்டித்துறை ஆகிய நான்கு பகுதிகளின் கடற்கரையோரமாக இந்தச் சுனாமி எச்சரிக்கைக் கோபுரங்கள் அமைக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகின்றது.

இதேவேளை பருத்தித்துறை சுப்பர் மடம் பகுதியிலும் மண்டைதீவிலும் மேலும் தலா ஒவ்வொரு சுனாமி எச்சரிக்கைக் கோபுரங்கள் அமைக்கப் படவுள்ளதாகவும் தெரியவருகின்றது.

2004ஆம் ஆண்டு இந்தோனேசியா சுமத்திராத் தீவுகளில் கடலுக்கடியில் ஏற்பட்டிருந்த புவியதிர்வை அடுத்து சுனாமிப்பேரலைகள் இலங்கை, இந்திய ஆசிய நாடுகளில் பாரிய அழிவை ஏற்படுத்தியிருந்தன.

பெருமளவானவர்கள் இலங்கையிலும் பலியாகியிருந்தனர் எனவே இப்படியான இயற்கை அனர்த்தங்களின் போது பொதுமக்களுக்கு விரைவாக தகவல்களை பரிமாற்றி ஏற்படக்கூடிய சுனாமி போன்ற இயற்கையனர்த்தங்களில் இருந்து பொது மக்களை பாதுகாப்பதற்கு சுனாமி எச்சரிக்கைக் கோபுரங்கள் இலங்கையிலும் அமைக்கப்படவேண்டும் என்பது ஏற்கனவே வலியுறுத்தப்பட்டிருந்தது.

இதன் அடிப்படையில் தற்சமயம் மேற்குறித்த பகுதிகளில் சுனாமி எச்சரிக்கைக் கோபுரங்கள் செயற்படவைக்கப்பட்டிருப்பதாக யாழ். செயலக அனர்த்த முகாமைத்துவப் பிரிவு தெரிவித்திருக்கிறது. (பா)

## அவசர நிலை முகாமைக்கு

# உள்ளூர்த் திணைக்களங்களுக்கும் திசைநோக்கு ஒலிபரப்பிகள்

(யாழ்ப்பாணம்)

அனர்த்தங்களின் போது ஏற்படும் அவசர நிலையை முகாமை செய்யவென யாழ்.செயலக அனர்த்த முகாமைத்துவப் பிரிவால் உள்ளூர் அமைப்புக்களுக்கும் திணைக்களங்களுக்கும், திசைநோக்கு ஒலிபரப்பிகள் (மெகா போன்கள்) வழங்கப்பட்டிருப்பதாக யாழ்.செயலக அனர்த்த முகாமைத்துவ அதிகாரி தெரிவித்தார்.

நோய் பரவுதல், மற்றும் இயற்கை அனர்த்தங்களின் போது ஏற்படும் அவசர நிலையை விரைவாக பொதுமக்களுக்கு எடுத்துச் செல்லும் நோக்கம் கருதியே இந்தத் திசைநோக்கு ஒலிபரப்பிகள் வழங்கப்பட்டிருப்பதாக அந்த அதிகாரி குறிப்பிட்டார்.

யாழ். பிரதேச செயலகங்களுக்கும் ஐந்து கல்வி வலயங்களுக்கும், பாதிக்கப்பட்டிருக்கும் பத்துக் கிராமங்களுக்கும் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கும் இவை வழங்கபபட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

இவற்றில் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் நிலையத்துக்கு மேலும் ஒலிபரப்பிகள் தேவையெனவும் கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.

கடந்த 22 ஆம் திகதி அன்று யாழ்.செயலகத்தில் மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கத்தின் பணிப்பிற்கமைய இவை வழங்கப்பட்டிருப்பதாக மேலும் தெரிய வருகின்றது.

இவ்வாறு சுமார் 42 வரையான ஒலிபரப்பிகள் உள்ளூர் அமைப்புக்களுக்கும் திணைக்களங்களுக்கும் வழங்கப்பட்டிருப்பதாகவும் மேலும் தெரிய வருகிறது. (பா)

# 26 வருடங்களின் பின்

# புனரமைப்பு நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ் நகர நான்காம் குறுக்கு வீதியல் 26 வருடமாகத் திருத்தப்படாத 'கான்' திருத்தப்படுகிறது.

யாழ். நகர நன்காம் குறுக்கு வீதியின் இடதுபுற கழிவுக் கால்வாய் 26 வருடங்களாக திருத தப்படாது இருந்தது. இதனால் தென் இந்தியத்திருச்சபை சுற்று வட்டாரத்தில் இருந்து வரும் கழிவு நீர் தேங்கி நின்று குடியிருப்பாளருக்கு தொல்லையாக மாறி இருந்தது.

இலங்கை இராணுவத்தின் கெமுனுவாச் எனப்பட்ட குருநகர் இராணுவ முகாம் இந்த வீதியில் இருந்ததால் திருத்த வேலைகளை மேற்கொள்ள இயலாதிருந்தது.

இராணுவ நிலையம் அகற்றப்பட்டு இரண்டு வருடகாலத்தின் பின் பிரதான வீதியைக் குறுக்கறுக்கும் தெற்குப்புற கால்வாய் பாதி வெட்டி ஆழமாக்கப்பட்டு நீர் தேங்காது ஓடி சின்னக்கடையைக் கடந்து கடலுக்கு அகற்றப்படவுள்ளது.

பாதிவேலை முடிந்த பின்னர் மீதியாகவுள்ள பாதிவேலை நடைபெற இருப்பதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர். அண்மையில் இந்த வீதி காப்பெற் வீதியாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது. இந்த வீதியில் உல்லாச விடுதிகள உள்ளன. கழிவு நீர்தேங்கியதால் ஏற்பட்ட சுகாதாரத் தொல்லைகளும் குடம்பிப் பெருக்கமும் குறைவடையும் என அவர்கள் மேலும் தெரிவித்தனர.(23)

# கல்வி கற்றலுக்கான சாதக சூழலை தீவக மக்களுக்கு ஏற்படுத்துவோம்

## ஈ.பி.டி.பி. யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் உதயன்

(புங்குடுதீவு)

கல்வியைத் தொடர்வதற்கான இடர்பாடுகளை நீக்கி கற்றலுக்கான சாதகமான சூழலை தீவகத்தில் ஏற்படுத்துவோம் என ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் தீவக பிரதேசங்களின் ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான சில்வேஸ்திரி அலெண்ரின் (உதயன்) தெரிவித்துள்ளார்.


புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு போட்டிநிகழ்வுகள் வித்தியாலய அதிபர் நாகராஜா தலைமையில் நடைபெற்றது. இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர்மேலும் தெரிவிக்கையில்,கடந்த கால யுத்தத்தினால் அனைத்தையும் இழந்து நிர்க்கதியான நிலையில் மக்கள் வாழ்ந்து வருகின்ற போதும் தீவக பிரதேசங்கள் சகல வசதிகளுடனும்பல்வேறுஅபிவிருத்தி செயற்பாடுகளுடனும் அபிவிருத்தியடைந்துவருகின்றது.

எனவேமக்களது ஒத்துழைப்புடன் தீவக பிரதேசங்களை கட்டியெழுப்ப நாம் முனைப்புடன் செயற்படுகின்ற அதேவேளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் தீவகத்தை துரிதமாக அபிவிருத்தி செய்ய வேண்டும் என்பதற்காக அயராது பாடுபட்டு வருகின்றார்.பின்தங்கிய பிரதேசங்கள்என்றும் கைவிடப்பட்ட வளங்கள் இல்லாத பிரதேசம் என்றும் கூறப்பட்ட தீவகத்தை வளம் செழிக்கும் பூமியாக நாம் மாற்றியுள்ளோம்.

மாணவர்களது கற்றல் செயற்பாடுகளை மேம்படுத்துவதற்கு பெற்றோரின் பங்களிப்பும் அவசியமான தொன்று. இப் பாடசாலையின் சில கட்டடத் தேவைகளை நிறைவு செய்வதற்கான பரிந்துரைகளை மேற்கொள்வதுடன் பாடசாலையின் நிகழ்வுகள் மற்றும் அணி நடைக்கான பாண்ட் வாத்திய கருவியினை இவ் வருடத்திற்கான எனது பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியினூடாக பெற்றுத் தருவேன்என அவர் உறுதியளித்தார்.

தீவக வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் அருணகிரிநாதன் வேலணை கோட்டக் கல்வி அதிகாரி சரவணபவானந்தன் ஆகியோரும் உரை நிகழ்த்தினர். வெற்றி பெற்ற அணிகளுக்கானவெற்றிக் கேடயங்களையும்,வீர வீராங்கனைகளுக்கானவெற்றிக் கிண்ணங்களையும் நாடாளுமன்ற உறுப்பினர்உதயன் அவர்களும் நிகழ்வில் கலந்து கொண்ட அதிதிகள் பரிசில்கள் வழங்கி வைத்தனர்.



இந் நிகழ்வில் ஈ.பி.டி.பி.யின் புங்குடுதீவு பிரதேச இணைப்பாளர் சிவநேசன் (நவம்) ஈ.பி.டி.பி.யின் நெடுந்தீவு பிரதேச இணைப்பாளரும் நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவருமான றெக்சியன் (றஜீவ்) பாடசாலை அதிபர்கள் ஆசிரியர்கள் பெற்றோர் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர் (69)

# முதலீட்டுக்கு சிறந்த தளமாக யாழ்ப்பாணம் விளங்குகின்றது

## வணிக முகாமைத்துவ பீடாதிபதி தி.வேல்நம்பி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் முதலீட்டுக்கான நல்ல தளம் என்பதனால் தென்பகுதி மற்றும் வெளிநாட்டவர்கள் முதலீட்டுக்கு ஆர்வம் காட்டி வருகின்றனர் என யாழ். பல்கலைக்கழக வணிக முகாமைத்துவ கற்கைகள் நெறி பீடாதிபதி தி.வேல்நம்பி தெரிவித்துள்ளார்

நாவலர் வீதியில் அமைந்துள்ள சொர்ணாம்பிகை மண்டபத்தில் ஆறுதல் நிறுவன இயக்குநர் சுந்தரம் டி வகலால தலைமையில் நடைபெற்ற வே.தவேந்திரனின் பூத்திடும் பனம் தோப்பு நூல் வெளியீட்டு விழாவில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றும் போது இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

ஆனால் தமிழ் மக்கள் யாழ்ப்பாணத்தில் முதல் இடுவதற்கு ஆர்வம் காட்டவில்லையென குறிப்பிட்ட பீடாதிபதி தி.வேல்நம்பி தமிழ் மக்கள் மத்தியில் விழிப்புணர்வு இல்லாத காரணத்தால் யாழ். மாவட்டத்தில் முதலீடு செய்வதில் எம்மவர்கள் ஆர்வம் காட்டவில்லை. எனவே தமிழ் மக்கள் யாழ். மாவட்டத்தில் முதலீடு செய்வதற்கு ஊடகங்கள் உழைக்கவேண்டும்

அங்கு அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது; இந்நூலில் ஆசிரியர் வாழ்வியலில் மாற்றங்கள் பலவற்றை பதிவு செய்துள்ளார். ஆனால் மாற்றங்கள் ஏற்படலாம். தமிழ் மக்களின் வாழ்வியலின் அடிப்படையில் மாற்றங்கள் ஏற்படக் கூடாதென்று யாழ். பல்கலைக்கழக வணிக முகாமைத்துவ கற்கைகள் நெறி பீடாதிபதி தி.வேல்நம்பி மேலும் தெரிவித்தார்.

இவ் வெளியீட்டு விழாவில் வெளியீட்டுரையை யாழ் கல்வி வலய உதவிப் பணிப்பாளர் மு.இராசநாயகமும், மதிப்பீட்டுரையை கோப்பாய் ஆசிரிய பயிற்சி கலாசாலை விரிவுரையாளர் எஸ்.லலீசனும் நிகழ்த்தினார்.

# வீட்டுப் பயிர்களை நாசம் செய்யும் கட்டாக்காலி கால்நடைகள்

## கட்டுப்படுத்துவார்களா அதிகாரிகள்?

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு-கோம்பாவில் பகுதியில் கட்டாக்காலிகளாகத்திரியும் கால்நடைகளினால் வீடுகளில் செய்கை பண்ணப்படும் சிறு தானியப் பயிர் வகைகள் பாழாவதாக பொதுமக்கள் பலரும் கவலை தெரிவிக்கின்றனர்.

போரின் பின்பு மீள்குடியேற்றம் செய்யப்பட்ட மக்கள் தங்கள் வளவினைத் துப்புரவாக்கி வேலியடைத்து தமது அன்றாடத் தேவைகளுக்காக மரக்கறிச் செடிகள் மற்றும் வாழை, உப தானியப்பயிர்களை நட்டு வளர்த்து வரும் நிலையில், உரிமையாளர்களினால் கவனிப்பாரற்றுத் திரியும் சில கட்டாக்காலி மாடுகள் இரவு வேளைகளில் வேலிகளைப பிரித்து உட் சென்று பயிர்களை நாசம் செய்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

புதுக்குடியிருப்பு-துர்க்கையம்மன் கோவிலுக்கு அருகாமையில் உள்ள ஒரு வீடொன்றில் வளர்க்கப்பட்ட கொச்சி மிளகாய் மற்றும் பசளி வகைகள் போன்றவற்றை நேற்று முன்தினம் இரவு வேலி பிரித்து உட் சென்ற மாடு அனைத்தையும் மேய்ந்துவிட்டு சென்றதாக வீட்டு உரிமையாளர் கவலையுடன் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு பயிர்வகைகளை சேதப்படுத்துகின்ற கட்டாக்காலி கால் நடைகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பிடித்து அதற்குரிய நடவடிக்கைகளை எடுப்பார்களா என பாதிக்கப்பட்ட மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். (138)

# தோட்டக் கிணறுகளை துப்புரவு செய்யும் படையினர்

(மண்டைதீவு)

மண்டைதீவு வேப்பம்திடல் அம்மன் கோவில் பகுதியில் தோட்ட வெளியில் உள்ள கிணறுகளை கடற்படையினர் சுத்தம் செய்து வருவதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. மண்டைதீவு பூம்புகார் கண்ணகி அம்மன் கோவிலுக்கு மேற்கு மற்றும் தென் மேற்காக உள்ள வெள்ளை மண்நிறைந்த தோட்டவெளியில் குறிப்பிட்ட தண்ணீர்க் கிணறுகளை மையமாக வைத்து தோட்டப்பகுதிகள், காடுகள், பற்றைகள் அகற்றப்பட்டு கிணறுகளும் துப்புரவு செய்யப்பட்டு பயன்படுத்தப்படுவதாக மேலும் தெரிவிக்கப்படுகின்றது. (23)

# வணிகபாட செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கல்வி வலயத்தில் உள்ள பாடசாலைகளில் வணிக பாடத்தை கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு ஒன்று எதிர்வரும் 3ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணி முதல் மாலை 5 மணிவரை நடைபெறவுள்ளது.

மருதனார் மடத்தில் உள்ள இராமநாதன் மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ள இச் செயலமர்வில் தரம் 11க்கு வணிகக் கல்வியை போதிக்கும் ஆசிரியர்கள் கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

# புதிய நிர்வாகிகள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

இளங்கோ சன சமூக நிலையத்தின் நடப்பு ஆண்டுக்கான புதிய நிர் வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்

தலைவர்-கு.மகாலிங்கம், உபதலைவர்-ஜெ.சந்திரகலா,செயலாளர் இ.இந்திரன், உபசெயலாளர்-ச.சஜந்தன், பொருளாளர்-ச.சபேஸ், போசகர்-சி.கலா

விளையாட்டுத்துறை தலைவர்-வி.நிரோசன்,உப விளையாட்டுத் துறை தலைவர்-சி.சூரியராஜ் நிர்வாகசபை உறுப்பினர்கள்

சுமன்,நதியா,மணிவண்ணன்,நிரோசா,ஜெயசிங்கம், கேதீஸ்வரி,மனோரஞ்சன்,சுகிதா, நாகராசா,றஜிந்தன், கந்தசாமி, ரூபன்,எம்..மைக்கல் மரணச்சடங்கு தொடர்பான விடயங்களுக்கு -செ.ரகு,சி.சுகிதன்,க.சுபாசினி,வி.ராஜேஸ்வரி,ஈஸ்வரி ஆகிய 5 பேர் கொண்ட குழுவும் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

# சனசமூக நிலையத்தின் நிர்வாகிகள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டி- கேவில் விக்கினேஸ்வரா சன சமூக நிலையத்தின் நடப்பு ஆண்டுக்கான நிர்வாக சபை உறுப்பினர்கள் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்-தி.விக்கினேஸ்வரன் (குருக்கள்) செயலாளர்-மா.தங்கராசா,பொருளாளர்-சி.விக்கினேஸ்வரன்,நிர்வாக சபை உறுப்பினர்கள் ச.அகிலன், பொ.சித்திரவேல், ஏ.இராஜேந்திரம், க.குலசிங்கம், ச.சதீஸ், கிரிசாந்தன்.



ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் இலங்கைக்கு எதிராக கொண்டுவரும் தீர்மானத்தை எதிர்த்து யாழ். மாவட்ட ஈழமக்கள் ஜனநாயக கட்சி ஏற்பாடு செய்த ஆர்ப்பாட்டத்தில் ஈ.பி.டி.பி. யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலென்ரின் , வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி, ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கமலேந்திரன்(கமல்), ஈ.பி.டி.பி உறுப்பினர்கள், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி யின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் அங்கஜன் இராமநாதன் மற்றும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட திரளான மக்களையும் காணலாம் (படம்: சுமித்தி)

# பெண்கள் கல்வி ரீதியாக நிமிர்ந்து நிற்க வேண்டும்

## ஈ.பி.டி.பி யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார்



(கிளிநொச்சி)

எமது பிரதேச பெண்கள் சமூகத்தில் வகிக்கும் தலைமைத்துவம் அதன் செயற்பாடுகள் மகிழ்ச்சி அளிப்பதோடு பாராட்டுதலுக்கும் உரியது என ஈ.பி.டி.பி. யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்தார்.

கடந்த சனிக்கிழமை கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலக பிரிவிலுள்ள மயில் வாகனபுரம் கிராமத்தில் ஈ.பி.டி.பி. யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் அவர்களினால் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ஊடாக எழுபது இலட்சம் ரூபா செலவில் அமைத்துக் கொடுக்கப்பட்ட பாடசாலைக் கட்டடத் தொகுதியினை திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், வீட்டிலிருந்து ஆரம்பிக்கப்படுகின்ற பெண்களின் தலைமைத்துவம் கிராமம், பிரதேசம், மாவட்டம், மாகாணம் என விரிந்து செல்கிறது. இன்று வடமாகாணத்தில் நிர்வாகத்துறையில் உயர் பதவிகளில் பெண்களின் பாத்திரங்களே அதிகம். குறிப்பாக வடக்கு மாகாணம் பெரும்பாலும் பெணகளின் தலைமைத்துவத்திற்குள் இயங்குகிறது என்றே கூறமுடியும். இது எங்களுக்கு மகிழ்ச்சி அளிப்பதோடு நம்பிக்கையினையும் தருகிறது.

கிராமங்களில் போரினால் பாதிக்கப்பட்டு தங்களின் குடும்பத் தலைவர்களை இழந்து பெணகளின் தலைமைத்துவத்தின் கீழ் நம்பிக்கையோடு வாழ்க்கையினை கொண்டு செல்லும் பெண்கள் கிராம மட்ட அமைப்புகளில் அங்கம் வகிக்கும் பெண்கள் என பெண்களின் செயற்பாடுகள் ஆரோக்கியமானதாகக் காணப்படுகிறது.

இவர்களின் எதிர்காலத்திற்காக நாம் நிச்சயம் எம்மாலான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வோம். அத்தோடு பெண்கள் கல்வி ரீதியாக மேலும் நிமிர்ந்து நிற்க வேண்டும். அப்போதுதான் இன்றும் எமது பெண்களுக்கெதிராக சமூகத்தில் இருக்கும் செயற்பாடுகளையும் அறுத்தெறிய முடியும் எனவும் குறிப்பிட்டார்.

மேலும் குறித்த கிராமத்தில் மாதர் அமைப்பின் அப்பள உற்பத்தி நிலையத்தினையும் கிராம பொது நோக்கு மண்டபத்தினையும் ஈ.பி.டி.பி. யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் கண்டாவளை பிரதேச செயலர் சத்தியசீலன், பாடசாலை முதல்வர், ஆசிரியர்கள், ஈ.பி.டி.பி.யின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் தவநாதன், மாதர் சங்க தலைவியும் சமாதான நீதவானுமான செல்வராணி மற்றும் மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்:

# சில்லறை நாணயத்துக்கு தட்டுப்பாடு பிச்சை எடுப்போர் திண்டாட்டம்

(யாழ்ப்பாணம்)

எரிபொருள் விலையேற்றத்தின் முன்பு நம்முடைய பாடு பரவாயில்லை. இப்பொழுது எரிபொருட்கள் விலையேற்றப்பட்டதனால் ஏற்பட்டிருக்கும் சில்லறைத் தட்டுப்பாடு காரணமாக நம்முடைய வாழ்க்கை பெரிதும் கஷ்டமான நிலையில் போய்க் கொண்டிருக்கிறது.

இவ்வாறு யாழ். நகர மத்தியில் யாசகம் (பிச்சை) செய்யும் ஒரு முதியவர் கவலையுடன் தெரிவித்துள்ளார்.

இம்முதியவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் மண்ணெண்ணெய் விலையேற்றத்துக்கு முன்பு நாஙகள் பொதுமக்களிடம் கையை நீட்டினால் இரண்டு ரூபாவுக்குக் குறையாமல் யாசகம் கொடுப்பார்கள். சிலர் ஐந்து ரூபாவும் அதற்கு மேற்பட்ட பத்து ரூபாத் தாளும் எந்தவித தயக்கமுமின்றிக் கொடுத்து விட்டுப் போவார்கள்.

ஆனால், இப்போது சில்லறைக் காசுகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதால், பொதுமககள் எமக்கு யாசகம் இடத் தயங்குகிறார்கள். ஒரு ரூபா மற்றும் இரண்டு, ஐந்து ரூபாக் குற்றிகள் பேருந்துப் பயணங்களுக்குத் தேவைப்படுவதால் மக்கள் அவற்றை எமக்குத் தர விரும்புகிறார்கள் இல்லை.

பேருந்துகளில் ஏறிக் கையை நீட்டினால் ஒரு சிலர் மட்டுமே பத்து ரூபாத்தாளைத் தருகிறார்கள். சில்லறைக் குற்றிகளைத் தருவதில்லை.

வெள்ளிக்கிழமைகள் மற்றும் திருவிழாக் காலங்களில் எமக்கு நிறையச் சில்லறை கிடைக்கும். இப்போது அந்த இடங்களிலும் அதிக வருவாய் கிடைப்பதில்லை. அதனால் பல இடங்களாக அலைந்து திரியவேண்டிய நிலை ஏற்படுகிறது.

அத்தோடு உணவுப் பண்டங்களும் விலையேறி விட்டதால், தற்சமயம் எமக்குக் கிடைக்கும் வருவாயில் அவற்றை வாங்க முடியாது மிகவும் கஷ்டப்படுகிறோம் என அம்முதியவர் மேலும் தெரிவித்தார். (138)

# விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

நீர் வழங்கல் வடிகால் அமைப்பு அமைச்சு தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்புச் சபை தலைமைக் கணக்காளர் பதவிக்கு (04 வெற்றிடங்கள்) தகுதியுடையோரிடமிருந்து 2012.03.11 ஆம் திகதிக்கு முன்னும்,

கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களம், திட்டமிடல் உதவியாளர் பதவிகள் 13, அபிவிருத்தி உதவியாளர் பதவிகள் 5, சட்ட உதவியாளர் பதவி, 1 ஆகிய பதவிகளுக்கு தகுதியுடையோரிடமிருந்து 2012.03.15 ஆம் திகதிக்கு முன்னா விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

மேற்படி பதவிகளுக்கான கல்வித் தகைமையும், விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி மற்றும் விபரங்களைத் தினமுரசு அலுவலகத்தில் பார்வையிடலாம்.

# மக்களின் நீதியையும் நியாயத்தையும் கடைப்பிடித்தொழுகுவதே மத்தியஸ்தசபை

(வவுனியா)

கடந்த மூன்று வருடங்களுக்கு முன்னர் வவுனியாவில் மத்தியஸ்த சபை அமைப்பது தொடர்பில் யாராவது கேட்டிருந்தால் இப்போது வேண்டாம் என்றே கூறியிருப்பேன். மத்தியஸ்தசபை சாதாரணமாக அமையும் ஒன்றல்ல. மக்களின் நம்பிக்கையைப்பெற்று நீதியையும் நியாயத்தையும் கடைப்பிடித்து ஒழுகுகின்ற ஒன்றாகும். இற்றைக்கு மூன்று வருடங்களுக்கு முன்னர் அத்தகைய சங்கங்கள் அமைக்கப்பட்டிருந்தால் அந்தச் சபை சுதந்திரமாகவும் தலையீடு இன்றியும் இயங்கியிருக்குமா என்ற கேள்வி என்னுடைய மனதில் தோன்றியது. அதனால்தான் இப்போது வேண்டாம் என்று கூறியிருப்பேன். ஆனால் இன்று அந்தச் சூழ்நிலை இல்லாத காரணத்தால்தான் மத்தியஸ்தசபை எமக்கு தேவையாகவுள்ளது .என வவுனியா மாவட்ட பதில் நீதிபதியும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான மு. சிற்றம்பலம் தெரிவித்தார்.

வவுனியா பிரதேச செயலகத்திற்குட்பட்ட மத்தியஸ்த சபை அங்குரார்ப்பண நிகழ்வில் சிறப்பு அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அங்கு தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

எந்தச் சமுதாயமாக இருந்தாலும் சரி, நாகரிகம் படைத்த சமுதாயமாக இருந்தாலும், கல்வியறிவு குறைந்த சமூகமாக இருந்தாலும் பிணக்குகள் வருவது இயற்கை. இந்தப் பிணக்குகளைத் தீர்ப்பதற்கு ஒவ்வொரு சமுதாயத்திலும் ஒவ்வொரு விதமான அமைப்புகள் உண்டு. எங்கள் மத்தியில் உள்ள அமைப்பு நீதிமன்றத்தை நாடுவதுதான். நீதிமன்றத்தை ஒருவர் நாடும் போது அந்த வழக்கில் இருவர் சம்பந்தப்படுவார்கள்.

அந்தவழக்கின் முடிவில் ஒருவர் வெல்லுவார் ஒருவர் தோற்பார். அந்த வெற்றி தோல்வி அவர்களிடையே இருக்கும் கசப்புணர்வை இன்னும் மேலாக வளர்க்குமே தவிர அவர்களுடைய ஒற்றுமையை வளர்க்கும் ஒன்றாக அமைவதில்லை என்ற அடிப்படையில் உருவாக்கப்பட்டதுதான் மத்தியஸ்தசபை. இந்த மத்தியஸ்த சபை அமைக்கப்பட்ட பின்னர் சிறிய குற்றங்கள் நீதிமன்றத்திற்குப் போவதானால் மத்தியஸ்தசபையினரிடம் இருந்து உறுதிப்பத்திரம் தேவை.

எனவே சிறு குற்றங்களை நீதிமன்றத்திற்கு கொண்டு செல்லாது மத்தியஸ்த சபையில் தீர்க்கப்படுமாயின் அது சமூகத்திற்கு மத்தியஸ்தசபை செய்யும் பாரிய பணியாகும் என தெரிவித்தார். (125)

# பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட விவசாயக் குழுக் கூட்டமும், மாவட்ட வீட்டுத் தோட்டப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள் வழங்கும் நிகழ்வும் எதிர்வரும் 1 ஆம் திகதி வியாழக் கிழமை முற்பகல் 11 மணிக்கு நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வு இன்று செவ்வாய்க் கிழமை நடைபெறவிருந்ததாகவும் தவிர்க்க முடியாத காரணத்தினால் வியாழக்கிழமை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# முரசின் இன்றைய பலன்

(28.02.2012 –செவ்வாய்க்கிழமை)

கர வருஷம் மாசி மாதம் 16 ஆம் திகதி. ஷஷ்டி பிற்பகல் 2.00 வரை. நட்சத்திரம் பரணி பிற்பகல் 1.05 வரை. சித்தயோகம், ஷஷ்டி விரதம் கார்த்திகை விரதம், கரிநாள் இராகுகாலம், 3.28 - 4.58 வரை. சுபநேரம் 10.58 - 12.28 வரை. எமகண்டம் 9.28 - 10.58 வரை. குளிகைகாலம். 12.28 - 1.58 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | முயற்சிகள், திருப்திகரம், தடைதாமதம் நீங்கும் உறவினரால் உதவி. |
| ரிஷபம் | உடல் ஆரோக்கியம், இடையூறுகள், பெரியோர் நட்பு, பொருளாதாரம் உயரும். |
| மிதுனம் | பிரச்சினைகள் தீரும், பொன்பொருள்சேரும், சுபகாரியங்கள், புத்திரப்பேறு. |
| கடகம் | பொன்,பொருள் சேரும், குழப்பங்கள் விலகும், மருத்துவச் செலவு, வீண்குரோதங்கள். |
| சிம்மம் | இறைவழிபாடு, அந்நியர் இடையூறு, ஆசைகள் நிறைவேறும், முயற்சி வெற்றி. |
| கன்னி | உறவினர் வருகை, பிரயாணச்செலவு, அலைச்சல்கள், புத்திரரால் மகிழ்ச்சி. |
| துலாம் | இலாப மிகுதி, உறவினரால் தொல்லை, முன் எச்சரிக்கை, கடன் தீரும். |
| விருச்சிகம் | மனதில் திருப்தி, நண்பரால் உதவி, தொழில் முன்னேற்றம், உடல் நலம். |
| தனுசு | கழுத மூலம் நன்மை, கடன் வரவில் திருப்தி, உத்தியோக உயர்வு, குடும்ப சுகம். |
| மகரம் | எதிர்ப்பலைகள், நினைத்தவை கைகூடும், இலாப அதிகரிப்பு, கடன் வரவில் திருப்தி. |
| கும்பம் | புதிய ஆக்கம், அந்தஸ்து அதிகரிப்பு, காரிய சித்தி, கவனம் அவசியம். |
| மீனம் | உற்சாகம், புத்தி விருத்தி, நண்பர்களால் உதவி, அவசரபயணம். |



பருத்தித்துறை பனை தென்னை வள அபிவிருத்திக்கூட்டுறவுச் சங்கமும் பணியாளர் சிக்கனகடனுதவு கூட்டுறவுச்சங்கமும் இணைந்து நடாத்திய கௌரவிப்பு விழாவில் இளைப்பாறிய அங்கத்தவர் ஒருவருக்கு மாதாந்த ஓய்வூதியத்தை கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே. அருந்தவநாதன் வழங்குவதையும், தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திஅடைந்த மாணவி ஒருவருக்கு சமாசத்தலைவர் நா. கணேசு பரிசு வழங்குவதையும் காணலாம்.

# அரசியல் தீர்வு என்பது அரசாங்கத்துக்கும் தமிழ்க்கட்சிகளுக்குமிடையில் அடைந்துகொள்ளப்பட வேண்டிய ஒரு இணக்கம்

சர்வதேச விசாரணை என்பதும் இன நல்லிணக்கம் என்பதும் நேரடியாகத் தொடர்புபட்டவை அல்ல என்ற வாதம் இரண்டு அடிப்படைகளைக் கொண்டது. ஒன்று, தமிழ் மக்களுக்கு இராணுவத்தை தண்டிப்பது என்பதிலும் முக்கியமான பல பிரச்சினைகள் காணப்படுகின்றன. இப்பிரச்சினைகள் யாவும் அல்லது அடிப்படையான பிரச்சினைகள் யாவும் திருப்திகரமாகத் தீர்க்கப்படுகின்ற போது அரசு அல்லது சிங்கள மக்கள் தொடர்பிலான அவர்களது மனோபாவம் மாற்றமடையலாம். மாறாக இராணுவம் தண்டிக்கப்படுவதால் ஏற்படுகின்ற "மனத்திருப்தி" மட்டும் அவர்களின் சிங்கள மக்களுடனான உறவைத் தூண்டிவிடும் என்று எதிர்பார்க்க முடியாது. இது ஒன்று.

இரண்டாவது, சர்வதேச விசாரணை ஒன்று இடம் பெற்று அதன் காரணமாக சில இராணுவ அதிகாரிகளோ அல்லது அரசியல் தலைவர்களோ தண்டிக்கப்பட்டுவார்களாயின் சிங்கள மக்களின் மனோபாவம் எவ்விதமிருக்கும் என்ற அடிப்படையிலானது. சர்வதேச விசாரணை என்ற கோசமும் அதன் அடிப்படையிலான செயற்பாடுகளும் சிங்கள தேசத்துக்கும் மக்களுக்கும் எதிரான ஒரு ரீதியில் பார்க்கப்படுவது தீவிரமடையும். அத்தகைய பின்னணியில் இனங்களுக்கிடையிலான உறவு விருத்தியடையும் என்று எதிர்பார்க்க முடியாது.

எனவே தான், இக்கட்டுரை ஆசிரியரின் அபிப்பிராயத்தின் படி சர்வதேச விசாரணைக்கும் இன நல்லிணக்கத்துக்கும் நேரடியான தொடர்பு இல்லை என்று கூறப்படுகின்றது.


இருப்பினும் நீதி, பாதிக்கப்பட்ட மக்களின் உளவியல் நலன் என்ற ரீதியில் சர்வதேச விசாரணை என்பது முக்கியமான ஒன்றாக இருக்கலாம். இவ்விடயத்திற்கு வருவதற்கு முன் சுட்டிக் காட்டப்பட வேண்டிய ஒரு விடயம் என்னவெனில் மேற்கூறப்பட்ட இரண்டாவது விடயம் பற்றி தீவிரமாக சிந்திக்க வேண்டிய ஒரு அவசியம் தமிழ் மக்களுக்கு உண்டு என்பதாகும்.

விரும்பியோ விரும்பாமலோ தமிழ் மக்கள் சிங்களவர்களுடன் சேர்ந்து வாழ வேண்டிய அவசியம் ஒன்று காணப்படுகின்றது. அத்தகைய பின்னணியில் தேசத்துரோகிகள் என்ற முத்திரை "சர்வதேச சதி" என்றே பார்க்கப்படுகின்றது என்பது தெளிவானது.

இச்சதித் திட்டத்தில் தமிழ் மக்களுக்கும் ஒரு பங்கு இருக்கின்றது என்று கூறப்படுகின்றது என்பதுடன் அது அவ்விதமே பார்க்கப்படும் என்பதில் சந்தேகமில்லை. எனவே, விசாரணை விடயம் செயற்பாடாக மாறுமாயின் சிங்கள மக்களின் தமிழ் மக்கள் மீதான சந்தேகமும் அதிருப்தியும் அதிகரிக்கும். அத்துடன் தமிழர்கள் தேசத்துரோகிகள் என்ற

யை இறுக்கிக் குத்திக்கொள்வது சிறந்த தந்திரோபாயம் அல்ல.

இதன் செயற்பாட்டு வடிவம் என்னவெனில் தமிழ் கட்சிகள், குறிப்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இப்பிரச்சினையை சர்வதேச செயற்பாட்டாளர்களின் கைகளில் முழுமையாக விட்டு விடுவதாகும். இவ்விடயத்தில் புலம்பெயர்ந்த தமிழர்களினதும் அமெரிக்காவினதும் யதார்த்தங்களும் இலங்கையில் வாழ்கின்ற தமிழர்களின் யதார்த்தங்களும் ஒன்றுபட்டவை அல்ல. அவை வெவ்வேறானவை. எனவே, வேறுபட்ட வழிமுறைகளூடாக இவை அணுகப்பட வேண்டும்.



இப்போதைய நிலையில் சிறந்த தந்திரோபாயம் என்னவெனில் விசாரணைப் பிரச்சினையை சர்வதேசத்தின் கையில் விட்டுவிட்டு அரசியல் தீர்வு மற்றும உடனடிப் பிரச்சினைகளில் கவனம் செலுத்துவதாகும்.

அமெரிக்காவையும் ஏனைய சில ஐரோப்பிய நாடுகளையும் பொறுத்தவரை, சர்வதேச அரங்கில் இலங்கைக்கு எதிரான செயற்பாடுகள் சில காலத்திற்கு தொடர்ந்து இருக்கும் என்று எதிர்பார்க்கலாம். அமெரிக்காவும் ஏனைய சில ஐரோப்பிய நாடுகளும் இவ்விடயத்தில் உறுதியாகவே இருப்பது போல் தோன்றுகின்றது.

இதன் கருத்து நடைபெறவுள்ள ஜெனீவா மனிதஉரிமை கவுன்சில் அமர்வுகளில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் ஒன்று கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்படும் என்பதல்ல. அமெரிக்கா அவ்விதம் கூறி வருகின்றபோதும் இந்தியா, சீனா போன்ற நாடுகளின் நிலைப்பாடு தெளிவற்றதாகவே உள்ளது. கடந்த இரண்டு ஆண்டுகால அனுபவத்தினடிப்படையில் நோக்குகையில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் ஒன்று இவ்வாண்டு சாத்தியமானது என்று தோன்றவில்லை.

இதற்கான இன்னுமொரு காரணம் "இராணுவ விசாரணை" என்ற புத்திசாலித்தனமான ஆயுதத்துடன் அரசு ஜெனீவா சென்றுள்ளமையாகும். ஒரு வகையில் இலங்கையை பாராட்டுகின்ற தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்படாமல் இருப்பதே அமெரிக்காவுக்கு வெற்றியாக அமைந்துவிடக்கூடும்.

இராணுவ விசாரணை என்ற நான்கு ஓட்டங்களை அடித்து முடித்த கையுடன் ஜனாதிபதி ஆறு ஓட்டங்களை அடிக்க முற்பட்டிருந்தார். அது திடீரென ஜனாதிபதி இரா.சம்பந்தனை சந்தித்தமையாகும். இச்சந்திப்பின் மூலம் ஜனாதிபதி ஜெனீவாவில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்த முனைந்திருந்தார் என்பது கூட்டமைப்புக்கு சரியாகப் புரிந்திருந்ததா என்பது தெளிவானது அல்ல.

இருப்பினும் தமிழர்கள் தொடர்பிலான பிரச்சினை ஒன்றில் பிரதான தமிழ்க் கட்சித் தலைவரையே ஒரு கத்தியாகப் பயன்படுத்த முற்பட்டது சாதுரியமான ஒரு நகர்வு ஆகும். பயன்படுத்தப்படுகின்றோம் என்று தெரிந்திருந்தாலும் சந்தர்ப்பத்தை சரியாகப் பயன்படுத்திக் கொள்ள முனைவது தவறானது அல்ல. முக்கியமானது என்னவெனில் பொறியில மாட்டிக்கொள்ளாமல் இருப்பதாகும்.


ஜனாதிபதிக்கும் சம்பந்தனுக்கும் இடையிலான சந்திப்பை இலங்கை அரசாங்கம் ஜெனீவாவில் தனக்கு சார்பாக பயன்படுத்திக்கொள்ளும் என்பதில் சந்தேகமில்லை. இது தொடர்பிலான செய்தி அறிக்கை சந்திப்பின் போது நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் இணைந்து கொள்ளும் படி ஜனாதிபதி சம்பந்தனிடம் கேட்டுக்கொண்டதாக தெரிவிக்கின்றது.

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் கூட்டமைப்பு இணைந்து கொள்ள வேண்டும் என்பது அரசாங்கத்தின் பழைய கோரிக்கையே ஆகும். செய்தி அறிக்கையின் படி இக்கோரிக்கையை சம்பந்தன் ஏற்றுக்கொள்ளவில்லை என்று தெரிகின்றது.

அரசியல் தீர்வு என்பது அரசாங்கத்துக்கும் தமிழ்க்கட்சிகளுக்குமிடையில் அடைந்துகொள்ளப்பட வேண்டிய ஒரு இணக்கம் ஆகும். இவ்விணக்கத்திற்கான நாடாளுமன்ற அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பு ஆகும். நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலமுடைய அரசாங்கத்திற்கு இதனை அடைந்து கொள்வது கடினமானதாக இருக்கப் போவதில்லை.

-எஸ்.ஐ.கீதபொன்கலன்
கட்டுரையிலிருந்து

## பறவைக்கு வந்த பகுத்தறிவு



மசூதி ஒன்றின் மாடத்தின் மேல் புறா ஒன்று தன்னுடைய குஞ்சுப் பறவைகளுடன் வசித்து வந்தது. திடீரென்று ஒருநாள் மசூதியின் மேல் பகுதியை இடித்துப் புதிய கட்டடம் கட்டுவதற்காக முடிவு செய்யப்பட்டது.

இந்த மசூதியின் மேல் பகுதி இடிக்கப்படும் விபரமறிந்த அந்தப் புறா தன் குஞ்சுப் புறாக்களுடன் மசூதியை விட்டு வெளியேறியது. சிறிது தூரம் பறந்து சென்ற அது அங்கு ஒரு கிறிஸ்தவ தேவாலயம் இருப்பதைக் கண்டு அங்கு தனக்கு பாதுகாப்புக் கிடைக்கும் என்று கருதி அந்தத் தேவாலயத்தில் கோபுர உச்சியில் தன் குஞ்சுகளுடன் குடியேறியது.

சில நாட்கள் சென்றிருக்கும். அந்த தேவாலயத்திலும் வர்ணம் பூசுவதற்கென்று தேவாலயக் கோபுரத்தைச் சுத்தம் செய்யத் தொடங்கினர். இதனால் தனக்கும் தன் குஞ்சுகளுக்கும் பாதுகாப்பில்லை என்று கருதிய அந்தப் புறா மீண்டும் பாதுகாப்பான இடம் தேடி பறந்து சென்றது.

சிறிது தூரம் சென்றதும் உயர்ந்த பழமையான சிவன் கோவில் கோபுரம் ஒன்றைக் கண்டது. இந்தக் கோவில் கோபுரம் தான் நமக்கும் நம் குஞ்சுகளுக்கும் பாதுகாப்பானது என்று கருதி அந்தக் கோபுரத்தில் குடியேறியது.

கோவில் கோபுரத்தில் தங்கியிருந்த போது ஒரு நாள் கீழே திடீரென்று கூச்சலும் சப்தமுமாக இருந்தது. இதைக்கேட்டு குஞ்சுப் புறாக்கள் பயந்தன. அந்தக் குஞ்சுப் புறாக்கள் பயத்தோடு தங்கள் தாய்ப்புறாவைப் பார்த்து அம்மா கீழே ஒரு கூச்சலாக இருக்கிறதே... என்றன.

கீழே எட்டிப் பார்த்த தாய்ப்புறா தனது குஞ்சுப் புறாக்களிடம் சொன்னது. "அது வேறொன்றுமில்லை. இந்தப் பாழாய்ப் போன மனிதர்கள், மதத்தின் பெயரால் ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக் கொள்கிறார்கள். நாம் மசூதியின் மேலிருந்தோம், அதற்குப்பின்பு தேவாலயத்தில் இருந்தோம். இப்போது நாம் கோவிலில் இருக்கிறோம். நாம் எங்கிருந்தாலும் நம்மைப் புறா என்று தான் அழைக்கிறார்கள்.

ஆனால் இந்த மனிதர்கள் மட்டும் கோவிலில் இருந்தால் இந்து என்றும், தேவாலயத்தில் இருந்தால் கிறிஸ்தவர் என்றும் மசூதியிலிருந்தால் முஸ்லிம் என்றும் சொல்லிக் கொள்கிறார்கள். இவர்கள் தங்களை மனிதர்கள் என்று சொல்லிக் கொள்வதைக் காட்டிலும் மதங்கள் மற்றும் சாதிகளின் பெயரால் அழைக்கப்படுகிறார்கள்.

இதனால் இவர்கள் மனிதர்கள் என்பதை மறந்து விட்டு மதம் மற்றும் சாதிகளின் பெயரால் சண்டையிட்டுக் கலவரம் செய்வார்கள். மடிவார்கள். பறவைக் காய்ச்சல் நோய் வந்துவிட்டது என்று சொல்லி கண்ணில் பார்த்த பறவைகளையெல்லாம் தீயிலிட்டுப் பொசுக்கினார்கள். ஆனால் இவர்களிடம் மதம் மற்றும் சாதிகளுக்கான கலவரம் எனும் மனித காய்ச்சலுக்கான வைரஸ்கள் அதிகமாக உள்ளது. இந்த வைரஸ்கள் பறவைகளான நம்மைத் தாக்கினால் நம்மினமே அழிந்து விடும்.


இந்த மத, சாதிக் கலவர மனித காய்ச்சல் நமக்கு வந்து விடக்கூடாது. அதனால் நாம் வேறிடம் பறந்து செல்வோம் என்று கூறியபடி அந்தப் புறா தன் குஞ்சுகளுடன் அங்கிருந்து மற்றொரு பாதுகாப்பான இடம் தேடி பறந்து சென்றது.

## கமரூனில் யானை வேட்டை

ஆபிரிக்காவில் உள்ள கமரூன் நாட்டுக்குள் அண்டை நாட்டு கடத்தல்காரர்கள் நுழைந்து அங்குள்ள காட்டில் நானூறுக்கும் மேற்பட்ட யானைகளைச் சில வாரங்களுக்குள் கொலை செய்துள்ளனர். இதுவரை இல்லாத வகையில் தந்தங்களுக்காக யானைகளைக் கொல்வது அதிகரித்துள்ளது. உலகம் முழுவதிலும் யானைத் தந்தத்தை விலைகொடுத்து வாங்குவதைப் பெருமையாகக் கருதும் மக்கள் இருப்பதே இந்த யானைகள் அழிவுக்குக் காரணமாகிறது.

அண்மைய வாரங்களில் மட்டும் 458 யானைகளின் சடலங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளது. தந்தங்களுக்காக மத்திய ஆபிரிக்காவில் யானைகள் கொல்லப்படுவது சாதாரணமான ஒரு விஷயம்தான். ஆனால் இவ்வளவு குறுகிய காலப்பகுதியில் இந்த அளவுக்கு யானைகள் கொல்லப்படுவது தான் விநோதம். இதற்கு சூடான் மற்றும் சாட் நாட்டிலுள்ள குற்றக்குழுக்கள் மீதே குற்றஞ் சாட்டப்படுகிறது. இந்தக் குழுக்கள் மிகவும் சிறப்பாக ஒருங்கிணைப்புடன் பெருமளவில் அதிநவீன ஆயுதங்களுடன் செயற்படுகிறார்கள். இவர்கள் குதிரைகளில் வந்து சிறு குழுக்களாக பிரிந்து யானைகளை வேட்டையாடிவிட்டு விரைவாக சென்று விடுகிறார்கள்.






குட்டியானைகள் உட்பட தற்போது 458 யானைகளின் சடலங்களை தாங்கள் கண்டு பிடித்திருந்தாலும், மேலும் கூடுதலான யானைகள் கொல்லப்பட்டிருக்கக் கூடும் எனவும் கமரூன் நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கிழக்கு ஆசியாவில் யானைத் தந்தங்களுக்கான கிராக்கி அதிகரித்துள்ளதற்கும், கமரூனில் யானைகள் கொல்லப்படுவதற்கும் தொடர்பு உள்ளதாகச் சொல்லப்படுகிறது. அதிலும் தந்த வேட்கையில் சீனாவே முன்னிலை வகிக்கிறது. சீன மக்களின் தந்த வேட்கைக்கு ஆபிரிக்க யானைகள் பலியாகின்றன எனவும் குற்றம் சாட்டப்படுகிறது.

யானைகளின் தொகை உலகெங்கும் குறைந்து வருகிறது. எந்த ஒரு குறிப்பிட்ட அரசையும் இதற்கு முழுப் பொறுப்பாக்க முடியாது - தந்தத்தைப் பெருமை கொள்ளக்கூடிய செல்வமாகக் கருதும் உலக மக்கள், கண்டனத்துக்குரியவர்கள்.

# அனொனிமா – முகம் மறைத்தவள்

- இளவேனில் அ.பள்ளிப்பட்டி -




வரலாற்றின் அனைத்துப் பக்கங்களிலும் குருதிக் கறைகளாய உறைந்து கிடக்கும் அத்தனை போர்களுக்கும் ஒருமித்த கருத்தியல்கள் சில இருக்கின்றன. போர் ஆண்களுக்கானது. வெற்றி, தோல்வி பேதமின்றி பாதிக்கப் படுபவர்கள் பெண்களும், குழந்தைகளும், முதியவர்களும்.

ஒவ்வொரு போரும் ஆயிரமாயிரம் அங்கவீனர்களை, அனாதைகளை, விதவைகளை, மனநிலை பாதித்தவர்களை, புலம்பெயர்ந்தோரை பரிசளிக்கும். வீரம், விடுதலை, இனமானம் இப்படி ஏதோ ஒரு காரணியை வைத்துப போர்கள் ஆண்களால் நடத்தப்படுகின்றன. காலந்தோறும் எல்லா அரசுகளும், அதிகாரமையங்களும் போருக்குத் தயாராகவே காத்துக கிடக்கின்றன. போர்களுக்கான தயார்நிலை, ஆளுமை, வெற்றி இவைகளைக் கொண்டே தேசங்களின் வளர்ச்சியும், பெருமையும், முக்கியத்துவமும் நிர்ணயம் செய்யப்படுகின்றன.

போர் ஆண்களைக்காட்டிலும் அதிகாரங்களுக்கானது, அதிலிருக்கும் ஆண்களுக்கானது. போரின் எல்லாக் கட்டமைப்புகளிலும் பெண் முழுமையான பாதிப்புகளுக்கு ஆட்படுகிறாள். போரின் பெயரைச் சொல்லி இதுகாலம் வரை எத்துணைக் கோடி வன்புணர்வுகள் நடந்தேறியிருக்கும்.

காலமாற்றத்தில் போருக்கான சூழல்கள், தன்மைகள், ஆயுதங்கள், காரணிகள் மாற்றம் பெற்றாலும் போர் நிலைத்து நிற்கவே செய்கிறது. மனிதன் வாழும் ஓர் சின்ன இடுக்கிலும் கூட போர் நடைபெறுகிறது. ஆண்கள் தன் சக மனிதர்களின் சதையை, இரத்தத்தைச் சுவைக்கவே ஆசைகொள்கின்றனர்.

நாகரிகமடைந்துவிட்டதாக மனிதன் சொல்லிக்கொள்ளும் இறுதி இரு நூற்றாண்டுகளில் உலகம் கண்ட மிகப்பெரிய யுத்தமான இரண்டாம் அகிலயுத்தம் குறித்தான பதிவுகள் புத்தகங்களாய், ஓவியங்களாய், திரைப்படங்களாய், ஆவணங்களாய், புகைப்படங்களாய், செய்திகளாய் எத்தனையோ இலட்சம் கிடைக்கப்பெறுகின்றன.

இரண்டாம் உலகயுத்தத் திரைப்படங்கள் என்று இணையத்தில் தேடினால் நூற்றுக்கணக்கான படங்கள் பல்வேறு மொழிகளில் கிடைக்கின்றன. அனேக பதிவுகள் நாஸிகளின் கொடுமைகள் பற்றியோ, யூதப் படுகொலைகள் பற்றியோ, ஜப்பானின் கொலை வெறித் தாக்குதல்கள் குறித்தோ அல்லது நேசப்படைகளின் வெற்றி வீரக் கதைகள் குறித்தோ பேசுவன.

ஆனால் 'அனொனிமா' செஞ்சேனையிடம் பெர்லின் வீழ்ந்தபின் சிதிலமடைந்து மனித சவங்கள் பரவிக்கிடக்கும் பெர்லின் நகர வீதிகளினுடே நின்றவாறு தோற்றுப்போன தேசத்தில் வாழும் அத்தனை பெண்களின் குரலாக ஒலிக்கிறாள்.

இரண்டாம் உலகப்போரின் இறுதியில் ரஷ்ய இராணுவம் பெர்லின் நகருக்குள் நுழையும் 1945 ஜனவரியில் ஒரு மாலைப்பொழுதில் நாட்குறிப்பு ஆரம்பித்து போர் முடிந்து 1945 ஜுலை ஜேர்மனியைப் புனரமைப்பதில் முற்றுப் பெறுகிறது.

அனொனிமாவுக்கு அடையாளமில்லை, அவள் முகமற்றவள், ஆனால் உலகில் வாழும் அத்தனை பெண்களின் முகமாய் காட்சி தருகிறாள். அவள் டொச்லாந்து (ஜேர்மனி) தோல்வி குறித்தோ, நேசப் படைகளின் வெற்றி குறித்தோ பேசவில்லை. பறிபோன தங்கள் வாழ்க்கையைப் பற்றிப் பேசுகிறாள், சீரழிக்கப்பட்ட தங்கள் உடல் குறித்துக் கதறுகிறாள், காய்ந்து போய் உணவுக்குக் கையேந்திக் குமுறுகின்றாள்.

தன்னை வெளிக்காட்டாமல் கதை சொல்ல ஆரம்பிக்கும் அவளின் கதை முழுதும் யோனிகள் கிழிந்து கொட்டிக் கொண்டிருக்கும் குருதி சிதறிக்கிடக்கிறது. வெற்றி வீரர்களாய் பெர்லின் வீதிகளில் நுழையும் ரஷ்யர்கள் தேடித் தேடி ஜேர்மனியப் பெண்களை வன்புணர்வுக்கு உட்படுத்துகின்றனர். செஞ்சேனை வெற்றிக் களிறாய் தோற்றவர்கள் மீது நிற்கிறது. தோற்றவர்கள் வீடுகளிலும், நிலவறைகளிலும் ரொட்டி, உருளைக் கிழங்கு, தண்ணியில்லாமல் பதுங்கிக் கிடக்கின்றனர்.

அனொனிமா மட்டுமில்லாது அனைத்து மக்களும் தங்களின் இந்நிலைக்கு ஹிட்லரே காரணம் என்கின்றனர். ஒரு இடத்தில 'எல்லா ரஷ்யர்களும் மோசமில்லை, சில நல்லவர்களும் இருக்கவே செய்கின்றனர் என்கிறாள் அனொனிமா. மேலும், நம் படைகள் லெனின்கிராடில், ஸ்டாலின்கிராடில் என்ன செய்தனவோ அதையே இவான்கள் நமக்கு திருப்பித் தருகின்றனர் என்கிறாள்.

இருவர் சந்தித்துக்கொண்டால் "எப்படி இருகிறாய்?" என்று கேட்பதைப் போல இரு ஜேர்மனியப் பெண்கள் சந்தித்துக்கொண்டாலே "எத்தனை முறை?" என்று கேட்கின்றனர் (எத்தனை முறை வன்புணர்வுக்கு ஆளானாய்?) ரஷ்யர்களிடமிருந்து தப்பிக்க, பெண்கள் எத்துனையோ வழிமுறைகளைக் கடைப்பிடிகின்றனர். வீட்டுப் புகைக்கூடத்தில் மறைந்து கிடப்பது, வயதானவளாய், அழகு குன்றியவளாய் தோற்றம் கொள்வது, மாதவிடாய் இல்லாத சமயங்களிலும் பஞ்சு வைத்தபடி கிடப்பது, இப்படி எத்தனையோ வழிமுறைகள்.

அனொனிமாவும் ஓர் வழியை கண்டுபிடித்தாள், பல ஓணான்களிடம் தினமும் அகப்படுவதை விட பதவி உயர்ந்த ஓர் ஓணானை வசப்படுத்திக் கொண்டால்? அப்படியே செய்தாள் அனொனிமா. அவள் அறிந்த சிறிது ரஷ்ய மொழி அறிவு இதுபோலான விடயங்களில் அவளுக்குத் துணை நின்றது. அவள் யோசனை அவளின் உணவுத் தேவையையும் ஓரளவு ஈடுகட்டியது.

இத்தனை முறைகள் நடந்துவிட்டதால் கரு தரித்துவிடப் போகிறாய் மருத்துவரை பார்ப்போம் என்கிறாள் அனொனிமாவுடன் சேர்ந்து வாழும் மத்திய வயது விதவை, விதவையும் வன்புணர்வுகளுக்கு தப்பவில்லை, அவளை முதன் முதலாய் சூறையாடிய இவானுக்கு இருபது வயது கூட இருக்காது.

விதவையின் கேள்விக்கு பதில் சொல்லும் அனொனிமா "பலர் செல்லும் பாதையில் புல், பூண்டு துளிர்க்காது" என்கிறாள். மேலும், ஓரிடத்தில் "இதுவே போரில்லா காலத்தில் ஒரு வன்புணர்வு நடந்திருந்தால் எத்தனை விசாரணை, தண்டனை. ஆனால், இப்போது போரெனும் ஒற்றை சொல்லைக் கொண்டு அனைத்தையும் கடந்து செல்கின்றனர் ஆண்கள்"—என்கிறாள்.

ரஷ்யர்களை காட்டிலும் ஜேர்மன் ஆண்கள் மீதே பெரும் கோபம் கொள்கிறாள். வெற்றியாளர்களாய் இருக்கும் வரை எத்தனை வீரத்தை, பெருமையை இவர்கள் பேசித் திரிந்தனர், இவர்கள் பெண்களைச் சூறையாடும்போது எங்கே போனது இவர்கள் வீரம் என்று கேட்கிறாள்.

இப்படிப் புத்தகத்தின் அனைத்து வரிகளிலும் தங்களின் துயர்க் கதைகளைச் சொல்லுகிறாள். அவளுக்கு அவ்ள் மீதே வெறுப்பு உண்டாகுகிறது. வாழ்க்கை மீது நம்பிக்கையிழந்து கிடக்கிறாள். அடுத்து என்னவென்று யாருக்கும் தெரியவில்லை. சிதிலமடைந்த கட்டட இடிபாடுகளுடன குடிநீரின்றி, உணவின்றி இருண்ட வாழ்க்கை வாழும் அனொனிமா உலகில் வாழும் எல்லாப் பெண்களின் குரலாகவும் ஆண்களைப் பார்த்து இப்புத்தகம் முழுதும் கேள்விகளை எழுப்புகிறாள்.

இப்புத்தகம் போரின் அகோரத்தோடு ஆரம்பித்து, அதே போரின் அகோரத்தோடு முடிகிறது. அதற்குப் பின்னான காலங்களில் பெர்லின் மீள எழுப்பப்பட்டது, ஆண்கள் இழந்த பெருமையை மீட்டனர், தங்களைத் தோற்கடித்தவர்களுடன் உறவு கொண்டாடுகின்றனர். வெற்றி மாந்தர்களாய் உலவுகின்றனர்.

ஆனால் போரினால் அனொனிமாகள் அடைந்த இழப்புகளை, கொடுமைகளை, கருச்சிதைவுகளை, மனசிதைவுகளை யாரால் அழிக்க முடியம்? போரின் வடு இல்லாத அனொனிமாவை எந்தத் தேசம் திருப்பித்தரும். சாகும் வரை அவளுடனே வரும் மனக் குமுறல்களுக்கு எந்தச் சிந்தாந்தம் மருத்துவம் பார்க்கும்?


நாகரிகமடைந்ததாகச் சொல்லித் திரியும் மனித இனம், இப்புத்தகத்தின் முன்னுரையில் தோழர் ஆதவன் தீட்சண்யா சொன்னதைப்போல் தோசையைக் கூட துப்பாகியால் சுடுவதையே புரட்சியென்றும், வீரமென்றும், மக்களாட்சியென்றும் பிதற்றுகிறது.

அடக்குமுறைகளும், அடங்கிப்போவதும், ஆணாதிக்க சிந்தனையும், வீரம், இனம் போன்ற உணர்ச்சி அரசியலும் செழித்துக் கிடக்கும் ஓர் சூழலில் அனொனிமா மிகமுக்கிய பதிவாய் தமிழில் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது. மனித வரலாறெங்கும் பரவிக்கிடக்கும் போர் குறித்து பல கேள்விகளை முன்வைக்கிறது.

குழந்தைப்போராளியை மொழி பெயர்த்த புலம்பெயர்ந்த ஈழத்தவரான சுவிஸ் தேவா அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டு பூபாளம் புத்தகப் பண்ணை வெளியிடாக அனொனிமா வெளிவந்து இரண்டு ஆண்டுகள் ஆகிவிட்டன். A Women in Berlin எனும் திரைப்படமாகவும் வெளிவந்துள்ளது.

**"ஆண்கள் போரிட்டுக் கொண்டிருகிறார்கள் மனிதர்கள் வேறு பாதையில் செல்லவும்"**

# எழுதும் கலை –1



1. எழுத்தாற்றலை ஓரளவுக்குப் பயிற்சியால் வளர்த்துக் கொள்ள முடியும். தமிழ் நன்றாகத் தெரியவேண்டும். தமிழில் நிறையப் படிக்க வேண்டும். அதிகம் பேசாமல் நிறையக் கவனிக்க வேண்டும். எழுத்து என்பது 'Memory shaped by art' என்று சொல்வார்கள். உண்மை எத்தனை? கற்பனை எத்தனை? அவற்றை எந்த அளவில் கலப்பது? நடந்ததைச் சொல்வதா? நடந்திருக்க வேண்டியதைச் சொல்வதா? - இந்த இரசாயனம் புரிந்து கொள்ளக் கொஞ்சம் நாளாகும். இதற்குக் குறுக்கு வழியே இல்லை. நிறைய எழுதிப் பார்க்க வேண்டும்.

2. பால்சாக் ஒரு நாளைக்குப் பன்னிரெண்டு மணி நேரம் எழுதினார். அத்தனை எழுத வேண்டியதில்லை. ஒரு நாளைக்கு ஒருபக்கம் எழுதினாலே வாழ்க்கையில் நூறு புத்தகம் எழுதி விடலாம்.

3. The image that fiction producesis purged of the distractions, confusions, and accidents of ordinarylife என்றதுபோல தின வாழ்க்கையிலிருந்து தேர்ந்தெடுக்க வேண்டியது அவசியம். தெரிந்த மனிதர்கள், தெரிந்த சம்பவங்கள் பற்றி முதலில் எழுதுவது நல்லது. சொந்தக் கதை எழுதுவதை விட, மனதில் வந்த கதையைச் சொந்தப் படுத்திக் கொண்டு எழுதுவது சிறப்பு.

4. எழுதியதைச் சில தினங்கள் விட்டுப் படித்துப் பார்க்க வேண்டும். அப்போது ஒரு வாசகனின் கோணத்திலிருந்து அதை பார்க்க இயலும். கொஞ்சம் கூடக் கருணையே காட்டாமல் அநாவசிய வார்த்தைகளையும் வாக்கியங்களையும் சிதைத்து விட வேண்டும். "நான் எழுதியதெல்லாம் மந்திரம் போல் ஒரு வார்த்தையை நீக்க முடியாது, நீக்கக் கூடாது" என்பதெல்லாம் மடத்தனம். உனக்கே திருப்தி வரும்வரை திரும்பத் திரும்ப எழுதுவதிலும் திருத்துவதிலும் நீக்குவதிலும் சேர்ப்பதிலும்தான் நல்ல எழுத்து ஜனிக்கிறது.

5. எழுத்தாற்றல் வந்துவிட்டது உங்களுக்கே புரியும். ஒரு ஜுரம் போல உணர்வீர்கள். நீங்கள் சிருஷ்டித்த பாத்திரங்கள் உங்களை ஆக்கிரமிப்பார்கள். எழுதுவதில் உள்ள வேதனைகள் கழன்று போய் எழுத்து உங்களை எழுத ஆரம்பிக்கும். இந்த நிலை வருவதற்குச் சில தியாகங்கள் தேவை.

5. உருவம், உள்ளடக்கம் என்று பலர் ஜல்லியடிப்பதைக் கேட்டிருக்கிறேன். டெண்டர் நோட்டீ சுக்குக்கூட உருவமும் உள்ளடக்கமும் இருக்கிறது. பின் சிறுகதை என்பது தான் என்ன? கூர்ந்து கவனியுங்கள். சிறுகதை என்பது ஒரு முரண்பாட்டைச் சித்தரிக்கும் உரைநடை இலக்கியம்.

7. எழுதுகிறவனுக்குக் கவனம் முக்கியம். எல்லோரும் கவனிக்கிறோம். ஆனால் எல்லாவற்றையும் கவனிப்பதில்லை. யோசித்துப் பார்த்தால் நாம் கவனிக்க விரும்புவதைத்தான் கவனிக்கிறோம். கவனிப்பது என்பது உடல் நிலையையும், மனநிலையையும் பொறுத்தது. காண்கிற எல்லாவற்றையும் கவனிக்க எனக்குச் சில வருஷங்கள் ஆயின. கவனித்த அத்தனையையும் எழுதவேண்டுமென்பதில்லை. எழுதத் தேர்ந்தெடுக்கப்படும் விஷயத்தில் சில பொது அம்சங்கள் – முக்கியமாக மானுடம் வேண்டும்.

8. எழுதுவதற்கென்று ஏதாவது விதிகள் உள்ளனவா? நல்ல ஒப்சர்வேஷன் பவர் வேண்டும். இரண்டு கண்களையும் காதுகளையும் எப்போதும் கவனமாகத் திறந்து வைத்திருக்கிறேன். வாசிப்பது எழுதுவதற்குப் பெரிதும் துணை புரிகிறது. எதைப் பற்றித் தெளிவாகத் தெரியுமோ அதைப் பற்றியே எழுத வேண்டும்.

- சுஜாதா




# The Artist படத்துக்கு 5 ஒஸ்கார் விருதுகள்



ஞாயிறன்று நடைபெற்ற ஒஸ்கார் விருது வழங்கும் விழாவில், தோமஸ் தயாரித்துள்ள தி ஆர்டிஸ்ட் திரைப்படம் 5 ஒஸ்கார் விருதுகளை பெற்றுள்ளது. சிறந்த படம், நடிகர், இயக்குனர், இசை மற்றும் ஒப்பனை பிரிவுகளில் தி ஆர்டிஸ்ட் திரைப்படம் 5 ஒஸ்கார் விருதுகளை தட்டிச் சென்றது. The Artist படத்தின் லூட்விக் போர்சுக்கு சிறந்த இசையமைப்பாளர் விருது வழங்கப்பட்டுள்ளது. சிறந்த ஆடை அலங்கார வடிவமைப்பாளர் விருது மார்க் பிரிட்ஜஸ்க்கு வழங்கப்பட்டது. சிறந்த நடிகருக்கான விருதை ஆர்டிஸ்ட் படத்தில் நடித்த ஜீன் டுஜார்டின் பெற்றார்.

இதே போன்று, பிரெய்ன் செல்ஸ் நிக் நாவலை தழுவி உருவான ஹுயுகோ திரைப்படத்திற்கும் 5 ஒஸ்கார் விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. சிறந்த ஒளிப்பதிவு, கலை, சவுண்ட் எடிட்டிங், சவுண்ட் மிக்சிங், சிறந்த விஷ்வல் எ..பக்ட்ஸ் விருதையும் ஹுயுகோ திரைப்படம் வென்றுள்ளது.



# இலங்கைக்கான தீர்வுக்காக அர்ப்பணிப்புடன் செயற்படுவோம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி எந்தத் தருணத்திலும் இலங்கைக்கான தீர்வொன்றுக்காகவே அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றது என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

அரசாங்கத்தினால் கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என ஐக்கிய நாடுகளின் யோசனையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்தப் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய பொறுப்புடையது. அரசாங்கமாக இருப்பின் பரிந்துரைகள் என்னவென்று தீர்மானிக்க வேண்டிய கடமையும் அரசாங்கத்திடமே உள்ளது. எனினும், ஆணைக் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைபடுத்துவதற்காக அரசாங்கத்தினதும், எதிர்க்கட்சியினதும் இணக்கப்பாடே அவசியம் என்றார்.

ஐக்கிய தேசியக் கட்சி எப்போதும் உள்நாட்டு ரீதியான தீர்வுத் திட்டத்தையே விரும்புகின்றது. ஐக்கிய நாடுகள் மனித உரிமை கவுன்சிலில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா தீர்மானம் நிறைவேற்றினாலும், அதனால் பாதிப்புக்கள் ஏற்படப்போவதில்லை.

ஏனெனில், தீர்மானம் நிறைவேற்றிய போதிலும் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு வாய்ப்பில்லை. தீர்மானம் நிறைவேற்றப்படாவிட்டாலும், தீர்மானம் தோற்கடிக்கப்பட்டாலும் பிரச்சினை முடிந்ததாக கருத முடியாது. அடுத்த அமர்வுகளில் மீண்டும் மற்றுமொரு தீர்மானம் முன்வைக்கக் கூடும்.

ஆளும், எதிர்க்கட்சிகள் கூட்டாக இணைந்து கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை உரிய முறையில் அமுல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்த இன்னமும் கால அவகாசம் கோருவதனை ஏற்றுக்கொள்ள முடியாது என்றார்.

# விவசாயத்துறை தன்னிறைவு; ஜனாதிபதி முன்னுதாரணம்



(கொழும்பு)

விவசாயத் துறையில் தன்னிறைவை ஏற்படுத்துவதற்காக ஒவ்வொரு வீட்டிலும் மரக்கறிகள் மற்றும் பழங்களை வளர்க்கும் மகிந்த சிந்தனைத் திட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதன் ஒரு அங்கமாக ஜனாதிபதி மாளிகையிலுள்ள வீட்டுத் தோட்டத்தில் வாழை மரங்கள் நாட்டப்பட்டன.

நாட்டப்பட்ட வாழை மரத்திலிருந்து வாழைப் பழமொன்றினை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பறிப்பதனை படத்தில் காணலாம்.

## நுகர்வோர் பாதிக்கப்படுவதைத் தவிர்க்க

# எரிபொருள் விலைச் சூத்திரம் அறிமுகம் செய்ய அரசு திட்டம்

(கொழும்பு)

எரிபொருள் விலை தொடர்பில் மீண்டும் விலைச் சூத்திரத்தினை அறிமுகம் செய்வதில் அரசாங்கம் கவனம் செலுத்தி வருகிறது.

நிதி அமைச்சின் பேச்சாளர் ஒருவர் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

எரிபொருட்களின் விலை அதிக அளவில் உயர்வடைந்து சென்றதன் காரணமாகவே இவ்வாறான தீர்மானத்திற்கு வர நேரிட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

எரிபொருளுக்கான விலைச் சூத்திரம் 2002 ஆம் ஆண்டு முதல் 2004 ஆம் ஆண்டு வரை ஆட்சி செய்த ஐக்கிய தேசிய கட்சியின் ஆட்சிகாலத்தில் மேற்கொள்ளப்பட்டது.

உலக வர்த்தக சந்தையில், எண்ணெய் விலையின் அடிப்படையில் உள்ளூர் சந்தைகளில் எரிபொருட்களின் விலைகளை அதிகரிப்பது அல்லது குறைப்பது விலைச் சூத்திரம் ஆகும்.

இந்த நிலையில், இந்த புதிய விலைச் சூத்திர அமைப்பின் மூலம் நுகர்வோர் பெருமளவில் பாதிப்பிற்கு உள்ளாவதைத் தவிர்க்க முடியும் எனவும் அவர் கூறினார்.



# மனித உரிமைக் குற்றச்சாட்டுக்களுக்கு ஜே. ஆர். வெற்றிகரமாக முகம்கொடுத்தார்

(கொழும்பு)

ஜே.ஆர்.ஜெயவர்தனா ஜனாதிபதியாக இருந்த காலப்பகுதியிலும் இலங்கைக்கு எதிராக மனித உரிமைகள் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டாலும், அதனை வெற்றிகரமாக முகம் கொடுத்ததாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க கண்டி குண்டசாலையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் இவ்வாறு தெரிவித்தார்.

ஜே.ஆர்.ஜெயவர்தனா ஜனாதிபதியாக இருந்த காலப்பகுதியில், மனித உரிமை மீறல் குற்றச்சாட்டிற்கு பதில் வழங்க ஐந்து பிரதிநிதிகள் மாத்திரமே கலந்து கொண்டனர்.

எனினும் தற்சமயம் அரசாங்கம் சுமார் 50 பேர் அடங்கிய குழுவொன்றினை ஜெனீவாவிற்கு அனுப்பியுள்ளதாகவும் திஸ்ஸ அத்தநாயக்க குற்றஞ்சாட்டியுள்ளார்.

# காலி முகத்திடலில் 30 அடுக்குமாடி ஹோட்டல்

(கொழும்பு)

கொழும்பு காலிமுகத்திடலில் 30 அடுக்கு மாடிகளைக் கொண்டதாக கட்டப்படவுள்ள சங்கிரி-லா நட்சத்திர அந்தஸ்துள்ள ஹோட்டலுக்கான அடிக்கல் நாட்டும் வைபவம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இதில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ மற்றும் சங்கிரி-லா ஏசியா தலைவர் குக் க்ஹன் இன் ஆகியோர் அடிக்கல் நட்டினர்.

பிரதியமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன-கொழும்பு மாநகர மேயர் ஏ.ஜே.ஏ.முஸம்மில் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் இந்த வைபவத்தில் கலந்துகொண்டனர்.

# இறப்பர் குண்டுகள் இன்மையே துப்பாக்கிச் சூடு நடத்தக் காரணம்

(கொழும்பு)

பொலிஸ் நிலையங்களில் இறப்பர் குண்டுகளுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு காரணமாகவே பேரணிகள் மற்றும் ஆர்ப்பாட்டங்களின் போது துப்பாக்கி ரவைகளைப் பாவிக்க நேர்ந்துள்ளது என பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இத்தகவலை 'லக்பிம' என்ற சிங்களப் பத்திரிகை வெளியிட்டுள்ளது. பொலிஸ் நிலையங்களில் வைக்கப்பட்டிருந்த இறப்பர் குண்டுகள் அனைத்தும் பம்பலப்பிட்டியிலுள்ள பொலிஸ் பண்டசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுவிட்டது. அதன் காரணமாகவே பொலிஸ் நிலையங்களில் தற்போது இறப்பர் குண்டுகள் இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது.

அண்மையில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டம் ஒன்றின்போது அதில கலந்துகொண்ட பொதுமகன் ஒருவர் பொலிஸாரினால் சுட்டுக் கொல்லப்பட்டமைக்கும் இதுவே காரணம் எனவும் அந்தப் பத்திகை தெரிவித்துள்ளது.

குறிப்பிட்ட பேரணி மீது இறப்பர் குண்டு பிரயோகம் மேற்கொள்ள இறப்பர் குண்டுகள் பொலிஸாரிடம் இருக்கவில்லை. இதன் காரணமாகவே துப்பாக்கி ரவைகள் மூலம் சுட்டதாகவும் இதன் காரணமாக அந்தப் பொது மகன் உயிரிழந்தார் என்றும் லக்பிம பத்திரிகை தெரிவித்துள்ளது.

# கால்பந்தாட்டப் போட்டி மோதலில் இருவர் காயம்

மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற கால்பந்தாட்ட விளையாட்டுப் போட்டியின் போது இடம்பெற்ற மோதலில் இரண்டு பேர் காயமடைந்து மன்னார் பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் கடந்த சில நாட்களாக கழகங்களுக்கிடையிலான உதைப்பந்தாட்டப் போட்டி இடம்பெற்று வருகின்றன. இந்நிலையில் மன்னார்-பனங்கட்டிக்கொட்டு கால்பந்தாட்டக் கழகத்திற்கும் தாழ்வு பாடு உதைப்பந்தாட்ட கழகத்திற்கும் இடையில் போட்டியொன்று நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றது.

இதன் போது ஏற்பட்ட மோதலில் பனங்கட்டிக்கொட்டு விளையாட்டு கழக வீரர் ஒருவரும் தாழ்வுபாட்டு விளையாட்டுக்கழக வீரர் ஒருவருமாக இரண்டு பேர் காயமடைந்த நிலையில் மன்னார் பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# அபிவிருத்தி முறி மூலம் 60 கோடி டொலர் கடன்

(கொழும்பு)

இந்த வருடத்தில் 60 கோடி அமெரிக்க டொலர் அபிவிருத்தி முறிகளைப் பெற முடியும் என அரசாங்கம் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

எப்படியிருப்பினும், திறைச்சேரியின் சிரேஷ்ட அதிகாரி ஒருவரின் கூற்றின்படி ஏற்கனவே வாங்கப்பட்ட முறிகளை புதிப்பிப்பதின் மூலமே பெரும்பான்மையான நிதிகள் கிடைக்கும் என்று தெரிவித்துள்ளார்.

இந்த முறையில் நிதியினைப் பெறுவதற்கான அனுமதி அமைச்சரவையிடமிருந்து பெறப்படுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, 52 ஆம் இலக்க நிதி சேகரிக்கும் சட்டத்திற்கு அமைய உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் இருந்து ஒரு இலட்சத்து 139 ஆயிரம் கோடி ரூபாவினையே ஆகக் கூடிய தொகையாகப் பெறமுடியும் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# இலங்கைப் பணிப்பெண்கள் எட்டுப் பேர் குவைத்தில் கைது

தனது வீட்டு உரிமையாளருக்காக வேலை செய்யாது அதிக பணத்துக்காக வேறு இடங்களில் சென்று வேலை செய்து வந்த 8 இலங்கை பணிப்பெண்கள் குவைத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வேறு இடத்தில் பணிபுரிந்த 60 வயதுடைய இலங்கைப் பணிப்பெண்ணுக்கு 100 குவைத் தினார் வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. குவைத் நகரின் ஒரு வீட்டில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது அதில் பணிபுரிந்த 7 இலங்கை பணிப்பெண்களும் இந்திய, பிலிபைன்ஸ் நாட்டு பணிப்பெண்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொறாமையின் காரணமாக குறித்த பணிப்பெண்களை இலங்கைப் பணிப்பெண் ஒருவர் காட்டிக் கொடுத்து விட்டதாக இலங்கை பணிப்பெண் ஒருவர் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களை நாடு கடத்த நடவடிக்கை எடுக்கப்படும் என குவைத் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# அனைத்துக் கட்சிகளின் குழு ஒன்றை ஜெனீவாவிற்கு அனுப்பியிருக்க வேண்டும்



(கொழும்பு)

அனைத்துக் கட்சி குழு ஒன்றை ஜெனீவாவிற்கு அனுப்பி வைத்திருக்க வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

அதிக எண்ணிக்கையிலான அமைச்சர்களை மட்டும் அனுப்பி வைப்பதன் மூலம் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முடியாது.

நாட்டைப் பாதுகாக்கக் கூடிய அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகளும் அனுப்பி வைக்கப்பட்டிருக்க வேண்டும். ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிநிதிகளையும் ஜெனீவாவிற்கு அனுப்பி வைத்திருந்தால் அழுத்தங்களை முறியடிக்க இலகுவாக அமைந்திருக்கும்.

நாட்டைப் பாதுகாக்க நாம் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றோம். கட்சி முரண்பாடுகளைக் கருதாது நாட்டுக்கு எதிரான சவால்களை வெற்றி கொள்ள அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்பட முயற்சி செய்ய வேண்டுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# முல்லைத்தீவில் 51 வீத வாக்காளருக்கு தேசிய அடையாள அட்டைகள் இல்லை

## கபே அமைப்பு தகவல்

(கொழும்பு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு மற்றும் கரைதுறைப்பற்று ஆகிய பிரதேச சபைகளுக்கான தேர்தலில் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ள 51 வீத வாக்காளர்களுக்குத் தேசிய அடையாள அட்டை இல்லை என கபே அமைப்புத் தெரிவித்துள்ளது.

தேர்தல் கண்காணிப்பு குறித்து நேற்றுக் கொழும்பில் இடமபெற்ற செயலமர்வு ஒன்றில் கருத்துத் தெரிவித்த கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னகோன் இவ்வாறு தெரிவித்தார். புதுக்குடியிருப்பு மற்றும் கரைதுறைப்பற்று ஆகிய பிரதேச சபைகளுக்கான தேர்தலில் வாக்களிக்க 44682 வாக்களார்கள் தகுதி பெற்றுள்ளனர். அதில் 22857 வாக்காளர்களுக்குத் தேசிய அடையாள அட்டை இல்லை.

இவர்களில் 11259 வாக்காளர்கள் புதுக்குடியிருப்பு பிரதேச சபை பிரிவில் உள்ளவர்கள். இந்த வாக்காளர்களின் வாக்குரிமையை உறுதிப்படுத்த அனைவரும் முன்வர வேண்டும் என கீர்த்தி தென்னகோன் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, தேசிய அடையாள அட்டை இல்லாத வாக்காளர்களுக்குத் தற்காலிக அடையாள அட்டை பெற்றுக் கொடுக்கும் வேலைத் திட்டமொன்றை கபே இயக்கம் எதிர்வரும் மார்ச் முதலாம் திகதி தொடக்கம் முல்லைத்தீவில் செயற்படுத்தவுள்ளது.

தற்காலிக அடையாள அட்டைக்கான இலவசப் புகைப்படம் உள்ளிட்ட உதவிகளை கபே இயக்கம் செய்யவுள்ளது.

கிராம சேவையாளர்களிடம் இரு புகைப்படங்களை வழங்குவதன் மூலம் வாக்காளர்கள் தற்காலிக அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்க முடியும் என கபே இயக்கம் குறிப்பிட்டுள்ளது.

# நெல்லுக்கு நியாய விலை இல்லையேல் உண்ணாவிரதம்

(கொழும்பு)

தாம் அறுவடை செய்யும் நெல்லுக்கு நியாயமான விலை தராவிட்டால் சாகும்வரை உண்ணாவிரதம் மேற்கொள்ளப் போவதாக மின்னேரிய விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பான தீர்மானம் மின்னேரிய விவசாயிகள் சங்கத்தின் பிரதித் தலைவரான ஆனந்த ராஜபக்ஷவினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன் அடையாளமாக கடந்த வெள்ளிக்கிழமை ஹிங்குராகொடைப் பிரதேச சபையின் முன்னால் ஒருநாள் உண்ணாவிரதமாக முன்னெடுக்கப்பட்டிருந்தது.

நாட்டரிசியினை ஒரு கிலோ 38 ரூபாவாகவும், சம்பா அரிசியினை கிலோ 40 ரூபாவாகவும் கொள்வனவு செய்ய ஏற்பாடு செய்யக் கோரியுமே இந்த உணணாவிரதம் முன்னெடுக்கப்படுகிறது.

## 6138 பேருக்கு ஜனவரியில் டெங்கு

(கொழும்பு)

ஜனவரி மாதத்தில் மாத்திரம் டெங்கு நோயினால் 27 மரணங்கள் சம்பவித்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

ஜனவரி மாதத்தில் 6138 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இவர்களில் 50 சதவீதமானோர் மேல் மாகாணத்தைச் சேர்ந்தவர்களாவர்.

நுளம்பு பரவும் இடங்களை உடனடியாக அழிக்குமாறும் மூன்று நாட்களுக்கு மேல் காய்ச்சல் இருந்தால் வைத்தியரை நாடுமாறும் சுகாதார அமைச்சு பொது மக்களை அறிவுறுத்தியுள்ளது.

# மேற்குலக விருப்பத்திற்கமைய அரசாங்கத்தை அமைக்க முடியாது

## சட்டத்தரணி குணசேகர

(கொழும்பு)

மேற்குலக நாடுகளின் விருப்பத்திற்கு அமைய அரசாங்கத்தை அமைக்க முடியாது என சிரேஷ்ட சட்டத்தரணி எஸ்.எல்.குணசேகர தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தைக் கவிழ்க்க பல தரப்பட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றுது. இந்தநிலையில், வெறுமனே போராட்டங்களை நடத்தாது மேற்குலக நாடுகளின் நோக்கத்தை முறியடிக்க வேண்டும்.

இந்தப் பிரச்சினையானது அரசாங்கத்தினதோ அல்லது ஆளும் கட்சியினதாகவோ கருத முடியாது. இந்த நாட்டின் ஒரு சிலருக்கு கிறீன் அட்டைகள் காணப்படுகின்றன. எனவே நாட்டில் என்ன நடந்தாலும் அவர்கள் அமெரிக்காவில் சென்று வாழ்வார்கள் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# கலாபூஷண விருது பெற்றோருக்கு கோண்டாவிலில் பாராட்டு நிகழ்வு



(கோண்டாவில்)

யாழ்.மாவட்டத்தில் கோண்டாவில் பகுதியில் 2011 ஆம் ஆண்டிற்கான கலாபூஷண விருதைப் பெற்றுக்கொண்ட மூவருக்கு ஒரே மேடையில் பாராட்டு விழா நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

கோண்டாவில் மேற்கு வேத பாராயண சனசமூக நிலைய கலாசார மண்டபத்தில் நிலையத் தலைவர் கே.கே.அருண்வேல் தலைமையில் பி.ப.3.30 மணியளவில் கோண்டாவில் சந்திரசேகரப் பிள்ளையார் ஆலயத்தில் விசேட பூசையைத் தொடர்ந்து விழா நாயகர்கள் குடும்ப சகிதம் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டு பாராட்டு விழா நடைபெற்றது.

விருந்தினர்களின் பாராட்டு உரைகளைத் தொடர்ந்து சிற்பத் துறைக்காக சி.நாகராசா, ஊடகத்துறைக்காக கலாபூஷணம் விருதுபெற்ற செ.நடராசா, இசைத்துறையில் கலாபூஷணம் விருதுபெற்றுக் கொண்ட வி.சிவஞானசேகரம் ஏற்புரையை வழங்கினர். நிலைய உப செயலாளர் எஸ்.விஸ்வநாதன் நன்றியுரை வழங்கினார்.

(112)

# சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்தியிருந்தால் ஜெனீவா நெருக்கடி ஏற்பட்டிருக்காது



(கொழும்பு)

**அரசாங்கத்தின் நடவடிக்கைகள் காரணமாகவே இலங்கைக்கு எதிராக மனித உரிமை குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படுவதாக மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.**

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க இவ்வாறு தெரிவித்தார்.

யுத்தத்தின் பின்னர் அரசாங்கம் வடக்கு மக்களின் சிவில் நிர்வாகத்தை உறுதிப்படுத்தத் தவறிவிட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார். நாட்டில் ஜனநாயகத்தை உறுதி செய்வதைத் விடுத்து ஜனநாயக விரோதச் செயற்பாடுகளில் அரசாங்கம் ஈடுபட்டிருக்கிறது.

வடக்கு மக்களின் பிரச்சினைகளை தீர்க்க அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

## இருவருக்கு மரண தண்டனை

(கொழும்பு)

மாத்தளை, ஹரஸ்கம வீதியில் கடந்த 2001ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் இடம்பெற்ற கொலையொன்றில் ஈடுபட்டதாகச் சந்தேகிக்கப்படும் இருவருக்கு கண்டி மேல் நீதிமன்றம் மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

ராஜாவென அழைக்கப்படும் பி.ஜி.கருணாரட்ன, பி.ஆரியரட்ன ஆகிய இருவருக்குமே கண்டி மேல் நீதிமன்ற நீதிபதி எம்.சி.புஷ்பமாலி மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

இந்தக் கொலை தொடர்பான வழக்கு விசாரணைக்காக 6 சாட்சியங்கள் அழைக்கப்பட்டனர். மண்டையோடு நொறுங்கிய தன் காரணமாக மூளை சேதமடைந்ததாகவும் உடம்பில் 8 காயங்கள் காணப்பட்டதாகவும் சட்ட மருத்துவ அதிகாரி சஞ்ஜீவ இலநாயக்க நீதிமன்றத்தில் சமர்ப்பித்திருந்த வைத்தியப் பரிசோதனை அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார்.

இவர்களுக்குத் தூக்குத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்த நீதிபதி, இவர்களைத் தூக்கிலிடுவதற்கான திகதி ஜனாதிபதியினால் அறிவிக்கப்படும் வரை இவர்கள் போகம்பரை சிறைச்சாலையில் இருக்க வேண்டுமெனவும் உத்தரவிட்டார்.

# ஆலய உணவு ஒவ்வாமை 28 பேர் ஆஸ்பத்திரியில்

(கொழும்பு)

உணவு ஒவ்வாமை காரணமாக பதுளை - பசறைப் பகுதியில் 26 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பசறை-டைனாவத்தை ஆலயத்தில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற பூஜையின் பின் வழங்கப்பட்ட உணவை உட்கொண்டவர்களே இவ்வாறு ஒவ்வாமை காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்களில் கைக் குழந்தை ஒன்றும் அடங்குகிறது.

சிகிச்சைப் பெற்று வருவோரின் நிலை கவலைக்கிடம் இல்லை என பதுளை - பசறை வைத்தியசாலையின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

# மாணிக்கக் கல் அகழச் சென்ற 11 பேர் கதிர்காமத்தில் கைது

(கொழும்பு)

கதிர்காமம் - தம்மென்னாவ பகுதியில் மாணிக்கக் கல் அகழ்வில் ஈடுபட்ட 11 பேரைக் கைது செய்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

குறித்த நபர்கள் வெளி இடத்தில் இருந்து வந்த நபர்கள் வழங்கிய தகவலை அடுத்து இவர்கள் கைது செய்யப்பட்டனர். இவர்கள் பயணித்த முச்சக்கர வண்டி, டிரைக்டர் உள்ளிட்ட வாகனங்கள் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

கதிர்காமம் - தம்மென்னாவப் பிரதேசத்தில் புதிய இடத்தில் மாணிக்கக் கல் வளம் காணப்படுவதாகக் கூறப்படும் இடத்திற்கு வெளி நபர்கள் செல்லத் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் திஸ்ஸமகாராம நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளனர்.

# கண்டி மாநகர சபையில் கறுப்புப்பட்டி போராட்டம்

(கொழும்பு)

எரிபொருள் விலையேற்றத்தைக் கண்டித்து கண்டி மாநகர சபை ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் நேற்றுக் கறுப்புப் பட்டி அணிந்து சபை நடவடிக்கைகளில் பங்குபற்றினர்.

ஜெனீவாவில் இலங்கைக்கு எதிராக மனித உரிமை மீறல் பிரேரணை முன்வைக்கப்படுகிறன்மைக்கு அரசாங்கமே பொறுப்புக் கூற வேண்டும் என கண்டி மாநகர எதிர்க்கட்சித் தலைவர் நெரஞ்சன விஜேரத்ன குறிப்பிட்டுள்ளார்.

நாட்டுக்கு எதிரான சர்வதேச தலையீடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் அதேவேளை, அரசாங்கத்தின் செயற்திறன் இன்மைக்கும் எதிர்ப்புத் தெரிவிப்பதாக அவர் கூறியுள்ளார்.

# தருஸ்மன் அறிக்கை மீளப்பெற வேண்டும் வாசுதேவ நாணயக்கார கோரிக்கை

(கொழும்பு)

ஐக்கிய நாடுகளின் நிபுணர் குழு அறிக்கை வாபஸ் பெற்றுக் கொள்ளப்படவேண்டுமென அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

அண்மையில் அரசாங்கப் புள்ளி விபரத் திணைக்களம் இறுதிக் கட்ட யுத்தத்தின் போது ஏற்பட்ட உயிர்ச்சேத விபரங்களை வெளியிட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் நிபுணர் குழு அறிககையின் புள்ளி விபரங்களுக்கும், இலங்கைப் புள்ளி விபரத் திணைக்கள புள்ளி விபரங்களுக்கும் இடையில் பாரிய வித்தியாசம் காணப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

நிபுணர் குழு அறிக்கை, எடு கோள்கள் மற்றும் மதிப்பீடுகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது எனவும், இந்தத் தகவல்கள் உண்மைககுப் புறம்பானவை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.



இறுதிக் கட்ட யுத்தத்தின் போது 8000 பேர் வரையில் உயிரிழந்துள்ளதாக இலங்கைப் புள்ளி விபரத் திணைக்களம் அறிவித்துள்ளது. இறுதிக் கட்ட யுத்தத்தின் போது 40000 பொதுமக்கள் கொல்லப்பட்டதாக ஐக்கிய நாடுகளின் நிபுண்ர் குழு அறிக்கையில் தெரிவிக்கப்படடிருந்தது.



எரிபொருள் உள்ளிட்ட இதர பொருட்களின் விலை உயர்வைக் கண்டித்து மலையகத்தின் சில பகுதிகளில் ஆங்காங்கே ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்படுகின்றன. இதன் ஒரு கட்டமாக ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் ஏற்பாடு செய்திருந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் அதன் பொதுச் செயலாளர் முரளி ரகுநாதன் தலைமையில் நேற்று முன்தினம் மஸ்கெலியாவில் இடம்பெற்றது.

# இந்திய வீட்டுத்திட்டம் பூநகரியில் விரைவில் கையளிப்பு

(முழங்காவில்)

இந்திய வீடமைப்புத் திட்டத்தில் பூநகரிப் பிரதேச செயலர் பிரிவில் மன்னார் வீதியில் தெஸ்கரை கிராமத்தில் முதலாம் கட்டமாக அமைக்கப்பட்ட வ்டுகளும் விரைவில் உரியவர்களுக்கு கையளிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வீட்டுவேலைகள் இறுதிக் கட்ட நிலையில் உள்ளதாக பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

சொந்தக்காணி இல்லாதவர்களுக்கே அரச காணியில் இவ்வீடுகள் அமைக்கப்பட்டு வருகிறது. வீட்டுச் சொந்தக்காரர்கள் வீட்டுக்குரிய வேலிகளை அமைப்பதிலும் பயிர் வகைகளை நடுவதிலும் அக்கறை கெண்டு செயற்பட்டு வருகிறார்கள். (112)

# ஜனாதிபதியின் தலைமைத்துவத்தை களங்கப்படுத்த அன்னிய நாடுகள் முயற்சி

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராகச் சமர்ப்பிக்கப்படவுள்ள தீர்மானத்திற்கு எதிராக வவுனியாவில் நேற்றுக் காலை 9.30 மணிக்கு ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

வவுனியா கண்டி வீதியில் மைந்துள்ள தக்சினாராமய விகாரையில் ஆரம்பித்த ஊர்வலம் நகர்வழியூடாக பஸார் வீதியை அடைந்து இலுப்பையடியை அடைந்து மணிக்கூட்டுக் கோபுரச்சந்தியில் முடிவடைந்திருந்தது.

இதன்போது கருத்துத் தெரிவித்த வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் உனைஸ் பாருக்,

இந்த நாட்டில் ஏற்பட்டிருந்த யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்த பெருமை இந்த நாட்டில் ஆட்சி புரிந்த எந்த ஜனாதிபதியையும் விட மகிந்த ராஜபக்ஷவுக்கும் அவரது அரசாங்கத்திற்கும் உரியதாக இருக்கின்றது.

இந்நிலையில் எமது மக்களுக்கு நிம்மதியையும் சந்தோசத்தையும் சமாதானத்தையும் ஏற்படுத்தித் தந்த தலைவருக்கு அவரது தலைமைத்துவத்தைக் களங்கப்படுத்துவதற்கென அன்னிய நாடுகள் சில இன்று ஒன்று திரண்டு நிற்கின்றன.

ஆனால் நாம் இலங்கையர் என்ற அடிப்படையில் சமாதானத்தை ஏற்படுத்தித் தந்த ஜனாதிபதிக்கு நாங்கள் அவரது ஆட்சியை நீடித்துக் கொள்வதற்கும் நாட்டை அபிவிருத்தி செய்வதற்கும் நாம் ஒத்துழைப்பு வழங்கும் முகமாக வன்னி மாவட்ட மக்கள் அனைவரும் ஒன்று திரண்டு எம்மை உற்சாகமூட்டி எம்மையும் அழைதது ஒரு சமாதான ஊர்வலத்தை ஏற்பாடு செய்துள்ளனர் எனத் தெரிவித்தார்.

இதன்போது ஆர்ப்பாட்டக் காரர்களால் அமெரிக்காவுக்கு எதிரான கோஷங்களே எழுப்பப் பட்டிருந்ததுடன் எம்மை நிம்மதியாக வாழ விடு, எங்கள் நாட்டிற்குள் தலையிடாதே, 30 வருட கால பயங்கரவாதத்தை தோற்கடித்த ஜனாதிபதிக்கு ஒத்துழைப்பு வழங்குவோம், எங்கள் பிள்ளைகளை அச்சமின்றி கல்வி கற்க விடுங்கள், அமெரிக்கவே போர்க் குற்றவாளி போன்ற பதாதைகளையும் தாங்கியிருந்தனர். (125)

# கிழக்கிலும் மக்கள் ஆர்ப்பாட்டம்



(கொழும்பு)

மட்டக்களப்பு -அம்பாறை மாவடடங்களில் முஸ்லிம் பிரதேசங்களில் நேற்று அரசாங்கத்திற்கு ஆதரவு தெரிவித்து ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்ட போதிலும் தமிழ்ப் பகுதிகளில் ஆர்ப்பாட்டத்திற்கு வருமாறு விடுக்கப்பட்ட அழைப்பை தமிழ் மக்கள் புறக்கணித்துள்ளனர் என செய்திகள் தெரிவிக்கின்றன.

ஐ.நாவின் மனித உரிமை 19 ஆவது கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிராகச் சமர்ப்பிக்கப்படவுள்ள பிரேரணைக்கு எதிர்பபுத் தெரிவிக்கும் வகையில் நேற்று மட்டக்களப்பு மாவட்டத்தில் முஸ்லீம்கள் வாழும் காத்தான்குடி, ஏறாவூர், ஓட்ட மாவடி ஆகிய பகுதிகளில் ஆரப்பாட்டங்களும் பேரணிகளும் நடத்தப்பட்டன.

சிறிலங்கா சுதந்திரக்கட்சி உட்பட ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும் கட்சிகளால் இந்த ஆர்ப்பாட்டங்களும் பேரணிகளும் நடத்தப்பட்டன.

இந்த ஆர்ப்பாட்டங்களிலும் பேரணிகளிலும் கலந்து கொணடவர்கள் சிறிலங்கா அரசாங்கத்திற்கு தமது ஆதரவை வழஙகும் வகையிலும் மேற்குலக நாடுகளுக்கு எதிராகவும் எழுதப்பட்ட வாசக அட்டைகளை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பினார்கள்.

இந்த ஆர்ப்பாட்டங்களில் பாடசாலை மாணவர்கள் மற்றும் அரசாங்க ஊழியர்களும் கலந்து கொண்டனர்.

ஆர்ப்பாட்டப் பேரணிகள் நடைபெற்ற முஸ்லிம் பிரதேசங்களான காத்தான்குடி, ஏறாவூர், ஒட்டமாவடி ஆகிய பகுதிகளில் நண்பகல் வரை வழமை நிலை ஸ்தம்பிதமடைந்திருந்தது.

மட்டக்களப்பு நகரில் ஆளும் கட்சியைச் சேர்ந்த பிரதியமைச்சர் முரளிதரன், மாநகர மேயர் சிவகீதா பிரபாகரன், மங்களராமய விகாராதிபதி ஆகியோர் ஆர்ப்பாட்டங்களை நடத்தினர்.

# ஜே.வி.பி அரசைக் காப்பாற்றாது!

(முழங்காவில்)



இலங்கைக்கு எதிரான சர்வதேச அழுத்தங்களை இலங்கை அரசாங்கமே உருவாக்கிக் கொண்டுள்ளதாக, ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவை மாநாட்டில், அமெரிக்கா இலங்கைக்கு எதிரான பிரேரணையை முன்வைக்கவுள்ளமைக்கு, இலங்கை அரசாங்கத்தின் செயற்பாடுகளே காரணம் என

ஜே.வி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் கே.டீ. லால்காந்த இதனைத் தெரிவித்துள்ளார்.

அனைத்துப் பிரச்சினைகளையும், அரசாங்கமே தோற்றுவித்து விட்டு, தற்போது தம்மை காப்பாற்றுமாறு அழைப்பு விடுத்துள்ளதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார். எரிபொருள் விலை, அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை அதிகரித்துள்ள அரசாங்கம், தற்போது செய்வதறியாது இருப்பதாக அவர் குறிப்பிட்டுள் ளார்.

எனவே இது அரசாங்கத்துக்கு எதிரான பிரச்சினையே தவிர, நாட்டுக்கு எதிரான பிரச்சினை இல்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இந்த நிலையில் அரசாங்கத்தைக் காப்பாற்ற ஜே.வி.பி தயாராக இல்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# வவுனியா இ.போ. சபைக்கு போதிய பேருந்துகள் இல்லை


(முழங்காவில்)

இலங்கை போக்குவரத்துச் சபையின் வவுனியா சாலைக்கு போதிய பேருந்துகள் இன்மையால் போக்குவரத்துச் சேவையை மேற்கொள்வதில் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாக வவுனியா சாலையின் புதிய முகாமையாளரான செ. குணராஜா தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

சாலைக்கு போதிய பேருந்துகள் இன்மையால் உள்ளூர்ச் சேவைகளை சிறப்பாக மேற்கொள் முடியாதுள்ளது. அதனை பழைய நிலைமைக்கு கொண்டு செல்வதற்கு போதிய பேருந்துகள் தேவையாகவுள்ளது.

தற்போதுள்ள பேருந்துகளில் பல 15 வருடங்களுக்கு முற்பட்டதாகவுள்ளதால் அவற்றைத் திருத்துவதற்கு அதிகளவான நிதி செலவு செய்யப்பட்டு வருகின்றது. எனவே எமது சாலையின் சார்பில் 5 பேருந்துகளை லீஸிங் முறையில் பெறுவதற்கு மத்திய போக்குவரத்துச் சபையின் அனுமதி கிடைத்துள்ளமையினால் அவற்றைக் கொள்வனவு செய்வதற்கு முடிவெடுக்கப்பட்டு 1 இலட்சம் ரூபா வீதம் 5 பேருந்துகளுக்கு முற்பணம் செலுத்தப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார்.



அத்துடன் தீருக்கேதீஸ்வரம் ஆலயத்திற்கு சிவராத்திரி நிகழ்வுக்கு மேற்கொள்ளப்பட்டு விசேட சேவையின் மூலமாக சாலைக்கு 11 இலட்சம் ரூபா வருமானமாகக் கிடைக்கப் பெற்றுள்ளத்ாவும் அவர் தெரிவித்தார். (125)

# ஒலிபெருக்கி உபகரணத் தொகுதி பூநகரி - ம.விக்கு அன்பளிப்பு

(முழங்காவில்)


பூநகரி மகா வித்தியாலயத்தின் பாவனைக்காக ஒரு இலட்சத்து ஐம்பதினாயிரம் பெறுமதியான ஒலிபெருக்கி உபகரணத் தொகுதி வழங்கப்பட்டுள்ளது.

பூநகரி மகா வித்தியாலயத்தில் முன்னர் அதிபராகக் கடமையாற்றி தற்போது புலம் பெயர்ந்து வாழும் முந்நாள் அதிபரின் தலைமையில் இயங்கும் பூநகரி அபிவிருத்திக கழகத் தலைவர் கே.என். இராஜ குலசிங்கத்தால் நிவாரண ரீதியாக இப்பொருட்கள் வழங்கப்பட்டது.

இந்த உபகரணத் தொகுதியை பூநகரி மகா வித்தியாலய பழைய மாணவர்சங்கச் செயலாளர் ஊடாக பாடசாலையின் அதிபர் இ.பாலச்சந்திரன் பொறுப்பேற்றுக் கொண்டதுடன்,

சென்றவாரம் நடைபெற்ற இல்ல மெய்வல்லுநர் போட்டிககு எவ்வித பணச் செலவும் இல்லாமல் இத் தொகுதிப் பயன்படுத்தப்பட்டதாக பாடசாலை அதிபர் தெரிவித்தார். (112)

# உலகக் கிண்ண செஸ் போட்டியில் 7 வயது இலங்கை மாணவி



ருமேனியாவில் நடைபெறவுள்ள 7 வயதுக்கு கீழானோருக்கான உலகக் கிண்ண செஸ் போட்டியில் பங்கு பெறுவதற்காக அநுராதபுரம் சுவர்ணபாலிகா கல்லூரியில் கல்வி பெறும் சங்ஞனா சமாலி பத்திரண என்ற மாணவி தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவர் அண்மையில் அநுராதபுரத்தில் நடைபெற்ற மாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான செஸ் போட்டியிலும் மற்றும் அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான செஸ் போட்டியிலும் முதலாம் இடத்தைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

உலக பாடசாலை செஸ் போட்டியில் பங்கு பெறுவதற்கான செலவுகளாக 6 இலட்சம் ரூபா பணம் இலங்கை பாடசாலை செஸ் சங்கத்திற்கு கொடுக்க வேண்டி உள்ளது.

அதில் ஒரு இலட்சம் ரூபா பணத்தைப் பெற்றுக்கொடுப்பதற்காக இளைஞர் விவகார மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சர் டலஸ் அழக்பெரும தீர்மானித்து, அத் தொகையை வரையறுக்கப் பட்ட திறன்கள் அபிவிருத்தி நிதியத்தின் மூலம் ஒதுக்கியுள்ளார்.

இளைஞர் விவகார மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சர் டலஸ் அழகப் பெரும அதற்குரிய பணக் காசோலையை சிறுமிக்கு வழங்கினார்.

# நீர்வேலி றோ. க. பாடசாலை இல்ல மெய்வல்லுநர் போட்டி



(யாழ் நிருபர்)

நீர்வேலி றோ.க.த.க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அதிபர் சி.தர்மரத்தினம் தலைமையில் பாடசாலை மைதானத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் யாழ். கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் இ.குணநாதன் பிரதம விருந்தினராகவும் எச்.எஸ்.பி.சி. வங்கியின் யாழ்ப்பாணக் கிளை முகாமையாளர் சி.அரவிந்தன் சிறப்பு விருந்தினராகவும் பாடசாலையின் பழைய மாண வரும் சுஜி தளபாடத் தொழி லக உரிமையாளருமாகிய மு.தங்கராசா கௌரவ விருந் தினராகவும் கலந்து கொண்டனர. (10)

# டாக்டர் பிலிப் உதைபந்தாட்டம் பல்கலைக்கழக அணி சம்பியன்

உதைபந்தாட்ட லீக் அங்கத்துவக் கழகங்களுக்கிடையே லீக்கின் மறைந்த முன்னாள் தலைவர் டாக்டர் பிலிப் ஞாபகார்த்தமாக நடத்திய உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி நேற்றுமுன்தினம் பிற்பகல் 4.30 மணியளவில் உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.


மிக விறுவிறுப்பான இந்தப் போட்டியில் இரு அணிகளும் தலா 1 கோல் போட்டன. வெற்றியைத் தீர்மானிக்க சமனிலை தவிர்ப்பு உதை வழங்கப்பட்டது.

இதில் பல்கலைக்கழக அணி வெற்றி பெற்று கிண்ணத்தை தனதாக்கியது. நீண்ட காலத்தின் பின்னர் மிக அதிகமான பார்வையாளர்கள் போட்டியை காண வந்திருந்தனர்.

லீக்கின் தலைவர் திரு கிளிபேட் அன்ரனிபிள்ளை தனது உரையில், உதைபந்தாட்ட தரத்தில் நாம் அடைய வேண்டிய இலக்கு நீண்ட தொலைவில் உள்ளது.

அதிகமான போட்டிகள் நடத்தப்பட்டால் தான் தரமான வீரர்கள் தரமான அணிகள் உருவாக முடியும். அதற்கு பார்வையாளர்கள் போட்டிகளின் போது தேவையற்ற விதமாக போட்டிகளைக் குழப்பும் செயறபாடுகளில் ஈடுபடாது உதவ வேண்டும் என்றார்.

# நாவலர் வித்தியாலய மெய்வல்லுநர் போட்டி



(யாழ் நிருபர் )

கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் போட்டி கடந்த வெள்ளிக்கிழமை அதிபர் சாந்தினி வாகீசன் தலைமையில் சிறப்புற இடம்பெற்றது. பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநரின் செயலர் எல். இளங்கோவனும் துணைவியாரும் கலந்து கொண்டனர். சிறப்பு விருந்தினராக ஏ.எம்.ரி. வர்த்தக நிறுவன உரிமையாளர் ஏம்.எம். தனநாயகமும் கௌரவ விருந்தினராக உடற்கல்விப் பாட சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் என். ஸ்ரீமுருகதாஸ் காந்தனும் கலந்து கொண்டனர். (10)

# சதுரங்கப் போட்டியில் தியாகராசா ம.வி.க்கு 5 சம்பியன்கள்

(யாழ் நிருபர்)

தீவக வலயத்தில் கடந்த சனிக்கிழமை பாடசாலைகளிற்கிடையில் சதுரங்கப் போட்டி நடைபெற்றது. இதன்போது காரைநகர் கலாநிதி தியாகராஜா மத்திய மகாவித்தியாலயம் 5 இடங்களில் முதல் இடத்தைப் பெற்றுச் சாதனை படைத்துள்ளது.

13,15,19 ஆகிய வயதுக்குட் பட்ட பெண்கள் பிரிவுகளிலும், 15,19 ஆகிய வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவுகளிலுமாக 5 இடங்களில் முதல் இடத்தைப் பெற்றுள்ளது.

இவ்வாறு முதலிடத்தைப் பெற்றமையினால் எதிர்வரும் நாட்களில் நடைபெறவிருக்கும் மாவட்ட மட்ட போட்டிகளில் பங்குபற்ற தகுதிபெற்றுள்ளனர்.

மாணவர்களின் இந்தச் சாதனைகளிற்கு உந்து சக்தியாக இருந்தவர்கள் கல்லூரியின் உடற்கல்வி ஆசிரியை திருமதி சாமினி சிவராஜ், மற்றும் சதுரங்கம் பயிற்றிய தேசிய சம்பிய னான வித்தியா என்பது குறிப்பிடத்தக்கது. (10)



யாழ்ப்பாணம் திருக்குடும்ப கன்னியர் மட இல்ல மெய்வல்லுநர் போட்டி கடந்த 15ஆம் திகதி பகல் 1.30 மணிக்கு சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இதற்கு பிரதம விருந்தினர் சத்தியசீலன், சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்ட றூபசிங்கம், புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி அதிபர் மைக்கல் சவுந்தரநாயகம் ஆகியோர் வரவேற்று அழைத்துவரப்படுவதைக் காணலாம். (21)

# இல்லமெய்வல்லுநர் போட்டி

மருதங்கேணி கோட்ட மெய்வல்லுநர் போட்டி பங்குனி மாதம் 2 ஆம்திகதி வெள்ளிக்கிழமை மதியம் 1 மணிக்கு யா/ செம்பியன்பற்று அ.த.க பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

மருதங்கேணி கோட்டக் கல்விப் பணிப்பாளர் க.பொன்னையா தலைமையில் நடைபெறவுள்ள இந்தப்போட்டிக்கு பிரதம விருந்தினராக வடமாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், சிறப்பு விருந்தினராகவும் வடமராட்சி கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (109)

# சர்ச்சையை ஏற்படுத்திய சச்சினின் ஆட்டமிழப்பு

சிட்னி ஒருநாள் போட்டியில் சச்சினுக்கு ஆட்டமிழப்பு கொடுக்கப்பட்டதும், டேவிட் ஹசிக்கு ஆட்டமிழப்பு மறுக்கப்பட்டதும் பெரும் சர்ச்சையைக் கிளப்பியது.

நேற்றுமுன்தினம் இந்தியா துடுப் பெடுத்தாடிய போது 7 ஆவது ஓவரை பிரட் லீ வீசினார். கம் பர் ஒரு ஓட்டத்திற்காக சச்சினை அழைத்தார்.

மறுமுனையில் இருந்து சச்சின் ஓடி வரும் போது இடையில் புகுந்த பிரட் லீ தேவையில்லாமல் இடையூறு செய்தார்.

அதற்குள் வார்னர் பந்தை நேரடியாக த்ரோ செய்ய சச்சின் ஆட்டமிழந்தார். இதற்கு சச்சின் அதிருப்தி தெரிவித்தார். ஆனால் களத்தில் இருந்த நடுவர்கள் பில்லி பவுடன், சைமன் டாபெல் ஆட்டமிழந்தார் என அறிவித்தனர்.

முன்னதாக அவுஸ்ரேலியா துடுப்பெடுத்தாடிய போது, 24 ஆவது ஓவரை அஷ்வின் வீசினார்.

கடைசிப் பந்தில் ஒரு ஓட்டம் எடுக்க அழைத்தார் மாத்யூ வேட். மறுமுனையில் இருந்து டேவிட் ஹசி ஓடி வரும் போது, ரெய்னா பந்தை எறிந்தார்.

அதனை வலது கையால் தடுத்தார் ஹசி. ஆட்டமிழப்பில் இருந்து தப்பிக்க, பந்தை கையால் வேண்டுமென்றே தடுப்பது கிரிக்கட் விதிப்படி தவறு. இதையடுத்து தோனி மேல்முறையீடு செய்தார்.

நடுவர்கள் பில்லி பவுடன், சைமன் டாபெல் விவாதித்தனர். பின் மூன்றாவது நடுவர் சைமன் பிரையிடம் கேட்கப்பட்டது. தன் மீது பந்துபட்டு காயம் ஏற்படுவதை தவிர்க்கத் தான் ஹசி தடுத்தார். அவுட்டில் இருந்து தப்புவதற்காக அல்ல என்று கூறினார் மூன்றாவது நடுவர்.

இதனை ஏற்க மறுத்த தோனி, நடுவர் பவுடனிடம் நீண்ட நேரம் விவாதித்தார். அப்போது ஹசி 17 ஓட்டங்கள் தான் எடுத்திருந்தார். அதன் பின் அரைசதம் கடந்து, இந்திய அணிக்கு நெருக்கடி கொடுத்தார்.

இதுகுறித்து அணித்தலைவர் தோனி கூறுகையில், பிரட் லீயின் செயலில் நியாயமில்லை. இவர் சச்சினுக்கு இடையில் புகுந்து செல்ல வேண்டிய அவசியமில்லை. இதனால் கூடுதல் தூரம் ஓடி, ஆட்டமிழக்க நேர்ந்ததால், சச்சின் மிகுந்த ஏமாற்றமடைந்தார். சம்பவத்தை பார்த்த நடுவர் பில்லி பவுடன் ஏதாவது சொல்லியிருக்க வேண்டும்.

டேவிட் ஹசியை பொறுத்தவரை அவர் பக்கம் அதிர்ஷ்டம் இருந்தது. தனது முகத்தில் பந்து படுவதை தடுப்பது போல காட்டினார். ஆனால் அவரது கை மிகவும் நீண்டு இருந்தது. பந்தை தடுத்தது நன்கு தெரிந்தது. இவருக்கு ஆட்டமிழந்தார் என்று ஏன் அறிவிக்கவில்லை என்றார்.

# திராவிடன் என்ற உசுப்பேத்தலுக்கு தமிழர்கள் மத்தியில் கடும் எதிர்ப்பு

திராவிடன் என்ற போர்வையில் நூற்றாண்டு விழா தேவையா என தமிழர்கள் மத்தியில் கடும் எதிர்ப்பு எழுந்துள்ளது. இன்று முதல், திராவிட இயக்க நூற்றாண்டு விழா தொடங்குகிறது எனக் கூறி, அன்று சென்னையில், கருணாநிதி தலைமையில், கட்சி அலுவலகத்தில் விழா எடுப்பதாக தி.மு.க. அறிவித்துள்ளது. இதற்கு, பல்வேறு தமிழர் அமைப்புகளில் இருந்தும் கடும் எதிர்ப்பு எழுந்துள்ளது.

அவர்கள் எழுப்பும் கேள்விகள் இவை தான், தெலுங்கு, தமிழ், கன்னடம், மலையாளம், துளு ஆகிய மொழிகள் எல்லாம் திராவிட மொழிகள் அம்மொழி பேசும் மக்கள் திராவிட மக்கள் என்றால், தென்னகத்தில், மொழி வாரி மாநிலங்கள் பிரிவினையை ஏற்றது ஏன்? அப்படிப் பிரித்தது, மற்ற மொழி பேசும் மக்களின் விருப்பம் என்றால், தெலுங்கு நாடு, கன்னட நாடு, மலையாள நாடு என, மற்ற மாநிலங்கள் பெயர் சூடிக்கொள்ளாத நிலையில், மிச்சமிருந்த சென்னை மாகாணத்துக்கு திராவிட நாடு எனப் பெயர் சூட்டாமல், தமிழ் நாடு என தி.மு.க. பெயர் சூட்டியது ஏன்?

தமிழகத்தைப் போல், ஆந்திராவிலோ, கர்நாடகத்திலோ, கேரளாவிலோ திராவிடம் என்ற பெயரால், இயக்கங்கள் தலையெடுக்காத நிலையில், யாரும் தங்களை திராவிடர்கள் எனக் கூறிக்கொள்ளாத நிலையில், தி.க. வின் வழி வந்த கட்சிகள் மட்டும் இன்னும் திராவிடர் எனும் அடை மொழியை தூக்கி சுமப்பது ஏன்?

பல்லாயிரம் ஆண்டுகள் முந்தைய தமிழர் என்ற அடையாளத்தை மறந்து, கருணாநிதி கூற்றுப்படியே, நூற்றாண்டுகள் மட்டுமே கண்ட திராவிடர்கள் என்ற சொல்லடையை நாம் ஏற்றதால் தான், மொழி வாரி மாநிலங்கள் பிரிக்கப்பட்ட போது, உலகப் பிரசித்தி பெற்ற திருப்பதியை இழந்தோம். இன்று, தமிழகத்துக்கு பெரும் தலைவலியாக உருவாகியுள்ள, முல்லை - பெரியாறு பிரச்சினைக்குக் காரணமான, தேவி குளம், பீர்மேடு பகுதியை இழந்தோம். கர்நாடகாவில், தமிழர்கள் அதிகம் வசிக்கும், காவிரி வழித்தட பகுதிகளை இழந்தோம். திராவிடர் என்ற உணர்வை அதிகம் ஊட்டி விட்டதால், இலங்கையில் இலட்சக்கணக்கான தமிழர்களை இழந்தோம். இன்னும் என்ன இழக்க வேண்டும என இவர்கள், திராவிட நூற்றாண்டு விழா கொண்டாடுகின்றனர் என அவர்கள் கேள்வி எழுப்புகின்றனர். இது மட்டுமல்லாமல, நாம் திராவிடர்கள் என்றால, முல்லைப் பெரியாறுக்காகவும், காவிரி பிரச்சினைக்காகவும், பாலாற்று பிரச்சினைக்காகவும், அண்டை மாநிலங்களுடன் சண்டையிடத் தேவையே இல்லையே! அதன் மூலம் பயன் பெறுபவர்கள் நம் இனத்தைச் சேர்ந்தவர்கள் தானே என அமைதியாக இருந்து விடலாமே. ஓட்டுக்கு தேவை என்றால் உபயோகப் படுததும் ஊறுகாயா தமிழர்கள் என அவர்கள் வேதனைப்படுகின்றனர்.

இப்படி தமிழர்களுக்கு எதிரான, கற்பனையான திராவிடம் மீண்டும் தமிழ் அடையாளத்தை பூசி, தமிழர்களை ஏமாற்றிவிட புறப்பட்டு வருவதன் அடையாளமாகத்தான் திராவிட நூற்றாண்டை தி.மு.க. - தி.க. அறிவிக்க அதை ம.தி.மு.க. வரவேற்றுள்ளது எனப் பல்வேறு எதிர்க்கருத்துக்கள் எழுந்துள்ளன.

## தீவிரவாதிகள் மீது துப்பாக்கிச் சூடு

பாதுகாப்புப் படையினருக்கும், தீவிரவாதிகளுக்கும் இடையே நடந்த துப்பாக்கிச் சூட்டில், லஷ்கர்-இ-தொய்பா இயக்கத்தைச் சேர்ந்த இருவர் சுட்டுக்கொல்லப்பட்டனர். சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது, காஷ்மீர் கஷ்த்வார் மாவட்டத்தில், வனப்பகுதியில் தீவிரவாதிகள் மறைந்திருப்பதாக பாதுகாப்புப் படையினருக்கு தகவல கிடைத்தது. இதையடுத்து, படையினரும், பொலிஸாரும் அங்கு விரைந்தனர். வெகு அருகாமையில் பாதுகாப்புப் படையினரைப் பார்த்து விட்ட தீவிரவாதிகள், திடீரென அவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தினர்.

இதையடுத்து நடந்த சண்டையில், லஷ்கர்-இ-தொய்பா இயக்கத்தைச் சேர்ந்த இரு தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். பலியான தீவிரவாதிகளிடமிருந்த ஒரு ஏ.கே.ரக துப்பாக்கி, ஒரு கைத் துப்பாக்கியை படையினர் கைப் பற்றினர்.


பலியான இருவரும், அதே மாவட்டத்தைச் சேர்ந்த முகமது ரபீக் மற்றும் ஷானநவாஸ் காந்தே என்பது அறியப்பட்டது.

## இந்தியச் செய்திகள்

## சென்னையில் நடந்தது போலி "என்கவுன்டர்"



வங்கிகளில் கொள்ளையடிககபபட்ட சம்பவத்தில் ஐந்து பேர், பொலிஸாருக்கு இடையில் ஏற்பட்ட துப்பாக்கிச் சண்டையில், சுட்டுக் கொல்லப்பட்டனர். இது தொடர்பாக, குறிப்பிட்ட நபர்களை சுட்டுக்கொன்றது ஏன் என்பதற்கான விளக்கம் திருப்தி அளிக்கவில்லை என்பதால் போலி என்கவுண்டர் என்று கூற வேண்டியுள்ளது எனவும், இந்த விவகாரத்தில், நீதிமன்றம் சி.பி. சி.ஐ.டி. விசாரணையை விட சி.பி.ஐ. வசாரணை நடத்தப்பட வேண்டும் எனவும் மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர்.



*உத்திரப் பிரதேசத்தில் மாநிலம் நொய்டாவில் நடைபெற்ற சமஜ்வாடி கட்சி பேரணிக்கு முன்னர் தொண்டர்களை மகிழ்விக்கும் விதமாக நடன நிகழ்ச்சி நடைபெற்ற போது....*

## அமெரிக்காவின் மிக உயரிய விருது



தி.மு.க பொருளாளர் மு.க.ஸ்டாலினுக்கு அமெரிக்க நாட்டின் மிக உயரிய விருதான கென்டக்கி கர்னல்(Kentucky Colonel) விருது வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தி.மு.க தலைமைக் கழகம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, கென்டக்கி மாகாணத்தின் மிக உயரிய விருதான இந்த விருதை 1812 ஆம் ஆண்டு இந்த மாகாணத்தின் முதல் ஆளுநரான ஐசாக் ஷெல்பியால் தொடக்கி வைத்தார்.

சமுதாயப் பங்களிப்பு, நாட்டுக்கு செய்த சேவை மற்றும் சிறந்த சாதனைகளுக்காக இந்த விருது வழங்கப்படுகிறது. இந்த விருதுகளைப் பெற்றவர்கள் கென்டக்கி மாகாணத்தின் நல்லெண்ணத் தூதராகவும், உலகில் உள்ள மிகச் சிறந்த மனிதர்களுள் ஒருவராகவும் கௌரவிக்கப்படுவார்.

அமெரிக்க நாட்டின் முன்னாள் ஜனாதிபதிகள் லிங்டன் பி.ஜான்சன், ரொனால்ட் ரீகன், வின்ஸ்டன் சர்ச்சில், ஜோர்ஜ் புஷ், கிளிண்டன், குத்துச் சண்டை வீரர் முகமது அலி உள்ளிட்டோர் இந்த விருதைப் பெற்றுள்ளனர்.

விருது அளிக்கப்பட்டது தொடர்பாக கென்டக்கி மாகாண ஆளுநரின் செயலாளரும், உலக அமைதிக்கான தூதருமான ஜார்ஜ் ரீப் அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தியில், சேவையாற்றுபவர்களுக்கு வழிகாட்டும் விளக்காக மு.க.ஸ்டாலின் உள்ளார் என்றும், விருதைப் பெற்றதன் மூலமே விருதுக்கே ஸ்டாலின் பெருமை சேர்த்துள்ளதாக அவர் கூறியுள்ளார்.

## சீனாவை முந்துமாம் இந்தியா!



அறிவியல் துறையில் இந்தியா எதிர வரும் 2017 ஆம் ஆண்டில் சீனாவை முந்தி விடும் என்று பிரதமர் மன் மோகன் சிங் அமெரிகக பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார். கடந்த மாதம் அமெரிக்காவின் முன்னணி அறிவியல் இதழ் ஒன்றுக்கு பிரதமர் மன்மோகன்சிங் அளித்த பேட்டி தற்போது வெளியாகியுள்ளது.

அதில் மன்மோகன்சிங் கூறியதாவது, உலக அறிவியல் துறையில் இந்தியாவின் பங்களிப்பு கடந்த சில வருடங்களாக பின்னடைவில் தான் உள்ளன. எனினும் இந்தியா, தனது அறிவியல் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்காக 8 பில்லியன் டொலரை செலவிட உள்ளது. இதன மூலம் அறிவியல் துறையில் இந்தியா வேகமாக முன்னேறி வருகிறது. எதிர்வருகிற 2017 ஆம் ஆண்டிற்குள் இந்தியா, அறிவியல் துறையில் பல வழிகளில் சீனாவை முந்திவிடும் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

## துவக்காலச் சிந்தனை




### நாம் தவக்காலத்தில் நோன்பிருப்பதற்கான காரணங்கள்...

1. உடலையும் உயிரையும் ஆன்மாவையும் சுத்தப்படுத்தித் தூய்மையாக்க.
2. இறைவனது வழிகாட்டுதலையும் வெளிப்பாட்டையும் பெற்றுக்கொள்ள.
3. இறைவனது திருமுகத்தை நாடி அவரோடு இன்னும் நெருங்கிய உறவு கொள்ளும்படியாக.
4. இறைவனது குரலை நன்கு செவிமடுத்து அவரது திருவுளத்தை இன்னும் நன்றாக அறிந்து கொள்ளும்படியாக.
5. மனத் தெளிவைப்பெறுவதற்காக,
6. உடலும் ஆன்மாவும் வலுப்பெறுவதற்காக,
7. எதன்மீதும் உடல் கொள்ளும் இச்சையை முறியடிப்பதற்காக,
8. தூய்மையானதோர் உள்ளத்தையும் சரியான மனப்பான்மையையும் அடைந்து கொள்ளும் படியாக,
9. மாறுபாடான உணர்ச்சிகளிலிருந்து விடுபடும்படியாக,
10. குணமடையும் படியாக, உங்களால் செய்ய இயலாதவற்றைச் செய்வதற்கு வலுப்பெறும்படியாக,

அருட்தந்தை மா.றேஜிஸ் இராசநாயகம்

## இத்தாலிய கடற்படையினர் மீது வழக்கு



(றோம்)

இத்தாலியக் கடற்படைப் பாதுகாப்பு தரப்பினர்கள் மீது இந்தியச் சட்டத்தின் கீழ் வழக்கு தொடரப்படும் என இந்திய பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே. அந்தோனி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த 15 ஆம் திகதி குறித்த கேரள மீனவர்கள் கேரள கடற்பரப்பில் வைத்து கொல்லப்பட்டமை துரதிர்ஷ்டவசமானது, கண்டனத்துக்குரியது. இருவரை கொலை செய்த குற்றச்சாட்டில் தடுத்து வைக்கப் பட்டுள்ள குறித்த இத்தாலி பாதுகாப்புத் தரப்பினர் மீதான விசாரணைகள் சரியான முறையில் மேற்கொள்ளப்படுகின்றது. இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை கேளர அரசாங்கம் மிகவும் பலமான முறையில் மேற்கொண்டு வருவதாக இந்திய பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கேரள பொலிஸார் இத்தாலியக் கப்பலில், 14 மணிநேர சோதனை நடத்தி, நான்கு பெட்டிகளைக் கைப்பற்றினர். அவற்றில், இரு இயந்திரத் துப்பாக்கிகள் உட்பட, பல ஆயுதங்கள் இருந்தன. கைப்பற்றப் பட்ட ஆயுதங்களை, நீதிமன்றில் பொலிஸார் ஒப்படைத்தனர். இந்திய சட்டத்தின் பிரகாரம் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள இத்தாலிய கடறபடைப் பாதுகாப்பு தரப்பினருக்கு எதிராகக் கொலைக் குறறச்சாட்டு சுமத்தப்பட்டுளளது.

கடற்கொள்ளையர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் தாம் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியதாக இத்தாலிய பாதுகாப்புத் தரப்பினர் கூறியுள்ள நிலையில், இந்தச் சம்பவம் தொடர்பாக இரண்டு நாடுகளுக்கும் இடையில் முரண்பாடுகள் தோன்றியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# இஸ்ரேல் அமெரிக்காவுடன் பேச்சு; ஈரான் விவகாரத்திற்கு முன்னுரிமை



(டெல்அவில்)

அமெரிக்க ஜனாதிபதி பரக் ஒபாமாவுடன் நடைபெறவுள்ள பேச்சு வார்த்தைகளில், ஈரான் அணுத்திட்டங்கள் குறித்து முக்கிய கவனம் செலுத்தப்படவுள்ளதாக இஸ்ரேல் பிரதமர் கூறியுள்ளார்.

ஈரான் தொடர்ந்தும் அணுத்திட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாக அமைச்சரவையில் உரையாற்றும் போது பெஞ்ஜமின் நெட்டன்யா"ஹ குறிப்பிட்டுள்ளார். உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு அமெரிக்கா செல்லவுள்ள பெஞ்சமின் நெட்டன்யா"ஹ மார்ச் 14 ஆம் திகதி பராக் ஒபாமாவைச் சந்திக்கவுள்ளார். மேலும், கனேடியப் பிரதமர் ஸ்ரிவன் ஹாப்பருடன், ஈரானின் அணுத்திட்ட செயற்பாடுகள் குறித்து கலந்துரையாடவுள்ளதாக இஸ்ரேல் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

ஈரான் யூரேனியச் செறிவூட்டல் நடவடிக்கையை விஸ்தரித்து வருவது, சர்வதேச அணு சக்தி நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையின் மூலம் தெரியவருவதாகவும் அவர் கூறியுள்ளார். ஈரானின் அணுத்திட்ட நடவடிக்கைகள் காரணமாக அந்த நாட்டிற்கு எதிராகத் தடைகள் விதிக்கப்பட்டு வரும் நிலையில், அணுத்திட்டங்கள் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தலாம் என்ற அச்சம் அதிகரித்துள்ளது. எனினும், ஈரான் மீது தாக்குதல் நடத்தும் பட்சத்தில் பிராந்தியத்தில் பாரிய விளைவுகள் ஏற்படும் என அமெரிக்கா மற்றும் பிரித்தானியா ஆகிய நாடுகள் எச்சரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

உலகச் செய்திகள்

# உலகின் மிகப்பெரிய விமான நிலையம் சீனாவில் அமைக்கத் தீர்மானம்

(பீஜிங்)

அமெரிக்காவின் அட்லாண்டா சர்வதேச விமான நிலையத்தை தோற்கடிக்கும் வகையில், உலகின் மிகப் பெரிய விமான நிலையத்தை நிர்மாணிக்க சீனா முடிவு செய்துள்ளது.

அமெரிக்காவின் ஜார்ஜியா மாகாணத்தின் அட்லாண்டா நகரில் உள்ள ஹார்ட்ஸ்பீல்டு - ஜாக்சன் சர்வதேச விமரன நிலையம்தான், விமானப் போக்குவரத்தில் உலகின் மிகப் பெரிய விமான நிலையம் எனக் கருதப்படுகிறது.

இந்நிலையில், அதையும் தோற்கடிக்கும் வகையில் பீஜிங்கின் தென் கிழக்கில், உலகின் மிகப் பெரிய சர்வதேச பயணிகள் விமானப் போக்குவரத்து நிலையம் ஒன்றை அமைக்க சீனா முடிவு செய்துள்ளது. மொத்தம் 15 பில்லியன் டொலர் செலவில் அமையக் கூடிய இந்த நிலையம் பீஜிங்கிற்கும், ஹேபெய் மாகாணத்தின் லாங்பாங் நகருக்கும் இடையில் உள்ள பகுதியில் நிறுவப்படலாம் எனத் தெரிகிறது.

இந்த விமான நிலையத்தில், மொத்தம் ஒன்பது ஓடுபாதைகள் அமைக்கப்படும். ஆண்டுக்கு 13 கோடி பயணிகள் வந்து செல்வர். 55 இலட்சம் தொன் பொருட்கள் கையாளப்படும். அதேநேரம் இந்த புதிய விமான நிலையம், நெடுஞ்சாலைகள், சரக்குப் போக்குவரத்து சாலைகள், கிராமப்புறச் சாலைகள் ஆகியவற்றை இணைக்கும் மையமாகவும் திகழும். பீஜிங்கில் ஏற்கனவே, நான்யுவான் விமான நிலையம் மற்றும் பீஜிங் சர்வதேச விமான நிலையம் என இரண்டு நிலையங்கள் உள்ளன. இவற்றில் பீஜிங் விமான நிலையத்தில், ஆண்டுக்கு ஏழரைக் கோடி பயணிகள் வந்து செல்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# கனடா ரயில் விபத்தில் மூவர் பலி

(ஒன்டோரியா)

கனடாவின் ஒன்டாரியோவில் பாரிய ரயில் விபத்து ஒன்று இடம்பெற்றுள்ளது. இந்த விபத்தில் மூன்று பேர் உயிரிழந்துள்ளதுடன், மேலும் பலர் ரயிலின் சிதைவுகளுக்குள் சிக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. நயாகரா நீர்வீழ்ச்சிப் பகுதியில் இருந்து டொரண்டோவிற்குப் பயணித்த குறித்த ரயில், பேர்லிங்டன் பகுதியில் விபத்துக்குள்ளாகியுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.



சுமார் 75 பேர் குறித்த ரயிலில் பயணித் துள்ளதுடன், விபத்திற்கான காரணம் இதுவரை தெரியவரவில்லை என அந்த நாட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. சிதைவுகளுக்குள் சிக்கியிருக்கும் பயணிகளை மீட்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# உலகில் உயரம் குறைந்தவர்



(காத்மாண்டு)

உலகின் மிக குள்ளமான நபராக நேபாளத்தை சேர்ந்த சந்திர பகதூர் டாங்கி (வயது -72) என்பவர் கின்னஸ் புத்தகத்தில் இடம் பெற்றுள்ளார்.

பிலிப்பைன்சைச் சேர்ந்த ஜூன்ரி பலாவிங் என்பவர்தான் இதுவரை உலகின் மிக குள்ளமான மனிதராக அறிவிக்கப்பட்டவர். இவரின் உயரம் 59.9 செ.மீ. மட்டுமே.

இந்நிலையில், பலாவிங்கை விட 5.3 செ.மீ. உயரம் குறைவான அதாவது, 54.6 செ.மீ. உயரம் கொண்ட சந்திர பகதூர் கின்னஸ் நிறுவனத்தால் உலகின் மிக குள்ளமான மனிதராக அறிவிக்கப்பட்டுள்ளார். மொத்தம் 12 கிலோ எடையுள்ள சந்திர பகதூர் பற்றி நேபாள ஆய்வாளர்கள் சிலர், மூன்று வாரங்களுக்கு முன் வெளியுலகிற்கு தெரிவித்தனர். இதையடுத்து தான், அவரது பெயர் உலகளவில் பிரபலமாகியுள்ளது.

# செயற்கைக் கருத்தரிப்பு வேண்டாம் போப்பாண்டவர் கோரிக்கை

(லண்டன்)

செயற்கை முறையில் கரு உருவாக்குதலைத் தடை செய்ய வேண்டும் என்று போப்பாண்டவர் 16ஆம் பெனடிக்ட் கருத்து தெரிவித்துள்ளார்.

மலட்டுத்தன்மை குறித்து ரோமிலுள்ள வாடிகன் நகரில் மூன்ற நாள் மாநாடு நடைபெற்றது. இறுதி நாளான கடந்த சனிக்கிழமை நிகழ்ச்சியில் கலந்து கொண்ட போப்பாண்டவர் மேற்கண்ட கருத்தை தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது:

செயற்கை முறையில் கரு உருவாக்குதலைத் தடை செய்ய வேண்டும். தம்பதிகளின் இயற்கையான இணைவின் மூலமே மனித உயிர்கள் உருவாக வேண்டும்.

செயற்கை முறையில் கரு உருவாதல் வியாபாரமயமானது. மோசமான ஒன்று. படைப்புத் தொழிலை அது எடுத்துக் கொள்கிறது. இயற்கையான முறையிலான கருத்தரித்தலில் தம்பதிகளுக்கிடையே உயிரியல் ரீதியாக மட்டுமல்லாது, ஆன்மிக ரீதியாகவும் அன்பு பரிமாறிக் கொள்ளப்படும். அதே சமயம் மலட்டுத்தன்மை குறித்த ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்றார். வெளிச் சூழ்நிலையில் செயற்கை முறையில் கரு உருவாக்கப்பட்டு, பின்னர் கருப்பையில் கருவளர்க்கப்படும் முறைக்கு போப்பாண்டவர் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்.



# பதிவிறக்கப் பெட்டகம்

விளம்பரப் படங்கள் அவை விளம்பரம் செய்யும் பொருட்களை விற்பதில்லை. மாறாக அப்பொருட்களைத் தயாரிக்கும் நிறுவனங்களுக்கு அப்படங்களை பார்ப்பவர்களை விற்கிறது. – **நோம் சோம்ஸ்கி**

ஒலி, சொல், வாக்கியம், வாக்கியங்களால்ஏற்படும் கருத்துருவம் மனிதனை இயக்கும், உருவாக்கும் சக்தி படைத்தது. – **அல்துஸ்ஸா**

மற்றவர்கள் ஒவ்வொருவரைப் போல் நாமும் எதுவும் செய்யலாம். அல்லது எதுவும் செய்யாமல் இப்போது இருப்பது போல் இருக்கவும் செய்யலாம். அப்படியிருப்பதும் இன்னொன்றைச் செய்வது போன்ற செயலே. எதற்கும் அர்த்தமில்லை அல்லது ஒவ்வொன்றிற்கும் நாம் கொடுக்கும் அர்த்தம் மட்டுமே. – **அவஸ்தை நாவலில்**

ஒரு அறை முழுவதும் சாமான்கள் நிரம்பிக் கிடக்கின்றன. இப்பொழுது கொஞ்சம் இடம் தேவை. என்ன செய்கிறீர்கள்? வெளியிலிருந்து கொஞ்சம் இடம் கொண்டுவந்தா போடுகிறீர்கள்? இருக்கும் சாமான்களில் சிலவற்றைத் தூக்கி எறிந்து விடுங்கள். இடம் தானாக வந்துவிடும். – **ஓஷோ**

இருக்கும்போது குழந்தையின் உடல் காற்றில் குடைந்து எடுத்துக் கொண்ட இடம் குறைவுதான். ஆனால் அதன் மரணம் நமக்கு விட்டுச் செல்லும் காலியிடம் பலமடங்கு அதிகம். – **புதுமைப்பித்தன்**

நமக்கு உலகம் இன்பமாகக் காணவேண்டும் என்றால் எல்லாக் குழந்தைகளும் நம் குழந்தைகள் என்று நினைததால் போதும். – **சிவராம காரந்த**

பாவத்தின் நடுவே ஒழுக்க சிந்தனை ஏற்படுத்தும் உள்மனசசித்திரவதை தாங்கவொண்ணாதது. ஆம், பாவத்தைப் போலவே ஒழுக்க சிந்தனையும் மனிதனைச் சித்திரவதைக்குட்படுத்துவதுதான். – **ரிச்சர்ட் டாக்கின்ஸ**

சுற்றம் முழுவதையும் குற்றமே பார்த்தால், வீட்டிலிருந்து வெளியே கிளம்பும்போது கண்ணாடி முன் நின்றுதான் கையசைத்து விட்டு வரவேண்டும். – **ஜெயந்தன்**

என்னோடு ஒத்துப்போகின்றவர்கள் மட்டும் வாழ்கின்ற உலகில் என்னால் மூச்சுவிட முடியாது. அதனால்தான் எனக்குக் குருத்வம் வேண்டாம் என்கிற நினைப்பு எனக்கு எப்போதுமே உண்டு. சிஷ்யனாக இருக்க விரும்பி வருகிறவன் மூளை காலியாகத்தான் இருக்கும் என்பதும் என் நினைப்பு. – **க.நா.சு.**

மனத்தளவில் நம் முயற்சிகளில் நாம் திருப்தியடையாது இருப்பது நல்லது. அப்போதுதான் நம் இலக்குகளின் எல்லை விரிந்தபடி இருக்கும். – **தகழி**

ஏற்றத்தாழ்வு நினைக்காமல் இருப்பதில் உள்ள மகிழ்ச்சி அப்படி இருந்து பார்த்தால்தான் தெரியும். ஏற்றத்தாழ்வு நினைக்கும் மனிதர்கள் படும் பாடு மிகவும் பரிதாபகரமானது. – **அசோகமித்திரன்**

உன்னைப் பற்றி மற்றவர்கள் என்ன நினைக்க வேண்டும் என்று நீ விரும்புகிறாயோ, அப்படியே இருப்பதற்கு நீ முயற்சி செய்வதுதான் புகழுக்குச் செல்லும் மிகக் குறுகிய வழி. – **சோக்ரட்டீஸ்**

இந்த மண்ணிலே உள்ள ஆகப் பெரும்பான்மையானவர்கள் மனிதர்களுக்கே உரிய பகுத்தறிவைப் பற்றிய தன்னுணர்வே இல்லாமல், உண்ணுவதற்கும் உறங்குவதற்கும் உளறுவதற்கும் போதுமான பழக்கப்படுத்தப்பட்ட மரபறிவோடு வாழ்ந்து மடிகிறவர்கள். அவர்கள் மனிதர்களாய் அடையாளப்படுவது, "இது நியாயம் இது அநியாயம்" என்னும் பாகுபாடின்றி, பொருக்குகள் பிய்ந்து இரத்தம் கசிந்தாலும் அரிக்கும் சிரங்கை சொறிதல் சுகம் போலத் தாங்கள் கழித்த நாட்களை ஞாபகச் சுருளில் பதிவு செய்யத் தெரிந்தவர்கள் என்பதால்தான். விலங்குகள் பதிவதில்லை. – **கவிதாசரண்**

முன்பெல்லாம் அரசனின் கடமைகளில் ஒன்று விலங்குகளிடமிருந்து மக்களைப் பாதுகாப்பது; இப்பொழுதெல்லாம் அரசின் கடமைகளில் முக்கியமானது மக்களிடமிருந்து விலங்குகளைக் காப்பது. – **தியடோர் பாஸ்கரன்**

பெரும்பாலான மக்கள் உயிருடன் இருப்பதற்கு ஒரே காரணம் அவர்களைச் சுடுவது சட்டத்துக்குப் புறம்பானது என்பதாலேயே. – **ரே பிராட்பரி**

# முற்றிலும் புதிய அரசியல் வழிமுறைக்கு தமிழ் பேசும் தரப்பினர் செல்ல வேண்டும்

> முற்றிலும் புதிய அரசியல் வழிமுறைக்கும் அரசியற் சிந்தனைக்கும் தமிழ் பேசும் தரப்பினர் செல்ல வேண்டும். இது படிப்பினைகளின் காலம். மீள் பரிசீலனைகளின் காலம். கடந்த கால அரசியற் பாதைகளிலும் பயணங்களிலும் செயற்பாடுகளிலும் நோக்கிலும் சிந்தனையிலும் அனுபவங்களிலும் கற்றுக்கொண்ட அரசியல் அறிவை, வரலாற்றறிவைப் பயன்படுத்த வேண்டிய காலமும் சூழலும்.

காலங்கள் மாறிவிட்டன. உலக ஓட்டம் மாறிவிட்டது. அரசியற் போக்குகளும் வாழ்க்கை அமைப்புகளும் எவ்வளவோ மாறியிருக்கின்றன. சிந்தனைகளும் நம்பிக்கைகளும் எண்ணங்களும் வெவ்வேறு அனுபவங்களையும் அறிவையும் பெற்றுள்ளன.

கடந்த நூற்றாண்டின் பிரதான அரசியற் போக்குகளாக இருந்த இடதுசாரி, வலதுசாரிய அரசியல், பனிப்போர் நிலைமைகள் எல்லாம் மாறிவிடடன. அதையொட்டிய அரசியல் பிரயோகங்கள் எல்லாம் வெளிறிப்போய் விட்டன.

ஆனால், இலங்கையின் இனப்பிரசசினை மட்டும் கொதித்துக் கொண்டேயிருக்கிறது. பேச்சுகள் நடக்கின்றன. நம்பிக்கையீனங்களின் மத்தியில், இழுபாடுகளின் மத்தியில், உடன்பாடின்மைகளின் மத்தியில் அமைதிக்கான - இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பேச்சுகள் நடக்கின்றன.

இந்தப் பேச்சுகள் வெற்றியடையுமா? நடக்கின்ற இந்தப் பேச்சுகளில் ஏதாவது அர்த்தம் உண்டா? இவை உண்மையானவையா? என்ற கேள்விகள் இன்று சராசரியான பொதுமக்களிடம் முக்கியமான கேள்வியாக எழுந்துள்ளன.

அப்படியானால், இதைவிட்டால் அடுத்த கட்டம் என்ன? இனித் திரும்பி ஆயுதப்போராட்டம் ஒன்றுக்குப் போக முடியுமா? அதற்கான சாத்தியங்கள் உண்டா? அப்படியிருந்தாலும் அது வெற்றியளிக்குமா? அல்லது பேச்சுவார்த்தையை விட்டு வெளியே வந்து அரசியற் போராட்டங்களை நடத்துவதா?

அப்படி நடத்துவதானால், அந்தப் போராட்டத்தை எவ்வாறு நடத்துவது? அது சாத்தியமா? அது வெற்றியளிக்குமா? அதற்கான ஆதரவை எப்படித் திரட்டுவது? அந்தப் போராட்டத்துக்கு பிராந்திய சக்தியாகிய இந்தியா மற்றும் சர்வதேச சமூகத்தின் ஆதரவுகள் எப்படியிருக்கும்?

இந்தக் கேள்விகள் எல்லாமே பதிலற்ற நிலையிற்தான் இருக்கின்றன. யாரும் இதற்குரிய பதில்களைக் கூறுவார்கள் என்று தோன்றவில்லை. ஆனால், பரபரப்பாக அரசியற் செய்திகள் தினமும் வெளியாகிக் கொண்டிருக்கின்றன. எந்த முன்னேற்றத்தையும் எட்டாத முயற்சிகளைப் பற்றிய செய்திகளாக அவை இருக்கின்றன என்பதை அரசியலாளர்களும் சிந்திக்கவில்லை. அறிஞர்களும் சிந்திப்பதாக இல்லை. ஊடகவியலாளர்களும் சிந்திப்பதாகத் தெரியவில்லை.

மனதிலே இருக்கின்ற ஆத்திரத்தையும் இயலாமையின் நிமித்தமாக எழுகின்ற ஆற்றாமையையும் கொட்டித் தீர்க்கும் விதமாக இலங்கை அரசையும் அதன் ஆட்சியாளரையும் சிங்கள அதிகார வர்க்கத்தையும் திட்டித் தீர்த்து விடுவதுடன் அரசியற் பணிகளின் முதற்பகுதி நிறைவடைகிறது.

அடுத்தபகுதியில் இந்தியா மற்றும் மேற்குலகு, ஐ.நா போன்றவற்றிடம் இலங்கை அரசைப்பற்றியும் தமிழ் மக்களுடைய நிலையைப் பற்றியும் முறையிடுவதுடன் மீதி அரசியற் பணிகள் நிறைவடைகின்றன.

ஆனால், இவை இரண்டினாலும் மட்டும் நிச்சயமாக தமிழ் பேசும் மக்களுடைய இனப்பிரச்சினையோ அரசியல் அதிகாரப்பகிர்வோ சாத்தியமாகிவிடாது. அவ்வாறு ஒரு சாத்தியபாடு கிட்டுமானால், இலங்கையில் அது எப்போதோ கிட்டியிருக்க வேணும். இலங்கைக்கு வெளியே இந்த மாதிரிப் பிரச்சினை உள்ள நாடுகளில் எப்போதோ எல்லாம் அவற்றின் பிரச்சினைகள் தீர்ந்திருக்கும்.

ஆனால், அப்படி எந்த அதிசயமோ அற்புதமோ எங்கும் நடந்ததாக இல்லை.


பதிலாக நிலைமைகள், உலக அரசியற் போக்கின் அசைவுகள், மக்களின் மனவுறுதியைக் கட்டமைத்தல், அவர்களுடைய வாழ்க்கையை இணைந்து நின்று மேம்படுத்திப் பாதுகாத்தல், மக்கள் தொடக்கம் எதிர்த் தரப்பின் நட்புச் சக்திகள் மற்றும் சர்வதேச சமூகங்கள் வரையான உரையாடல் போன்றவற்றை உன்னிப்பாக அவதானித்து அவற்றைச் செயற்படுத்தினாலே பேச்சுகளில் வெற்றியை ஏற்படுத்த முடியும். பிரச்சினைக்கான தீர்வினை எட்ட முடியும்.

ஆனால், இதெல்லாம் இலகுவான வழிமுறைகள் அல்ல. மிகக் கடினமான - கடுமையான உழைப்பைக் கோரும் வழிமுறைகளாகும். இதற்கு அந்த உழைப்பை வழங்கக் கூடிய மனநிலையும் ஆற்றலும் ஆளுமை மிக்க தலைமைத்துவமும் தேவை.

அது இலங்கைச் சிறுபான்மைச் சமூகத்தினரிடத்திலே உண்டா?

சிங்களத் தரப்பைக் குற்றம் சாட்டுகின்ற சிறுபான்மைத் தரப்பினரிடம் ஒரு பொது உடன்பாட்டைக் காணவோ எட்டவோ முடியாத நிலையே இன்னமும் உண்டு. தேர்தற்காலக் கூட்டுகள், சந்தர்ப்பத்துக்கேற்ற அணி உருவாக்கங்கள், தேவைக்கேற்ற சமரசங்கள் என்பதற்கு அப்பால், பொது நோக்கில், மக்களின் நலனை முதன்மைப் படுத்தி, அரசைப் பலவீனப்படுத்தும் நோக்கில் எவரும் ஒரு கட்டமைப்பை உருவாக்கத் தயாராக இல்லை.

கடந்த காலத்தில் உருவாக்கப்



பட்ட கூட்டுகள் கூட சிதைந்த நிலையிலேயே உள்ளன. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முன்னெடுத்த தமிழ்க் கட்சிகளின் அரங்கம் இன்று உறைநிலைக்குப் போய் விட்டது. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உடைந்து சிறு துண்டாகியுள்ளது. கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் அணி தனிக கட்சி அடையாளத்துடன் இன்று செயற்பட்டு வருகிறது.

மிஞ்சியிருக்கும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் ஈ.பி.ஆர்.எல்.எவ் அணிககும் இலங்கைத் தமிழரசுக் கட்சியினருக்குமிடையில் வெளிப்படையாகவே பலத்த இழுபறிகள் நடந்து கொண்டிருக்கின்றன.

ஆனால், எவரும் தனித்துப்போய் நின்று தாக்குப் பிடிக்க முடியாதென்ற நிலையில் இழுபட்டுக் கொண்டிருக்கிறார்களே தவிர, மற்றும்படி கொள்கையின்படியோ, செயலொன்றை ஆற்ற வேண்டும் என்ற தீர்மானத்தின் படியோ பிரச்சினைக்கான தீர்வினைக் கண்டடையவேண்டும் என்றோ, பொது உடன்பாட்டின் வழியாகச் சிறுபான்மைசமூகங்களைத் திரட்சியாக்கி, சிங்களத் தரப்பிலுள்ள நியாயவாதிகளை அணிப்படுத்த வேண்டும் என்றோ கருதவில்லை.

எனவேதான் எதிர்த்தரப்பான அரசுக்கும் சிங்கள இனவாதிகளுக்கும் இனப் பிரச்சினையை நீடித்துச் செல்ல முடிகிறது. பலவீனமான தரப்பாக சிறுபான்மையினர் இருக்கும் வரையில் அவர்களைக் கையாள்வது இலகு என்ற மனவுணர்வும் அனுபவமும் சிங்களத் தரப்புக்குத் தாராளமாகவே உண்டு. ஆகவேதான் அது புதிய புதிய அறிவிப்புகளை விடுத்துக் கொண்டிருக்கிறது.

இதன்படி அது தெரிவுக்குழு என்ற புதிய அறிவிப்பைச் செய்துள்ளது. இந்தத் தெரிவுக்குழுவில் பங்கேற்

**- கிருஷ்ணமூர்த்தி அரவிந்தன்**

பதில்லை என்று இதுவரையிற் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் சொல்லி வருகின்றனர். ஆனால், என்னதான் சொன்னாலும் இதைத் தீர்மானமாக மறுத்துரைத்து வெளியே வருவதற்கு கூட்டமைப்பினால் முடியாது.

கூட்டமைப்பு தெரிவுக்குழுவில் பங்கேற்பது தவிர்க்க முடியாது. அதில் பெரிய தப்பேதும் இல்லை என்று கூட்டமைப்பை ஆதரிக்கும் அரசியற் பத்தியாளர்கள் தொடர்ந்து நேரடியாகவும் மறைமுகமாகவும் வலியுறுத்தி வருகின்றனர். கூடவே எதிர்காலத்தில் மாகாணசபைத் தேர்தலை முன்வைத்தாலும் அதிலும் கூட்டமைப்புப் போட்டியிடலாம் என்பது இவர்களுடைய கருத்து.

ஆனால், தெரிவுக்குழுவில் இடம் பெறுவதும், மாகாணசபைத் தேர்தலில் பங்கேற்பதும் தற்கொலைக்கொப்பானது என்று இதை மறுத்து விமர்சிக்கும் தரப்பும் உண்டு.

என்னதான் இருந்தாலும் யதார்த்தம் என்பதற்கே எப்போதும் முதலுரிமை உண்டு. அதுவே எதையும் தீர்மானித்து விடுகிறது.

கூட்டமைப்புக்குள்கூட தெரிவுக்குழுவில் பங்கேற்பதா இல்லையா, மாகாணசபையில் போட்டியிடுவதா இல்லையா என்ற முடிவெடுக்கும் பிரச்சினை வந்தாலும் யாரும் முரண்பாடுகளின் வாயிலாக வெளியே போவதறகுத் தயாரில்லை. அப்படி வெளியே போனால் அது அரசியற் துறவாகி விடும் என்று அவர்களுக்குத் தெரியும்.

ஆக்வே இந்தப் பலவீனங்களை எல்லாம் அவதானித்திருக்கும் சிங்கள அதிகார வர்க்கம் நிச்சயமாக எத்தகைய விட்டுக்கொடுப்புக்கும் வராது. அப்படி வரவேண்டிய தேவையும் அதற்கில்லை.

ஆனால், பிராந்தியத்தின் அமைதி, சீனா போன்ற பிற சக்திகளின் தலையீட்டுக்கான வாய்ப்பு போன்ற வித்தியாசமான காரணங்களுக்காக சில வகையான முன்னெடுப்புகளின் நிமித்தமாக அமைதிப் பேச்சுகளில் சில மாற்றங்கள் ஏற்படலாம். முன்னேற்றங்கள் எட்டலாம்.

எனினும் இப்போதைக்கு அவை முயற்கொம்புகளே!

அப்படியானால் அடுத்தது என்ன? இதைத் தான் பலரும் கேட்கிறார்கள். ஏன் பேச்சுகளில் ஈடுபடுவோருக்கும் அடுத்தது என்ன என்று தெரியாது. என்றபடியாற்தான் அரசாங்கம் நெருக்கடிகளை ஏற்படுத்த, ஏற்படுத்த அதை முறியடிக்க முடியாமல் அதனுடைய வலையில் சிக்கிக் கொள்ள வேண்டியிருக்கிறது. குறைந்த பட்சம் ஒரு தீர்வு யோசனையைக் கூட முன்வைக்க முடியாமல் வாய்பாடுகள், பழைய பாடல்கள், தேய்ந்த குரல்களையே சனங்களுக்குப் பரிசளித்துக் கொள்ள வேண்டியேற்படுகிறது.

அவ்வாறெனில் சிறுபான்மைச் சமூகங்களின் அரசியற் தலைவிதி எவ்வாறு அமையப் போகிறது? இதுவே எளிய கேள்வி. இதுவே கடினமான கேள்வியும். இதுவே எல்லோருடைய கேள்வியும்.

முற்றிலும் புதிய அரசியல் வழிமுறைக்கும் அரசியற் சிந்தனைக்கும் தமிழ் பேசும் தரப்பினர் செல்ல வேண்டும். இது படிப்பினைகளின் காலம். மீள் பரிசீலனைகளின் காலம். புதியவற்றுக்காக முயற்சிக்கும் சூழல். கடந்த கால அரசியற் பாதைகளிலும் பயணங்களிலும் செயற்பாடுகளிலும் நோக்கிலும் சிந்தனையிலும் அனுபவங்களிலும் கற்றுக்கொண்ட அரசியல் அறிவை, வரலாற்றறிவைப் பயன்படுத்த வேண்டிய காலமும் சூழலும்.

இதைச் செய்வதே இன்றைய அரசியற் செயற்திட்டமாகும். இத்தகைய ஒரு நிகழ்ச்சித் திட்டத்தில் உலகத்திசைகளில் இருக்கும் செயற்பாட்டாளர்களும் தீர்வை விரும்புவோரும் நெருங்கி, ஒருங்கிணைந்து வரக்கூடிய வாய்ப்புகள் ஏற்படும்.

நிலைமைகளும் அவற்றைக் கையாளும் முறைகளுமே யாரையும் ஒருங்கிணைப்பன. எதையும் வெற்றியை நோக்கி நகர்த்துவன என்பதற்கு ஏராளம் அடையாளங்கள் வரலாற்றில் உண்டு.

ஆகவே இன்று இதைக் குறித்துச் சிந்திப்பதே இன்றைய -நாளைய அரசியலாகும். இதன் வெற்றியே கடந்த காலத் தோல்விகளையும் காயங்களையும் ஆற்றுப்படுத்தும்.

எந்தத் தோல்வியும் எத்தகைய பின்னடைவும் சிந்திக்கும் செயற்படும் தரப்பினருக்கு நிரந்தரமாக அமைவதில்லை.

நூற்றாண்டுத் துயரங்களும் நூற்றாண்டுத் தூரங்களும் கூரிய சிந்தனையில் எளிதாகக் கடக்கப்படும் என்பதை இதை விட எப்படி விளக்குவது?

# இலங்கை மீது அமெரிக்கா அதிருப்தி இராஜதந்திர மொழியில் எச்சரிக்கை

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராக கொண்டு வரப்படவுள்ள தீர்மானம் தொடர்பில் கொழும்பின் அணுகுமுறைகள் குறித்து அமெரிக்கா அதிருப்தி கொண்டுள்ளது

ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத் தொடரில் கொண்டு வரப்படவுள்ள இலங்கைக்கு எதிரான தீர்மானம் குறித்து அமெரிக்க இராஜாங்க அமைச்சர் ஹில்லரி கிளின்டன் இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸுக்கு கடந்த ஜனவரி மாதம் 25 ஆம் திகதி அனுப்பியிருந்த இரகசியக் கடிதத்தில் அதிகாரபூர்வமாக அறிவித்திருந்தார.

இக்கடிதத்தில் ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக் குழுவின் கூட்டத்தொடரில் கொண்டு வரப்படவுள்ள இலங்கைக்கு எதிரான தீர்மானத்துக்கு ஆதரவு வழங்கப் போவதாக ஹில்லரி கிளின்டன் தெரிவித்திருந்தார. இக்கடிதத்தின் முக்கியத்துவம் மற்றும் இரகசியத் தன்மை கருதி இலங்கைக்கான அமெரிக்காவின் பிரதித் தூதுவர் ஊடாக இக்கடிதம் வெளிவிவகார அமைச்சரிடம் நேரில கையளிக்கப்பட்டிருந்தது, இந் நிலையில், இந்த இரகசியக் கடிதம் கொழும்பு ஊடகங்களில் வெளியானமை குறித்து அமெரக்கா அதிருப்தி வெளியிட்டுள்ளது. அத்துடன், இக்கடிதத்தை இலங்கையின வெளிவிவகார அமைச்சே ஊடகங்களுக்கு வெளியிட்டதாக அமெரிக்கா குற்றம் சுமத்தியுள்ளது

அதேவேளை, பொறுப்புக் கூறுதல மற்றும் நல்லிணக்கம் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக வெளிவிவகார அமைச்சர் பீரிஸை மார்ச் மாத ஆரம்பத்தில் வொஷிங்டனுக்கு வருமாறும் ஹில்லரி கிளின்டன் இக்கடிதத்தில் அழைப்பு விடுத்திருந்தார.

இக்கடிதம் தொடர்பில் வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் இதுவரை பதில் எதனையும் அனுப்பவில்லை என்பதுடன், வொஷிங்டனுக்கு செல்வது குறித்தும் அவர் எந்த முடிவையும் இதுவரை எடுக்கவில்லை

இந்நிலையில், ஹில்லரி கிளின்டனின் அழைப்பை புறக்கணிக்கும் வகையிலேயே இலங்கையின நகர்வுகள் இருப்பதாக அமெரிக்கா கருதுகின்றது. வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் அடுத்த மாதம் அமெரிக்காவுக்கு பயணம் செய்யமாட்டார் என வெளிவிவகார அமைச்சு வட்டாரங்களை மேற்கோள்காட்டி கொழும்பு ஊடகம் ஒன்று ஏற்கெனவே தெரிவித்திருந்தது. அத்துடன், ஐக்கிய நாடுகள சபை மனிதவுரிமைகள் ஆணைக் குழுவின் கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் தொடர்பில் இடம்பெறும் அமெரிக்காவுக்கு எதிரான போராட்டங்களின் பின்னணியில் இலங்கை அரசாங்கம் இருப்பதும் அமெரிக்காவுக்கு கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது

இது தொடர்பில் இராஜதந்திர வழிமுறைகளின் ஊடாக இலங்கை அரசாங்கத்துக்கு அமெரிக்கா எச்சரிக்கை விடுத்துள்ளது. அத்துடன் இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகமும் இலங்கையில் உள்ள தமது பிரஜைகளை அவதானமாக இருக்குமாறு எச்சரிக்கை விடுத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## கூட்டமைப்பு எடுத்திருக்கு...

காரணம் என்று நாம் கூறிவரும் விமர்சனங்களை ஒரு நல்லெண்ண நோக்கோடு தவிர்ப்பதற்கும் நாம் தயாராக இருக்கின்றோம். போட்டி அரசியலோ அன்றி மாற்று அரசியலோ நாம் திட்டமிட்டு வரிந்து கட்டி எடுத்த தீர்மானம் அல்ல. அவ்வாறானதொரு சூழ் நிலைக்குள் நாம் தொடர்ந்தும்

இருப்பதை தவிர்ப்பது என்றால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் உட்பட சகல தமிழ் தலைமைகளும் நடைமுறை சார்ந்து சிந்தித்து செயற்பட முன்வரவேண்டும்.

நான் அரசாங்கத்தில் தமிழ்பேசும் மக்களின் சார்பாக அமைச்சராக அங்கம் வகிப்பதன் ஊடாக அரசியல் அதிகாரங்களை பெற்றிருப்பதால் மட்டுமே எமது மக்களுக்கு ஆற்றவேண்டிய அபிவிருத்தி மற்றும் அன்றாடப் பிரச்சினைகளுக்கான தீர்வுப் பணிகளையும் செய்து வருகின்றேன். இதேவேளை எமது மக்களுக்கான அரசியல் தீர்வு குறித்த பேச்சுககான ஒரு சுமுகமான அரசியல் தளத்தையும் உடைய விடாமல் பாதுகாத்து வருகின்றேன். இந்த கடமைகளை அரசியல் துணிச்சலோடு ஆற்றுவதற்கு வேறு எவரும் முன்வரப்போவதில்லை. அவ்வாறு வருமாறு நான் எவரையும் கட்டாயப்படுத்தவும் விரும்பவில்லை. இதை விடவும் எமக்கு பிரதானமானது நடைமுறைச்சாத்தியமான வழிமுறையில் அரசியலுரிமை பிரச்சினைக்கு தீர்வு காண்பது ஒன்றுதான். நாம் கூறும் நடைமுறைச்சாத்தியமான வழிமுறை என்பது அரசாங்கத்திற்கு வெளியில் இருந்தாவது அல்லது எதிர்க்கட்சி வரிசையில் இருந்தாவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அரசாங்கத்திற்கு நல்லெண்ண சமிஞ்ஞைகளைக் காட்ட முன்வரவேண்டும். இதன் ஊடாகவே நாம் முரண்பாடுகளை களைய முடியும். பகைமைகளை மறக்க முடியும். அதற்கு ஊடாக இணக்கமானதொரு வழிமுறையில் எமது மக்களின அரசியல் அபிலாசைகளை நிறைவேற்ற முடியும். இதைவிட இதற்கு மாற்று வழிகள் எதுவும் இல்லை என்பதே நடைமுறை யதார்த்தமாகும்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடர் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இன்று எடுத்திருக்கும் தீர்மானத்தில் ஒரு ஒளிக் கீற்று தெரிகிறது. முன்னேற்றம் தெரிகிறது. இது போன்ற தீர்மானங்களை தொடர்ந்தும் அவர்கள் எடுப்பார்கள் என நான் எதிர்பார்க்கின்றேன்.

இவ்வாறு தெரிவித்திருக்கும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா, சகல தமிழ் தலைமைகளும் உணர்ச்சி பூர்வமாக அன்றி உணர்வு பூர்வமான மதிநுட்பத்தோடும் நுண்ணறி வோடும்.

செயற்படுவதன் ஊடாகவே தமிழ்பேசும் மக்களை கௌரவ மானதொரு அரசியல் தீர்வு நோக்கி வழி நடத்தி செல்ல முடியும் என்றும் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

## ஜெனிவா செல்வதில்லை...

முன்பாக நீதி கேட்கவும், தமிழர்களின் உரிமைககான நிலைப்பாட்டை தெளிவாக சர்வதேசத்துக்கு எடுத்துச் சொல்லவும் காலம் கொடுத்திருக்கின்ற அருமையான சந்தர்ப்பத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தவறவிட்டுள்ளதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவருமான கஜேந்திரகுமார் பொன்னமபலம் கூறியிருந்தார்.

அத்துடன், ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத்தொடரில் தமிழ்த தேசியக் கூட்டமைப்பு கலந்துகொள்வதில்லை என கிற முடிவு சம்பந்தன் மற்றும் சுமந்திரனின் கருத்துக்களே தவிர, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கருத்தல்ல என கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்திருந்தார்.

இக்கூட்டத் தொடரில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேரடியாக பங்குபெறவேண்டும் என்பதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பெரும்பான்மையான நாடாளுமன்ற உறுப்பினர்களின் கருத்து என றும், ஆனால் அதற்கு மாறான முடிவெடுக்கப்பட்டிருப்பதில் தமக்கு உடன்பாடில்லை என்றும் அவர் பி.பி.சி தமிழோசைக்கு கூறியிருந்தார்.

அதேபோன்று, இம்முடிவு எடுக் கப்பட்டமைக்கு பின்னணியில் அழுத்தங்கள் எதுவும் இருந்தனவா என்பது தொடர்பில் தலைவர் சம்பந்தன் விளக்கம் அளிக்கவேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேந்திரனும் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்நிலையில், இவ்விவகாரம் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் கருத்துத் தெரிவிக்கையில்,

ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக குழுவின் கூட்டத்தொடரில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கலந்துகொள்வதில்லை என எடுக்கப்பட்ட முடிவு தனது தனிப்பட்ட முடிவல்ல. அது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முடிவு

இது குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் நாடு திரும்பியதும் விளக்கம் அளிககப்படும். ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக் குழுவின் கூட்டத்தொடர் குறித்து நாங்கள கடைபிடிக்கும் வழிமுறைகளை வெளிப்படையாகக் கூறமுடியாது

ஆனால் வெளிநாடுகளில் உள்ள எமது நேச நாடுகளுடன் உரையாடி எடுக்கவேண்டிய நடவடிககைகள் குறித்து ஆராய்ந்த பின்னரே, ஜெனிவா செல்லாதிருக்க முடிவு செய்தோம். ஐக்கிய நாடுகள சபை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத் தொட ரில் நாங்கள் கலந்து கொள்ளவில் லையே தவிர, எடுக்கவேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துள்ளோம்.

ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக குழுவின் கூட்டத்தொடரைப் புறக்கணிக்க வேண்டும் என சிறிலங்கா அரசாங்கத்தின் தரப்பில் இருந்து எவ்வித அழுத்தங்களும் எங்களுக்கு பிரயோகிககப்படவில்லை என இவ்வூடகத்திற்கு சம்பந்தன் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை தமிழ் தேசியக் கூட்டமைப்பு தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வராசா, அரியநேத்திரன், யோகேஸ்வரன் ஆகியோருடன் தொலைபேசியில தொடர்புகொண்டு சம்பந்தன் வெளியிட்ட அறிக்கை தொடர்பாகவும், ஜெனிவாவுக்கு செல்வதில்லை என எடுத்த முடிவு தொடர்பாகவும் எதிர்ப்பு தெரிவிக்க கூடாது என்றும், அப்படி எதிர்ப்பு தெரிவித்தால் அதன விளைவுகளை நீங்கள் சந்திப்பீர்கள் என்றும் அச்சுறுத்தியுள்ளார் என்று இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

# கழுத்தில் வெட்டுக்காயம் இளைஞனுக்கு தீவிர சிகிச்சை

(யாழ்ப்பாணம்)

மதுபோதையில் பனை வடலிக்குள் விழுந்து கழுத்து வெட்டப்பட்ட நிலையில் இளைஞர் ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். மண்கும்பான் பகுதியில் மதியம் 3.00 மணிக்கு இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. அதே இடத்தைச் சேர்ந்த ஐங்கரன் (வயது-28) என்ற இளைஞரே வேலணை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (எஸ்)

# “எத்தனங்கள்” நூல் வெளியீடு

சிற்பனை கீதா கணேஷின் “எத்தனங்கள்” சிறுகதை தொகுதி நூல் வெளியீடு எதிர்வரும் 6 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் வை.கோவர்த்தனன் தலைமையில் நடைபெறவுள்ளது. முதன்மை அதிதியாக மனோன்மணி சண்முகதாஸ் கலந்துகொள்வார்.

வரவேற்புரையைச் செல்வி தேவநாதா கணேசலிங்கமும், வாழ்த்துரையை யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் கி.விசாகரூபனும், வெளியீட்டுரையை எழுத்தாளர் தாட்சாயினியும், நயப்புரையை எழுத்தாளர் யோகேஸ்வரி சிவப்பிரகாசமும் நிகழ்த்தவுள்ளனர். (68)

# தென்கொரியாவில் தீ விபத்து இலங்கை தம்பதியினர் பலி

தென்கொரியாவின் கிம்போ நகரில் ஏற்பட்ட தீ விபத்தில் திருமணமான இலங்கை ஜோடியொன்று பலியாகியுள்ளதாக தென் கொரிய பொலிஸார் தெரிவித்துள்ளனர். இலங்கையின் ராகம பிரதேசத்தைச் சேர்ந்த கணவன் (வயது - 35) - மனைவி (வயது -29) ஆகியோர் உயிரிழந்துள்ளதாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

தீ ஏற்பட்ட கட்டடத்தில் இருந்து மேலும் சில இலங்கையர்கள் உயிர் தப்பியதாகத் தெரிவிக்கப்படும் நிலையில் தீ ஏற்பட்டமைக்கான காரணம் இன்னும் கண்டறியப்படவில்லை என தென் கொரிய பொலிஸார் குறிப்பிட்டனர்.

## இலங்கைக்கு எதிரான...

தூண்டாதே, பிரிக்காதே பிரிக்காதே எங்களைப் பிரிக்காதே போன்ற கோஷங்களை எழுப்பியவாறு ஆர்ப்பாட்டக்காரர்கள் அணி அணியாகச் சென்றனர். ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி யின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் மற்றும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் க.கமலேந்திரன் (கமல்) ஆகியோர் தலைமையில் இவ் ஆர்ப்பாட்டம நடைபெற்றது.

இவ் ஆர்ப்பாட்டத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் அங்கஜன் இராமநாதன், வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, தொழிற்சங்கங்கள், மாதர் அமைப்புக்கள் என்று பல்வேறு அமைப்புக்களின் தொண்டர்கள் கலந்துகொண்டு தமது எதிர்ப்பினையும் கண்டனத்தையும் தெரிவித்தனர். (எஸ்)

## ஆணைக்குழு பரிந்துரை...

அறிக்கை சுதந்திரமானதும் வெளிப்படையானதும் என அமைச்சர் சுட்டிக்காட்டினார். ஆனால் 20 வருட யுத்தம் தொடர்பில் தனிநபர்களின் கருத்துகளைக் கேட்டு ஐ.நா. நிபுணர் குழு அறிக்கை தயாரித்ததாக அவர் குறிப்பிட்டார். இலங்கையில் தேசிய ஒருமைப்பாட்டை ஏற்படுத்த தடுத்து வைக்கப்பட்டுள்ள சந்தேகநபர்கள், மீள்குடியேற்றம், முன்னாள் போராளிகள் விடுதலை, கண்ணி வெடி அகறறல், காணிப் பிரச்சினை உள்ளிட்டவற்றை தீர்க்கும் திட்டங்களை செயற்படுத்தத் தொடங்கிவிட்டது. எனவே இவற்றை மேலும் முனனெடுத்துச்செல்ல சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்பு இலங்கைக்குத தேவை என அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்தார்.

## யுத்தக்குற்றச் செயல்...

நாடுகள் மனித உரிமைப் பேரவை உதவிகளை வழங்க வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார். குற்றச் செயல்களுக்கு தண்டனை வழங்குதல் மற்றும் நல்லிணக்கத்தைஏற்படுத்தல் ஆகியன நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த மகிவும் அவசியமானவை என அவர்சுட்டிக் காட்டியுள்ளார். மேரி ரொபின்சன் மனித உரிமை மற்றும் சமாதானத்திற்கான முதிய உலகத்தலைவர்கள் அமைப்பில் அங்கம் வகிக்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

## பரபரப்பான சூழ்நிலையில்...

வெளிவிவகார மற்றும் பொதுநலவாய அமைச்சர் ஜெர்மி பிறவுன வலியுறுத்தினார். பிற்பகல் 2.50 மணியளவில் இலங்கை குழுவிற்குத் தலைமை தாங்கிச்சென்ற அமைச்சர் மகிந்த சமரசிங்க விசேட உரையாற்றினார். அவர் தனதுரையில், சர்வதேச மனித உரிமைச் சடடங்களைப் பாதுகாப்பதில் இலங்கை அர்ப்பணிப்புடன் செயற்படுவதாகவும், எனவே இலங்கைக்கு எதிரான பிரேரணை எதுவும் அவசியமற்றதெனவும் தெரிவித்தார்.

இவரின் உரையை அடுத்து அயர்லாந்து ஜனாதிபதி மேரிறொபினசனின் உரை இடம்பெற்றது.

இதேவேளை மனித உரிமை பேரவைக் கூட்டத்தொடரில் தீர்மானங்கள் எவையாவது முன்வைக்கப்படுமாக இருந்தால் அவற்றை எதிர்வரும் 15 ஆம் திகதி நண்பகல் ஒரு மணிக்குள் சமர்ப்பிக்குமாறு ஐ.நா. மனித உரிமைகள் பேரவை உறுப்பு நாடுகளைக் கேட்டுக் கொண்டுள்ளது. இதன்படி இலங்கைக்கு எதிராக ஏதாவது தீர்மானம் முன்வைக்கப்படுமாக இருந்தால் அந்தப் பிரேரணைக்கு எதிராக மார்ச் 23 ஆம் திகதி வாக்கெடுப்பிற்கு விடப்படும் எனவும் தெரிவிக்கப் படுகிறது.

# வலி. மேற்கு பிரதேச சபைக்கு எதிராக பொதுமக்கள் திரண்டு ஆர்ப்பாட்டம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் மேற்கு பிரதேச சபைக்கு எதிராக பொதுமக்கள் ஒன்றுதிரண்டு எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர்.

இப்பிரதேச சபையின் ஆளும கட்சி உறுப்பினர் ஒருவரை சபைக் கூட்டத்தின்போது சாதிப்பெயர் கூறியும் இழிவாகப் பேசியும் அவமதித்தமையைக் கண்டித்தே மேற்படி ஆர்ப்பாட்டம் இடம் பெற்றிருக்கிறது.

இம்மாதம் 22 ஆம் திகதி இடம பெற்ற பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்தின்போது பிரதேச சபையின் ஆளும் கட்சி உறுப்பினரான வீரசிங்கம் சிவகுமார் மீது இழிவான வார்த்தைப் பிரயோகம் மூலமாகவும், சாதிப்பெயர் கூறி அவமானப்படுத்தியதாகவும் இந்தச் செயலில் நேரடியாகச் சம்பந்தப்பட்டவரான ஆளும் கட்சி உறுப்பினரான கனகராசன் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் இல்லையேல் இச்சம்பவத்துக்காக மன்னிப்புக் கோரவேண்டும் என்றும் ஆர்ப்பாட்டக்காரர்கள் கோரிககைகள் முன்வைத்தனர்.

அராலிப் பகுதியைச் சேர்ந்த இரு குக்கிராமங்களைச் சேர்ந்த இளைஞர்களும் முதலியார் கோயிலடி கிராமத்தைச் சேர்ந்த இளைஞர்களும் இப் பிரதேச சபையின் பல தொழிலாளர்களும் இணைந்து இந்தப் போராட்டத்தை நடத்தியுள்ளனர்.

காலை 11.15 மணியளவில் ஆரம்பமாகிய இந்த ஆர்ப்பாட்டம் பலமணி நேரம் நீடித்தது. பதாகைகள் சுலோக அட்டைகள் தாங்கியவாறு சுமார் 50 இற்கும் மேற்பட்ட இளைஞர்கள் இதில் பங்குபற்றினர்.

நண்பகல் அளவில் பிரதேச சபைத் தலைவரும் ஏனைய உறுப்பினர்களும் ஆர்ப்பாட்டம் செய்தவர்களுடன் சமரசம் செய்ய முயற்சி செய்தனர். இதற்காக அவர்களுடன் பேச்சு நடத்தினர். ஆர்ப்பாட்டம் செய்தவர்கள் தமது கோரிக்கையில் மிகவும் உறுதியாக இருந்தனர். இதனால் இந்த முயற்சி தோல்விகண்டது.

தொடர்ந்து கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் அவசரமாக அவ்விடத்துக்கு விரைந்து வந்து சேர்ந்தார்.

அவர் ஆர்ப்பாட்டம் நடத்தியவர்களுடன் சமரசப் பேச்சுக்களில் ஈடுபட்டார். இதன்போது இரு தரப்புக்கும் இடையில் கடுமவாதப் பிரதிவாதங்கள் இடம் பெற்றன.

எனினும் பிரச்சினைக்கு தீர்வு எட்டப்படவில்லை. இதனால் ஆர்ப்பாட்டத்தை எதிர்வரும் 12 ஆம் திகதிவரை பிற்போடுவதற்கு சம்மதம் தெரிவிக்கப்பட்டதுடன், இதற்கிடையில் சம்பந்தப்பட்டவர் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் உறுதி மொழி வழங்கப்பட்டது.


மேற்படி ஆர்ப்பாட்டத்துக்கு முன்னரும் ஏற்கனவே ஒரு வார கால அவகாசம் வழங்கி முன்னறிவித்தல் கொடுக்கப்பட்ட பின்னரே நேற்றைய ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. மேற்குறித்த அவகாசத்தில் பிரதேச சபை நிர்வாகம் மேற்படி சம்பவம் குறித்து நேற்றுவரை எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இருந்துள்ளது.

இச்சம்பவத்துடன் சம்பந்தப்பட்ட உறுப்பினரின் மேற்படி காட்டுமிராண்டித்தனமான போக்கைக் கண்டுகொள்ளாமல் நீண்டகாலமாக பிரதேச சபை நிர்வாகம் அலட்சியமாக இருந்துள்ளது.

மேற்படி உறுப்பினர் சக உறுப்பினர்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கும் அளவுக்கு கடந்த காலத்தில் செயற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

# ஜனாதிபதிக்கு ஆதரவு தெரிவித்து கொழும்பில் ஆர்ப்பாட்டம்

## ஒபாமாவின் கொடும்பாவியும் எரிப்பு



(கொழும்பு)

ஜெனிவாவில் நேற்று ஆரம்பமாகியுள்ள ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத் தொடரில் இலங்கை தொடர்பாக கொண்டு வரப்படவிருக்கும் தீர்மானத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து கொழும்பு நகரில் நேற்று மாலை நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டப் பேரணியில் சுமார் 10,000 பேர் கலந்து கொண்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர்களான சம்பிக்க ரணவக்க, பந்துல குணவர்த்தன, ஏ.எச்.எம்.பௌசி, டிலான் பெரேரா, தினேஸ் குணவர்த்தன உட்பட ஆளும் கட்சி அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் என பெருந்தொகையானவர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்குகொண்டிருந்தனர்.

"உள்நாட்டு விவகாரங்களில் தலையிடாதே", "ஐ.தே.கட்சியே நாட்டைக் காட்டிக்கொடுக்காதே", "ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவே எமது தலைவர்", "டொலர்களுக்காக நாட்டுக்குத் துரோகம் செய்யாதீர்கள்" போன்ற கோஷங்கள் இங்கு முழங்கப்பட்டன.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பெரியளவிலான படங்களையும் இந்த ஆர்ப்பாட்டத்தில் காணமுடிந்தது. இந்த ஆர்ப்பாட்டத்தின் போது அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவின் கொடும்பாவி ஒன்றும் ஆர்ப்பாட்டக்காரர்களினால் எரிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு கோட்டை ரயில் நிலையம் முன்பாக இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தினால் கொழும்பு நகரின் போக்குவரத்து பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தது

# இறையாண்மை மீது அழுத்தம் கொழும்பு பேராயர் இல்லம் கண்டனம்



(கொழும்பு)

ஐ.நா. மனித உரிமை பேரவையில் இலங்கைக்கு எதிராக பிரேரணையொன்றை சமர்ப்பிப்பதற்கு அமெரிக்கா செயற்படுகின்றமையும், சில மேற்குலக நாடுகள் அதற்கு ஆதரவு தெரிவிக்கின்றமையும் நாட்டின் சுயாதீனம் மற்றும் இறையாண்மையின் மீது அநாவசிய அழுத்தத்தை ஏற்படுத்துவதாக கொழும்பு பேராயர் இல்லம் அறிவித்துள்ளது.

இதனை இலங்கை மக்களின் அறிவை கொச்சப்படுத்தும் செயலாக கருத முடியும் என பேராயர் தற்கால சம்பவங்கள் தொடர்பான ஆய்வு குழுவின் தலைவர் அருட் தந்தை சிறில் காமினி பெணான்டோ விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு வின் பரிந்துரைகள் மற்றும் பிரே ரணைகளை விரைவில் செயற்படுத்துவதே இத்தகைய அநாவசிய அழுத்தங்களுக்கான பதிலாக அமையும் என கொழும்பு பேராயர் பேரருட்திரு மல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை கருதுவதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கையை மேற்கொள்வதற்கு காலதாமதம் இன்றி நடவடிக்கை எடுக்குமாறு அரசாங் கத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ள பேராயர் இன, மத பேதமின்றி அதற்காக கைகோர்க்குமாறு இலங்கை மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

# ஐ.நா.விற்கு எதிராக செயற்பட சிறிய இலங்கையால் முடியாது

## கூறுகிறது ஐ.தே.க.

(கொழும்பு)

சிறிய நாடான இலங்கை ஐக்கிய நாடுகள் அமைப்புக்கு எதிராக செயற்பட முடியாது எனவும் அவ்வாறு எதிராக செயற்பட்ட லிபியாவின் கடாபிக்கு நேர்ந்த கதியை ராஜபக்ஷ அரசாங்கம் ஆழமாக சிந்தித்து பார்க்க வேண்டும் எனவும் ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளர் தயா கமகே தெரிவித்துள்ளார்.

வெளிநாடுகளிலுள்ள இலங்கையர்கள் ஒரு இலட்சம் பேரை ஐக்கிய தேசியக் கட்சியில் இணைத்துக் கொள்ளும் ஆரம்ப நிகழ்வு பிரான்சின் பரீஸ் நகரில் நடைபெற்ற போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபைக்கு எதிராக செயற்படும் ஈரானுக்கும் கடாபிக்கு நேர்ந்த கதி நேரக் கூடும். இந்தியா, அமெரிக்கா, மேற்குலக நாடுகள் இலங்கையின் நட்பு நாடுகளாகும். அவர்களை பகைத்துக் கொண்டு இலங்கையால் தனித்து வாழ முடியாது. இலங்கை சுதந்திரம் பெற்ற பின்னர், அமெரிக்கா இலங்கைக்கு இரண்டு பில்லியன் டொலர்களுக்கு மேல் உதவி வழங்கியுள்ளது. ஐரோப்பிய நாடுகளிடம் இருந்து கிடைப்பது



எமக்கு உதவிகள், அவற்றை நாம் திருப்பி கொடுக்க வேண்டியதில்லை.

சீனா வழங்குவது உதவியல்ல. அவற்றை நாம் பரம்பரை பரம்பரையாக திருப்பிச் செலுத்த வேண்டும். இதனால் அமெரிக்காவையோ, மேற்குலக நாடுகளையோ திட்டுவதில் அர்த்தமில்லை. நாம் பிரான்சுக்கு எதிராக செயற்பட்டால், இங்குள்ள இலங்கையர்கள் அனைவரையும் பிரான்ஸ் இங்கிருந்து வெளியேற்றிவிடும். இவை ராஜபக்ஷ அரசாங்கத்திற்கு தெரிவதில்லை. இலங்கை தொடர்பில் அரபு நாடுகள் அவ்வளவு மதிப்பளிக்கப்படுவதில்லை. அந்த நிலைமையை மாற்றியமைக்க வேண்டும் எனவும் தயா கமகே தெரிவித்துள்ளார்.

# இலங்கையின் வெற்றிக்கு ரஷ்ய ஆதரவு அவசியம்

## சட்டத்தரணி கோமின் தயாசிறி

(கொழும்பு)

இலங்கை தொடர்பாக ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் கொண்டுவரப்படவுள்ள பிரேரணைக்கு எதிராக ஆசிய நாடுகள் பல தமது வாக்கினைப் பதிவு செய்யும் என இலங்கையின் சட்ட வல்லுநர்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

எனினும் ஐரோப்பிய நாடுகள் பெரும்பாலும் இந்தப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்கலாம் என எதிர்பார்க்கப்படுவதாக அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

ரஷ்யாவின் ஆதரவு இலங்கையின் வெற்றியை உறுதிப்படுத்துவதாக அமையும் என சிரேஷ்ட சட்டத்தரணி கோமின் தயாசிறி குறிப்பிட்டுள்ளார்.

ஆசியா, ஆபிரிக்கா மற்றும் லத்தீன் அமெரிக்க பிராந்தியங்களைச் சேர்ந்த நாடுகள் பிரேரணை மீதான வாக்கெடுப்பில் கலந்துகொள்ளாதிருந்தால் அது இலங்கைக்கு பாதகமான சூழலை உருவாக்கும் என அவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

குறித்த நாடுகள் பிரேரணை மீதான வாக்கெடுப்பில் தமது வாக்குகளை பதிவு செய்யும் பட்சத்தில் இலங்கை எதிர்நோக்கும் அழுத்தங்கள் குறைவடையும்.

அமெரிக்காவின் அழுத்தங்கள் காரணமாக சில நாடுகள் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளாதிருப்பதற்கான சந்தர்ப்பம் உள்ளதாகவும் அத்தகைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டால் அது இலங்கைக்கு சிரமத்தை ஏற்படுத்தலாம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# இறையாண்மைக்காக உயிர்த்தியாகம்




இலங்கையின் இறையாண்மை மற்றும் தேசிய சுதந்திரத்திற்காக இலங்கையர்கள் உயிர்த்தியாகம் செய்யக்கூடத் தயார் என பிரதமர் டி.எம்.ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

உயிருக்கு முன்னதாக தாய் நாட்டைப் பாதுகாத்துக்கொள்வதே இலங்கையர்களுக்கு முக்கியமாக அமைந்துள்ளதென தெரிவிக்கும் பிரதமர் தேசிய சுதந்திரத்திற்காக இன, மத, கட்சி பேதங்களின்றி அனைவரும் முன்வர வேண்டும் என குறிப்பிட்டுள்ளார்.

ஜெனிவாவில் நேற்று ஆரம்பமான ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில், இலங்கைக்கு எதிராக சமர்ப்பிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படும் பிரேரணைக்கு எதிர்பை வெளிப்படுத்துவதற்காக கம்பளை நகரில் நேற்று முற்பகல் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்ட போதே பிரதமர் இவ்வாறு கூறியுள்ளார்.

சுயாதீன நாடான இலங்கையின் நடவடிக்கைகளில் தலையீடு செய்வதற்கு சில சக்திகள் முயற்சித்து வருவதாகவும் தாய் நாட்டின் சுதந்திரத்திற்கு உயிர்த்தியாகம் செய்யவும் தயார் எனவும் பிரதமர் டி.எம்.ஜயரத்ன மேலும் தெரிவித்துள்ளார்.

# சிறுவர் நீதிமன்ற அமர்வு

யாழ். சிறுவர் நீதிமன்ற செயற்பாடுகள் சம்பந்தப்பட்ட அமர்வு நேற்று மாலை 4.30 மணியளவில் குருநகர் சிறுவர் நீதிமன்றத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி ஜெ.விஸ்வநாதன், யாழ். நீதவான் நீதிமன்ற நீதிபதி மா.கணேசராஜா, யுனிசெப் வதிவிடப் பிரதிநிதி றிசாஹொசனினி ஆகியோர் கலந்துகொண்டனர். (137)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 பெப்ரவரி 28 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.